# உதயன்

32°C
தெளிவான வானிலை
காற்றுவீச்சு: தென்மேற்குக்காற்று 34 km/h
ஈரப்பதம்: 48%
காற்றமுத்தம்: 1008 hPa
வெளிச்சத் தெளிவு: மிக நன்று
சூரியோதயம்: 05:23
சூரியஸ்தமனம்: 18:04

24 பக்கங்கள்
யாழ். - 20/=
வன்னி - 20/=
கொழும்பு - 30/=

சுடர்: 29 கதிர்: 219 வள்ளுவர் ஆண்டு: 2045 ஆடி 19, வியாழன் 03.07.2014

stay connected with: uthayan.print uthayanprint Uthayan - A lively National Tamil Daily


## வெங்காய வெடி வெடித்ததால் குடும்பஸ்தர் சாவு


மன்னார், ஜூலை 3
மன்னார் தச்சனார்மருதமடுப் பகுதியில் விலங்குகளுக்காக வைக்கப்பட்டிருந்த வெங்காய வெடி வெடித்ததில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார். நேற்று நண்பகல் 12 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் அதே பகுதியைச் சேர்ந்த தோமஸ் - ஸ்ரீபன் (வயது-31) எனும் ஒரு குழந்தையின் தந்தையே உயிரிழந்துள்ளார்.

விலங்குகளுக்கு வைக்கப்படும் குறித்த வெடிகளை ஒன்றாகச் சேர்த்துக் கட்டியபோதே, அவற்றில் ஒன்று வீழ்ந்து வெடித்து இந்த அனர்த்தம் ஏற்பட்டுள்ளது.

அந்தச் சமயம் வீட்டில் ஒருவரும் இல்லாத நிலையில் பி.ப. 2.30 மணியளவிலேயே அவர் வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லப்பட்டார். ஆயினும் அதிக இரத்தப் போக்குக் காரணமாக சிகிச்சை பயனின்றி அவர் உயிரிழந்துள்ளார். ( மு-108, 106)


உள்ளே....
முஸ்லிம் மக்கள் மீது தாக்குதல்
பக்கம் - 07


## மனித எலும்புகள் மீட்பு



பளை இத்தாவில் பகுதியில் மனித எலும்பு எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அந்தப் பகுதியில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் மிதிவெடி அகற்றும் பணிகளின்போதே அவை கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இது தொடர்பில் பளை பொலிஸாருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டு, அவர்கள் சம்பவ இடத்துக்கு வந்து விசாரணைகளை மேற்கொண்டனர். அத்துடன், கிளிநொச்சி நீதவான், யாழ்.போதனா வைத்தியசாலை சட்ட வைத்திய அதிகாரி ஆகியோரும் சம்பவ இடத் துக்கு வந்திருந்தனர். தற்போது குறித்த எச்சங்கள், பளைப் பொலிஸாரால் எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. அத்துடன் அங்கு மேலதிக ஆய்வுகளும் மேற்கொள்ளப்படவுள்ளன. குறித்த பகுதியில் விடுதலைப் புலிகளின் காவலரண் முன்னர் காணப்பட்டது என்று பொலிஸாரால் கூறப்படுகின்றது. (ம-4,8,55,106)

# வெறுப்பூட்டலை உடன் நிறுத்துக

## ஐ.நா. நிபுணர்கள் மூவர் இலங்கையிடம் கோரிக்கை

கொழும்பு, ஜூலை 3
"சிறுபான்மை மதத்தவர்களுக்கு எதிராக வெறுப்பை உமிழும் பேச்சுக்களும், அவர்களுக்கு எதிரான தாக்குதல்களும் கிட்டத்தட்ட நாளாந்தம் இலங்கை முழுவதும், பௌத்த தீவிரவாத ஆயுதக் குழுக்களால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அவற்றை இலங்கை அரசு உடனடியாக தடுத்து நிறுத்த வேண்டும்"- இவ்வாறு இலங்கை அரசிடம் கோரிக்கை விடுத்துள்ள ஐக்கிய நாடுகள் சபையின் துறைசார் நிபுணர்கள் மூவரும், "குற்றவாளிகளை தண்டிக்காத போக்குக்கு உரமூட் டும் வகையில் செயற்படாது இருக்க வேண்டும்"- என்றும் வலியுறுத்தியுள்ளனர்.

ஐக்கிய நாடுகள் சபையின் மதச் சுதந்திர விசேட நிபுணர் பிலி வேர்ட், சிறுபான்மையினர் பிரச்சினை தொடர்பிலான விசேட நிபுணர் ரிட்டா இஷஜுக், நீதிக்குப் புறம்பான மற்றும் பலவந்தமான கூட்டுப் படுகொலைகளுக்கான விசேட நிபுணர் கிறிஸ்ரோ பெய்ன்ஸ் ஆகியோரே இந்தக் கூட்டுக் கோரிக்கையை இலங்கை அரசிடம் முன்வைத்துள்ளனர்.

### நாளாந்தம் தாக்குதல்

கடந்த இரண்டு ஆண்டுகளில் மட்டும் முஸ்லிம்களுக்கு எதிராக 350 வன்முறைச் சம்பவங்களும், கிறிஸ்தவர்களுக்கு எதிராக 150 வன்முறைச் சம்பவங்களும் இலங்கையில் நடந்தேறியுள்ளன. முஸ்லிம்கள் மற்றும் கிறிஸ்தவர்கள் மீது இலங்கையில் கிட்டத்தட்ட நாளாந்தம் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### அளுத்கம சம்பவம்

கடந்த ஜுன் மாதம் 15 ஆம் திகதி அளுத்கம, பேருவளையில் சிங்கள தேசியப் பார்வையைக் கொண்ட பொதுபல சேனா அமைப்பு ஏற்பாடு

"வன்முறைகள், இலங்கையில் ஏற்கனவே நிலவுகின்ற குற்றவாளிகளை தண்டிக்காத போக்குக்கு மேலும் உரமூட் டும் வகையில் அமைந்துள் ளன."

செய்த ஆர்ப்பாட்ட பேரணியின் விளைவாக இன வன்செயல் அங்கு நடந்தேறியுள்ளது. இந்த இன வன் செயலால் 4 பேர் உயிரிழந்துள்ளனர். 80 பேர் வரையில் காயமடைந்துள்ளனர். முஸ்லிம்களின் வர்த்தக நிலையங்கள், வீடுகள் தாக்கப்பட்டன என்றும் எரிக்கப்பட்டன என்றும் அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### தண்டிக்காத போக்கு

"இவ்வாறான வன்முறைச் சம்பவங்கள், இலங்கையில் ஏற்கனவே நிலவுகின்ற குற்றவாளிகளைத் தண்டிக்காத போக்குக்கு மேலும் மேலும் உரமூட்டுபவையாகவுள்ளன.

❖ 22 ஆம் பக்கம் பார்க்க

# ஐ.நா. விசாரணை நிச்சயம் நடக்கும்

## இலங்கைக்கான பிரிட்டன் தூதுவர் திட்டவட்டமாகத் தெரிவிப்பு



கொழும்பு, ஜூலை 3
"ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தால் நியமிக்கப்பட்டுள்ள விசாரணைக் குழுவினர் இலங்கைக்குள் பிரவேசிப்பதற்கு அனுமதி மறுக்கப்பட்டாலும் விசாரணைகளை மேற்கொள்ள முடியும். ஆதாரங்களைப் பெற்றுக்கொள்ளும் நடவடிக்கைகளை விசாரணைக் குழு தொடர்ச்சியாக முன்னெடுக்கும்" - இவ்வாறு திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார் - இலங்கைக்கான பிரிட்டன் தூதுவர் ஜோன் ரன்கின்.

"விசாரணைக் குழுவிடம் சாட்சியமளிக்க யாரேனும் முன்வருவார்களாயின் அவர்கள் எந்தவிதத்திலும் அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்படாதிருப்பது மிக முக்கியம். எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நடைபெறும் மனித உரிமைகள் சபை அமர்வில் வாய்மூல அறிக்கையும், எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறும் அமர்வில் முழுமையான அறிக்கையும் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் அடுத்த கட்ட நடவடிக்கைகள் தொடர்பில் "தீர்மானம் மேற்கொள்ளப்படும்"- என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் உள்ள பிரிட்டன் தூதரகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார்.

"இலங்கை அரசு மோதல்களின்போது பாலியல் வன்முறைகளை முடிவுக்குக் கொண்டு வரும் பிரகடனத்தை அங்கீகரிப்பதற்கும், ஐக்கிய நாடுகள் விசாரணைக் குழுவுடன் ஒத்துழைத்துச் செயற்படுவதற்கும் நடவடிக்கை எடுக்கும் என்பதில் பிரிட்டன் இன்னமும் நம்பிக்கை கொண்டுள்ளது"- என்றும் அவர் சந்திப்பின்போது தெரிவித்தார். (ம-சி)

# கொழும்பு அரசும் பாதீனிய அழிப்பில்

யாழ்ப்பாணம், ஜூலை 3
வடக்கு மாகாண சபையால் பாதீனிய ஒழிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில், கொழும்பு அரசாலும் பாதீனிய ஒழிப்பு வாரம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. எதிர்வரும் 7ஆம் திகதி முதல் 12 ஆம் திகதிவரை பாதீனிய ஒழிப்பு வாரம் அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு நவம்பர் மாதம் முதல் வடக்கு மாகாண விவசாய அமைச்சால் பாதீனிய அழிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. பாதீனிய ஒழிப்பை மேற்கொள்பவர்களுக்கு பணமும் கொடுக்கப்படுகின்றது. இந்தநிலையிலேயே கொழும்பு அரசால் மாவட்ட விவசாயத் திணைக்களங்களுக்கு பாதீனிய ஒழிப்பை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளதுடன், அதற்கான நிதியும் ஒதுக்கப்பட்டுள்ளது. அந்த நிதியில் பாதீனிய ஒழிப்புக்கான உபகரணங்கள் கொள்வனவு செய்யப்படவுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. (ம-5)

# நுரைச்சோலை மின்நிலையம் இயங்கினால் மின்கட்டணத்தை ஜனாதிபதி குறைக்கலாம்

## எதிர்பார்ப்பு வெளியிடுகிறார் சீன தூதரக அதிகாரி

கொழும்பு, ஜூலை 03
நுரைச்சோலை மின்நிலையம் முழுவீச்சில் இயங்கத் தொடங்கியதும் இலங்கையில் மின்சாரக் கட்டணத்தை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ குறைப்பார் என்று எதிர்பார்க்கின்றோம் என்று தெரிவித்துள்ளார் இலங்கைக்கான சீன தூதரகத்தின் அரசியல் ஆலோசகர் பகி யாங்.

கொழும்பு லக்ஸ்மன் கதிர்காமர் நிலையத்தில் நேற்று மாலை இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் கூறியிருப்பதாவது,

"இலங்கையில் அமைதியும் - உறுதிப்பாடும் நிலவுவது இந்தியாவுக்கு பெரும் பயனைக் கொடுக்கும். ஏனெனில் சீன அரசின் நிதியுதவியில் அமைக்கப்பட்ட ஹம்பாந்தோட்டை துறைமுகத்தை முதலில் பயன்படுத்தியது இந்தியா தான். எனவே அவர்கள் இலங்கையினால் அதிகம் பயன்

❖ 22 ஆம் பக்கம் பார்க்க



நுரைச்சோலை மின்நிலையம்

## கச்சதீவு விவகாரம்; இந்தியாவின் நிலைப்பாட்டுக்கு 'ஜெ' எதிர்ப்பு

சென்னை, ஜூலை 3
கச்சதீவு விவகாரத்தில், இந்திய அரசின் நிலைப்பாட்டைப் பற்றி, சென்னை உயர் நீதிமன்றத்தில் மத்திய அரசு சமர்ப்பித்த பிரமாணப் பத்திரத்தை திரும்பப் பெற வேண்டும் என்று தமிழக முதல்வர் ஜெயலலிதா வலியுறுத்தியுள்ளார்.

பிரதமர் நரேந்திர மோடிக்கு எழுதியுள்ள கடிதத்திலேயே அவர் அவ்வாறு வலியுறுத்தியுள்ளார். (ரு)

உதயன் 03.07.2014

# பகிரங்க அரசியலுக்கு கோத்தா வருவதை நாம் வரவேற்கிறோம்

## இப்படிச் சொல்கிறார் மனோ கணேசன்

கொழும்பு, ஜூலை 03

ஜனாதிபதி அழைத்தால் தான் அரசியலுக்கு வருவேன் என்று பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்திருக்கிறார். இதை நாம் பேராதரவோடு வரவேற்கிறோம். ஏனென்றால் அவர் திரை மறைவில் இருந்து செய்யும் அரசியல் பெருங்கேடுகளைத் தருவனவாக உள்ளது.

இவ்வாறு தெரிவித்துள்ளார் ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன்.

அதிகாரத்தை பகிர்ந்து ஐக்கியப்படுத்தும் இயக்கத்தின் ஊடக மாநாடு கொழும்பில் நேற்று இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஜனாதிபதி அழைத்தால் தான் அரசியலுக்கு வருவேன் என்ற கோத்தபாயவின் கருத்தை நான் சாதகமாக பார்க்கின்றேன். இன்றைய செயலாளர் கோத்தபாய, நாளை அமைச்சர் கோத்தபாயவாக மாறி பகிரங்க அரசியலுக்கு வருவதை நாங்கள் வரவேற்கிறோம். தம்பியின் விருப்பத்தை புரிந்து கொண்டு, உரிய அழைப்பை அண்ணன் விடுக்க வேண்டும் என்று நான் பகிரங்கமாக கோருகிறேன்.



மனோ கணேசன்

இதுவரை கேள்விகளுக்கு பதில் கூறாத திரைமறைவு அரசியல் செய்துவரும் கோத்தபாய, இனிமேல் பகிரங்கமாக நாடாளுமன்றத்தில் பதில் கூறும் நிலைமை இதனால் ஏற்படும். இது நாட்டுக்கும், வீட்டுக்கும் நல்லது.

தென்னாபிரிக்க துணை ஜனாதிபதி ரமபோஷ தலைமையிலான குழு இலங்கைக்கு பயணம் மேற்கொள்வது குறித்து எதுவுமே தெரியாது என்பது போன்ற இலங்கை அரசு இருக்கிறது. கூட்டமைப்புடனும், இலங்கை அரசுடனும் பேசித்தான் அவர்கள் இங்கு வரவுள்ளார்கள். அதனால்தான் தென்னாபிரிக்கா, ஐ.நா. மனிதவுரிமை சபை தீர்மானத்தின் போது நடுநிலை வகித்தது.

இன்று அரசின் பங்காளிகள் தென்னாபிரிக்காவின் தலையீட்டைத் தடுக்க நினைக்கிறார்கள். அரசும், ரமபோஷ குழுவினர் தங்களுக்கு தெரியாமல் இலங்கை வருவதைப் போல் சிங்கள மக்களுக்கு காட்டுகிறது. கடைசித் தருணத்தில், ஐ.நா. மனிதவுரிமை குழுவுக்கு சொல்வதைபோல், உள்ளே வர விசா இல்லை என்றே ரமபோஷ குழுவினருக்கும் அரசு பதில்சொல்லும் -என்றார். (ஐ-5)

# 2 வருடங்களின் பின் ஒருவருக்கு பிணை

யாழ்ப்பாணம், ஜூலை 3

மானிப்பாயில் ஆயுதங்கள் வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு 2 வருடங்களாக விளக்கமறியலில் இருந்தவர் யாழ்.மேல் நீதிமன்றினால் நேற்றுப் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

நீதிபதி அ.பிரேமசங்கர் முன்னிலையில் இந்த வழக்குத் தொடர்பான பிணை விண்ணப்பம் பரிசீலிக்கப்பட்டு பிணை அனுமதி வழங்கப்பட்டது.

மானிப்பாயில் 2012 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 19 ஆம் திகதி பயங்கரவாதப் பிரிவுப் பொலிஸார் ஒருவரை கைது செய்தனர். அவரிடமிருந்து ரி 56 ரக துப்பாக்கி, அதற்கான ரவைகள் மற்றும் 2 கைக்குண்டு என்பனவற்றை தாம் மீட்டனர் என்றும் அவருடன் தொடர்புடைய ஏனைய மூவரும் கைதுசெய்யப்பட்டனர்.

பிரதான சந்தேகநபராக மானிப்பாயைச் சேர்ந்தவர் கொள்ளப்பட்டார். பயங்கரவாதத்தடைச் சட்டத்தின்கீழ் அவருக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டு பின்னர் சாதாரண குற்றப்பிரிவின் கீழ் மாற்றப்பட்டது.

இந்த நிலையில் அவரைப் பிணையில் விடுவிக்குமாறு கோரி யாழ்.மேல்நீதிமன்றில் பிணை விண்ணப்பம் தாக்கல் செய்யப்பட்டது. அதனைப் பரிசீலித்த நீதிபதி பிணை அனுமதி வழங்கினார்.

அதன்படி 50 ஆயிரம் ரூபா ரொக்கப்பிணையிலும் தலா 2 லட்சம் ரூபா பெறுமதியான 2 ஆள் பிணையிலும் விடுவிக்கப்பட்டார். தவிர ஒவ்வொரு வெள்ளிக்கிழமையிலும் மல்லாகம் நீதிமன்றில் கையொப்பமிடவேண்டும் என்றும் இலங்கை யைவிட்டு வெளியேறக் கூடாது என்றும் நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது. (ஐ-4)

# மாகாண சபை உறுப்பினர் விபத்தில் காயம்

யாழ்ப்பாணம், ஜூலை 3

வடக்கு மாகாண சபையின் உறுப்பினர் சந்திரலிங்கம் சுகிர்தன் நேற்று இடம்பெற்ற விபத்தில் காயமடைந்தார்.

இந்த விபத்து நேற்று பிற்பகல் 3.30 மணியளவில் நடைபெற்றுள்ளது.

கோப்பாய் இராச வீதியில் டிப்பர் வாகனம் ஒன்றை முந்திச் செல்லமுற்பட்ட வேளை அவரது கார் விபத்துக்குள்ளானது.

இதன்போது காயமடைந்த சுகிர்தன் கோப்பாய் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். (ஐ-109)

# சங்கிலி அறுத்த சந்தேகம்; மூவருக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம், ஜூலை 3

யாழ்.நாச்சிமார் கோயிலடியில் யுவதியிடமிருந்து சங்கிலியை அறுத்துக் கொண்டு மோட்டார் சைக்கிளில் தப்பிச் சென்ற நபர் உட்பட 3 பேர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் என்று யாழ். பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை வீதியில் சென்று கொண்டிருந்த பெண்ணை மோட்டார் சைக்கிளில் பின் தொடர்ந்த நபர் அந்தப் பெண் அணிந்திருந்த ஒன்றரைப் பவுண் நிறையுடைய சங்கிலியை அறுத்துச் சென்றுள்ளார். சம்பவம் தொடர்பில் யாழ்.

> “ வீதியில் சென்று கொண்டிருந்த பெண்ணை மோட்டார் சைக்கிளில் பின் தொடர்ந்த நபர் அந்தப் பெண் அணிந்திருந்த ஒன்றரைப் பவுண் நிறையுடைய சங்கிலியை அறுத்துச் சென்றுள்ளார்.

பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. சம்பவம் தொடர்பான சந்தேகத்தில் தாம் மூன்று பேரை கைது செய்து நீதிமன்றில் முற்படுத்தினர் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ஐ-4)

# கல்விக் கண்காட்சி நாளை

யாழ்ப்பாணம், ஜூலை 3

வல்வெட்டித்துறை இந்து தமிழ் கலவன் பாடசாலையின் கல்விக் கண்காட்சி நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 6.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் க.ஸ்ரீஸ்குமார் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கரவெட்டிக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் க.பொன்னையா கலந்து கொண்டு கண்காட்சியை சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைப்பார். (ஐ-108)

# கடல் வழியாக தமிழகம் சென்ற நால்வர் கைது



தமிழகம் சென்ற நால்வர்

இராமநாதபுரம், ஜூலை 03

இலங்கையில் இருந்து தனுஸ்கோடி அரிச்சல்முனைக்கு படகு மூலம் சென்ற நான்கு இலங்கையர்களை தாம் கைது செய்துள்ளனர் என்று தமிழக காவல்துறையினர் அறிவித்துள்ளனர்.

இராமநாதபுரம் மாவட்டம் தனுஸ்கோடி அரிச்சல் முனை கடற்பகுதியில் இரண்டு பெண்கள் உட்பட நான்கு இலங்கை அகதிகள் இருப்பதாக அந்த பகுதியைச் சேர்ந்த மீனவர்கள் காவல் துறைக்கு தகவல் தெரிவித்தனர்.

இதனையடுத்து அங்கு சென்ற தனுஸ்கோடி காவல்துறையினர் நான்கு பேரையும் கைது செய்து காவல் நிலையம் கொண்டு சென்றனர்.

மன்னார் மற்றும் வவுனியா மாவட்டங்களைச் சேர்ந்த ரவிந்திரன், மலர், சதீஸ், சாந்தி ஆகிய நால்வரே இவ்வாறு கைதாகி உள்ளனர்.

தாம் மன்னாரில் இருந்து ஆளுக்கு 10 ஆயிரம் ரூபா வீதம் பணம் கொடுத்து தனுஸ்கோடிக்கு வந்ததாக அவர்கள் தெரிவித்தனர் என்று தமிழக காவல்துறையினர் தெரிவித்தனர். (ஐ-10)

# மடு அன்னைக்கு ஆடித் திருவிழா நேற்று நிறைவு

மன்னார், ஜூலை 3

வரலாற்றுப் புகழ்மிக்க மடு அன்னையின் ஆடித் திருவிழா கடந்த மாதம் 23ஆம் திகதிகொடியேற்றத்துடன் ஆரம்பித்து நேற்று புதன் கிழமை திருநாள் திருப்பலியோடு நிறைவடைந்தது.

திருநாளுக்கான சிறப்புத் திருப்பலியை மன்னார் மறைமாவட்ட ஆயர் இராயப்பு ஜோசேப்பு, சிலாபம் மறைமாவட்ட ஆயர் வலன்ஸ் மென்டிஸ் மற்றும் மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் பொன்னையா ஜோசேப்பு ஆகியோர் இணைந்து நடத்தினர்.

இதன்போது தமிழ், சிங்களம் மற்றும் இலத்தீன் மொழிகளில் திருவிழாத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.



இதனிடையே மன்னார் மறைமாவட்ட ஆயரினால் வருடத்தில் இரண்டு தடவைகள் வழங்கப்படும் அப்போஸ்தலிக்க ஆசீர்வாதமும் பக்தர்களுக்கு வழங்கப்பட்டது.

இறுதியில் மடு அன்னையின் திருச்சொரூப பவனியும் திருச்சொரூப ஆசீர்வாதமும் வழங்கப்பட்டு மடுத்திருத்தலத்தின் வருடாந்த ஆடித்திருவிழா நிறைவடைந்தது. (ஐ-56)

# மதுக்கடைகளை மூடக் கோரி மட்டக்களப்பில் ஆர்ப்பாட்டம்

மட்டக்களப்பு, ஜூலை, 03

மட்டக்களப்பில் அமைந்துள்ள மதுபானக் கடைகளை குறைக்கவும் அவற்றை மூடிவிடவும் கோரி அந்த மாவட்டத்தில் மகளிர் அமைப்புக்களின் ஏற்பாட்டில் விழிப்புணர்வு பேரணி ஒன்று நேற்று நடத்தப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள 45 மாதர் அபிவிருத்தி சங்கங்கள் இணைந்திருந்தன.

மட்டக்களப்பு மகாத்மா காந்தி பூங்காவில் ஆரம்பமாகிய ஆர்ப்பாட்டம் மட்டக்களப்பு மாவட்ட செயலகம் வரை பேரணியாக சென்றது.

பேரணியின் இறுதியில் மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் பி.எஸ்.எம். சாள்ஸ்சிடம் மனு ஒன்றும் கையளிக்கப்பட்டது. (ஐ-10)


இது எம்மால் மட்டுமே சாத்தியம்
பகிரங்கமாகவே சவால் விடுகின்றோம்

சுவிஸ், பிரான்ஸ், நோர்வே, இத்தாலி .......
செங்கன் விசா 26 நாடுகளுக்கு
3 வருட, 4 வருட, 5 வருட விசா
நேர்முகத்தேர்வு யாழ் அலுவலகத்தில் 04.07.2014
இதுவே இவ்வாண்டின் இறுதிச் சந்தர்ப்பம்
(நிபந்தனைகளுடன்)

திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்
175, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்
021 221 9016, 021 568 9090

(49485)(10)

# உதயன்

விலை ரூபா 20

சுடர்: 29 வள்ளுவர் ஆண்டு: 2045 ஆனி 19 வியாழக்கிழமை (03.07.2014) UTHAYAN - A lively National Tamil Daily கதிர் 219

# முடிவு எட்டப்படாது இழுபறியில் இரணைமடு குடிதண்ணீர் திட்டம்

## கொழும்பில் நடந்த கூட்டத்திலும் பயன் இல்லை

**கொழும்பு, ஜூலை 3**

**இரணைமடுக் குடிதண்ணீர்த் திட்டம் தொடர்பாக நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை கொழும்பில் நடைபெற்ற விசேட கலந்துரையாடல், எந்தவொரு முடிவும் எட்டப்படாது முடிவுற்றது என்று தெரிவிக்கப்படுகின்றது.**

**இந்தக் கலந்துரையாடல் அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் கேட்போர் கூடத்தில் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சின் ஏற்பாட்டில், அமைச்சின் மேலதிக செயலாளர் திருமதி ரஞ்சினி நடராஜபிள்ளை தலைமையில் நடந்துள்ளது.**


அதில் இரணைமடுக் குடிதண்ணீர்த் திட்டம் மற்றும் ஆறுமுகம் திட்டம் என்பன தொடர்பிலேயே ஆராயப்பட்டுள்ளது. இரு திட்டங்கள் தொடர்பிலான விளக்கக் கட்டுரைகள், கலந்துரையாடலில் கலந்துகொண்ட பல்வேறு பொறியியலாளர்களினால் முன்வைக்கப்பட்டன.

ஆறுமுகம் திட்டத்தை தயாரித்த பொறியியலாளரின் மகனான பொறியியலாளர் திரு ஆறுமுகம், ஆஸ்திரேலியாவிலிருந்து வந்து இந்தக் கலந்துரையாடலில் பங்கெடுத்திருந்தார். அவர், ஆறுமுகம் திட்டத்தை (யாழ்ப்பாண ஆறு) எதுவித தாமதமும் இல்லாமல் நடைமுறைப் படுத்துமாறு கோரினார். அத்துடன் இரணைமடுக் குளத்தை உயர்த்துவதற்காக 15 மில்லியன் அமெரிக்க டொலர் ஒதுக்கப்பட்டுள்ளது. இரணைமடுக் குளத்தை உயர்த்தாமல் இருக்கின்ற குளக்கட்டை பலப்படுத்தி, எஞ்சும் பணத்தில் ஆறுமுகம் திட்டத்தை நடைமுறைப்படுத்தலாம் என்றும் அவர் யோசனை முன்வைத்துள்ளார்.

இதில் கலந்துகொண்ட பிற பொறியியலாளர்களால் இரணைமடுக்குடி தண்ணீர்த் திட்டமே நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கை முன்

(22ஆம் பக்கம் பார்க்க)

## குடும்பஸ்தர் சடலமாக மீட்பு



யாழ்ப்பாணம், ஜூலை 3

தென்பகுதியைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர் நேற்று கிளிநொச்சி பரந்தன் பகுதியில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். கண்டியைச் சேர்ந்த இராசப்பா இராசேந்திரபிரசாத் (வயது-52) என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

நிறுவனம் ஒன்றின் ஹன்ரர் வாகனச்

(22ஆம் பக்கம் பார்க்க)

## டெங்குநோயைக் கட்டுப்படுத்த வடமராட்சியில் விசேட ஏற்பாடு

கரணவாய், ஜூலை 3

வடமராட்சிப் பகுதியில் வேகமாகப் பரவிவரும் டெங்கு நோயைக் கட்டுப்படுத்த பல்வேறு செயல் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, நாளை வெள்ளிக்கிழமை யாழ்.மாவட்டத்திலுள்ள அனைத்து சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளிலும் சுகாதார ஊழியர்கள் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், கிராம மட்டக் குழுக்கள், பொதுமக்கள், பொலிஸார் மற்றும் படையினர் இணைந்து விசேட டெங்கு கட்டுப்பாட்டு வேலையில் ஈடுபடவுள்ளனர்.

டெங்கு நோயைக் கட்டுப்படுத்துவது குறித்து வடமராட்சி சுகாதாரப் பிரிவினர் விடுத்துள்ள தகவலில்;

வடமராட்சிப் பகுதியில் அண்மை நாள்களாக டெங்குநோய் கட்டுப்பாடு இன்றி மிக வேகமாக

(22ஆம் பக்கம் பார்க்க)

## வடமாகாணத்தில் டெங்கை கட்டுப்படுத்த இன்று மாநாடு

கரணவாய், ஜூலை 3

வடக்கு மாகாணத்தில் டெங்கு நோயைக் கட்டுப்படுத்துவது தொடர்பான முக்கிய மாநாடு இன்று வியாழக்கிழமை கிளிநொச்சியில் நடைபெறவுள்ளது.

வடமாகாண சுகாதார அமைச்சர் பா.சத்தியலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்த மாநாட்டில் டெங்கு நோயைக் கட்டுப்படுத்தல் தொடர்பாக ஆராயப்பட உள்ளது. அத்துடன் நோய்க் கட்டுப்பாடு தொடர்பில் முக்கிய தீர்மானங்களும் முன்வைக்கப்படவுள்ளன. அத்தோடு வடமாகாணத்துக்கான விசேட கட்டுப்பாட்டு வாரமும் இந்த மாநாட்டில் தீர்மானிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த மாநாட்டில் வடமாகாணத்தில் உள்ள சுகதார வைத்திய அதிகாரிகள் மற்றும் சுகாதார ஊழியர்கள் கலந்துகொள்ள உள்ளனர். (ஐ-108)

## பல சேனாவை பாதுகாப்பு அமைச்சு எதிர்க்கவில்லை

### திட்டவட்டமாக நேற்று அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 3

ஆளும் மற்றும் எதிரணியின் அரசியல்வாதிகள் உட்பட சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள் எனப் பலதரப்பினரும் பொதுபல சேனாவுக்கு கடும் எதிர்ப்பு வெளியிட்டுவரும் நிலையில், பொதுபல சேனாவைத் தாம் எதிர்க்கவில்லை என்று பாதுகாப்பு அமைச்சு நேற்றுத் தெரிவித்துள்ளது.

அத்துடன், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கும், பொதுபல சேனாவுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை எனத் தெரிவித்த பாதுகாப்பு அமைச்சு, இதுதொடர்பில் வெளியிடப்படும் செய்திகள் அனைத்தும் பொய்யானவை - அடிப்படையற்றவை என்றும் குறிப்பிட்டது.

கொழும்பிலுள்ள பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் ஊடக மையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்தபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார் இராணுவ ஊடகப் பேச்சாளர் பிரிகேடியர் ருவான் வணிகசூரிய. இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது,

"2013 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 9 ஆம் திகதி காலியில் இடம்பெற்ற பௌத்த கலாசார நிலையமொன்றின் திறப்புவிழாவுக்கு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சென்றிருந்தார். அப்போது பொது பல சேனா அமைப்பின் செயலாளர் வண.கலகொட அத்தே ஞானசார தேரருடன் எடுத்த படத்தை அடிப்படையாக வைத்துக் கொண்டு, பாதுகாப்புச் செயலாளருக்கும், பொது பல சேனாவுக்கும் தொடர்பு இருப்பதாக செய்தி வெளியிடப்பட்டது.

இந்த நிகழ்வுக்கு ருகுணு பல்கலைக்கழக பேராசிரியர் வண.பல்லத்தர சுமணஜோதி தேரரால், பாதுகாப்புச் செயலாளருக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. அதனால்தான் அந்த நிகழ்வில் பாதுகாப்பு அமைச்சர் பங்கேற்றார். வைபவம் இடம்பெற்ற இடம் ஜேர்மன் நாட்டுப் பிரஜையான மைகல் ஜே.ஏ. கெரிட்மெய்ர் என்பவரால் வழங்கப்பட்டதாகும். இந்த நிகழ்வில் கலந்துகொண்டமைக்காக பாதுகாப்புச் செய

(22ஆம் பக்கம் பார்க்க)

## காலாவதித் திகதிகளின்றி வாசனைத் திரவியங்கள்

### யாழ். புறநகர்ப் பகுதி கடைகளில் விற்பனை

யாழ்ப்பாணம், ஜூலை 3

யாழ்ப்பாணம் புறநகர்ப் பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்கள் சிலவற்றில் காலாவதித் திகதிகள் குறிப்பிடாத வாசனைத் திரவியங்கள் விற்பனை செய்யப்படுகின்றன என்றும் அவர்களுக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்படவுள்ளது என்றும் தெரிவித்துள்ளனர் யாழ். மாவட்ட பாவனையாளர் அதிகார சபையினர்.

குறித்த பகுதியில் யாழ்.மாவட்ட பாவனையாளர் அதிகார சபையினர் திடீரென மேற்கொண்ட சோதனையின்போதே காலாவதித் திகதியற்ற வாசனைத் திரவியங்கள் அகப்பட்டுள்ளன. குறித்த வாசனைத் திரவியங்கள் நகர் பகுதியிலுள்ள வர்த்தக நிலையத்திலிருந்து கொள்வனவு செய்யப்பட்டுள்ளன என்று கூறப்படுகின்றது.

அவற்றை விற்பனை செய்வோர் மற்றும் அவற்றை உற்பத்தி செய்யும் நிறுவனம் ஆகியோருக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்க முடியும் என்றும் அதிகார சபையினர் தெரிவித்துள்ளனர்.

(ற-4)

## வற்றாப்பளை பாலஸ்தாபனம் பிற்போடப்பட்டது

யாழ்ப்பாணம், ஜூலை 3

வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய பாலஸ்தாபனம் நாளை வெள்ளிக்கிழமை நடைபெறவிருந்த நிலையில் அது பிறிதொரு திகதிக்குப் பிற்போடப்பட்டுள்ளது என்று ஆலய பரிபாலனசபைத் தலைவர் அறிவித்துள்ளார். ஆலய கட்டட வேலை ஆரம்பிக்கப்படவுள்ளதனாலேயே பாலஸ்தாபனம் பிற்போடப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற-4)

## வழமைக்குத் திரும்பின வடக்கு ரயில் சேவைகள்

கொழும்பு, ஜூலை 3

கொழும்பு - திருகோணமலை இடையே சேவையில் ஈடுபட்ட ரயில் தடம்புரண்டதால் தடைப்பட்டிருந்த வடக்குக்கான தபால் ரயில் சேவை நேற்றுக் காலை முதல் வழமைக்கு திரும்பியுள்ளது என்று ரயில்வே கட்டுப்பாட்டுநிலையம் குறிப்பிட்டுள்ளது.

(22ஆம் பக்கம் பார்க்க)

## தேசிய அடையாள அட்டைக்கு இருவாரத்துள் விண்ணப்பிக்குக

### கல்விப் பொதுத்தராதர பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கு அறிவுறுத்தல்

கொழும்பு, ஜூலை 3

கல்விப் பொதுத்தராதர பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களில் நான்கில் ஒரு பகுதியினரே தேசிய அடையாள அட்டை பெறுவதற்கு விண்ணப்பித்துள்ளனர். இதுவரையில் விண்ணப்பிக்காதவர்கள் இன்னும் இரண்டு வார காலத்துக்குள் விண்ணப்பிக்க வேண்டும் - என்று கோரியுள்ளார் ஆள்பதிவு திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் ஆர். எம்.எஸ். சரத்குமார.

பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் ஊடக மத்திய நிலையத்தில் நேற்றுக் காலை நடைபெற்ற வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைக்கு வருடாந்தம் சுமார் 5 லட்சம் மாணவர்கள் தோற்றுகின்றனர். எனினும் இந்த முறை தேசிய அடையாள அட்டை பெறுவதற்காக 1 லட்சத்து 25 ஆயிரம் பேர் மட்டுமே விண்ணப்பித்துள்ளனர்.

2014 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 31 ஆம் திகதி 16 வயது பூர்த்தியான மாணவர்கள் பாடசாலையூடாக ,தேசிய அடையாள அட்டை பெறுவதற்கு விண்ணப்பிக்கலாம். விண்ணப்பப் பத்திரங்களை கடந்த மே மாதம் 31 ஆம் திகதிக்கு முன்

(22ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# நீரிழிவு நோய் பாதிப்பு இலங்கையில் அதிகம்

கொழும்பு, ஜூலை 3

இலங்கையில் இளைஞர்கள் மத்தியில், நீரிழிவு நோய் கணிசமான அளவு அதிகரித்துள்ளதாக அண்மைய ஆய்வொன்றின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

22 முதல் 30 வயது வரையான இளைஞர்கள் நீரழிவு நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பான ஆய்வு வடக்கு, கிழக்குப் பகுதிகளை தவிர்த்து, கடந்த 2006 ஆம் ஆண்டு முதல் தொடர்ச்சியாக மேற்கொள் ளப்பட்டு வந்தது.

> “22 முதல் 30 வயது வரையான இளைஞர்கள் நீரழிவு நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இளைஞர்கள் மத்தியில் உணவுக் கட்டுப்பாடு இல்லை, ஆரோக்கியமான உணவை அவர்கள் உண்பதில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. (ச)

# மலையகத்தில் கடும் மழை; மண்சரிவு ஏற்படும் அபாயம்

கொழும்பு,ஜூலை 3

மலையகப் பகுதிகளில் தற்போது பெய்துவரும் கடும் மழையால் ஹற்றனின் பல்வேறு பகுதிகளில் மண்சரிவு மற்றும் வெள்ளப்பெருக்கு ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகள் காணப்படுவதால், மக்களை எச்சரிக்கையுடனும் அவதானத்துடனும் இருக்குமாறு ஹற்றன், டிக்கோயா நகர சபைத் தலைவர் அழகமுத்து நந்தக்குமார் தெரிவித்தார்.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு ஹற்றன் நகரில் ஏற்பட்ட மண் சரிவு போன்று ஹற்றனின் காமினிபுர, சமனலகம, கேம்வேளி போன்ற பகுதிகளில் மண் சரிவு அபாயங்கள் காணப்படுவதுடன் நாலுபீளி, அலுத்கம, டிக்கோயா பகுதிகளில் வெள்ள அபாய மும் காணப்படுவதால் இந்தப்பகுதி வாழ் மக்களை அவதானத்துடன் இருக்குமாறு நகரசபைத் தலைவர் கேட்டுக்கொண்டுள்ளார்.



காசல்ரீ நீர்த் தேக்கம் நிரம்பிய நிலையில்...

தங்குவதற்கு அனுமதி கொடுக்கப்படாத கட்டடங்களில் மக்கள் இரவு நேரங்களில் தங்குவதைத் தவிர்த்துக் கொள்ளுமாறு அவர் கேட்டுக் கொண்டுள்ளார். (ச)



ஒப்பந்தம் பரிமாறப்பட்ட போது...

# மருந்து கொள்வனவுக்கு ஒப்பந்தம் கைச்சாத்து

கொழும்பு,ஜூலை 3

பங்களாதேஷிலிருந்து மருந்து வகைகள் மற்றும் மருத்துவ உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கான ஒப்பந்தம் ஒன்றில் இலங்கையும் பங்களாதேஷும் கைச்சாத்திட்டுள்ளன.

இலங்கை அரசின் சார்பில் சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவும் பங்களாதேஷ் அரசின் சார்பில் அந்தநாட்டு சுகாதார அமைச்சர் மொஹமட் நஸீமும் இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர்.

இலங்கை அரசு வெளிநாடு ஒன்றிலிருந்து நேரடியாக மருந்து வகைகள் மற்றும் மருத்துவ உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கான ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திடப்பட்டமை இதுவே முதற்தடவையாகும். (ச)

# சரத்பொன்சேகா வழக்குத் தாக்கல்

## முன்னாள் ஊடக செயலருக்கு எதிராக

கொழும்பு,ஜூலை 3

ஜனநாயகக் கட்சியின் முன்னாள் ஊடக செயலர் சஞ்ஜீவ சமரசிங்கவுக்கு எதிராக கட்சியின் தலைவர் சரத் பொன்சேகா நேற்று புதன்கிழமை நீதிமன்றத்தில் வழக்கொன்றை தாக்கல் செய்துள்ளார்.



500 மில்லியன் ரூபா இழப்பீடு கோரியே வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சஞ்ஜீவ சமரசிங்க, சரத் பொன்சேகாவுக்கு அவதூறு ஏற்படுத்தும் வகையில் செயற்பட்டதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்கள் வழியாக சமரசிங்க, பொன்சேகாவுக்கு அவதூறு ஏற்படுத்தும் வகையில் கருத்துக்களை வெளியிட்டிருந்தார். அதற்கு எதிராக அவருக்கு சட்டத்தரணி ஊடாக இழப்பீடு கோரி அறிவிப்பு அனுப்பிவைக்கப்பட்டிருந்தது.

அதற்கு பதில் கிடைக்காத நிலையில், வழக்கு தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று ஜனநாயகக் கட்சி தெரிவித்துள்ளது.

சரத் பொன்சேகா சர்வாதிகாரியாக நடந்துகொள்கிறார் என்று குற்றம் சுமத்தியிருந்த ஜனநாயகக் கட்சியின் முன்னாள் ஊடகச் செயலர் சஞ்ஜீவ சமரசிங்க, அந்தக் கட்சியில் இருந்து விலகிக் கொண்டார்.

பண மோசடி குற்றச்சாட்டு காரணமாக அவர் கட்சியில் இருந்து விலகியதாக பொன்சேகா தரப்பினர் தெரிவித்திருந்தனர். (ச)


DMI INTERNATIONAL ENGLISH COLLEGE

சர்வதேச ஆங்கில பரீட்சைகள்

City & Guilds A1, A2, B1, B2

(ESOL) Diploma International English for Speakers of other Languages

சித்தியடைவதற்கான 100% உத்தரவாதம்

திருமணம் செய்து நிரந்தர விசாவில் London செல்பவர்கள், உயர்கல்விக்கு UK செல்வோருக்கு பிரித்தானிய அரசால் கோரப்படும் ஆங்கில பரீட்சைகள் எமது நிறுவனத்திலே கற்று எமது நிறுவனத்திலேயே பரீட்சைக்கு இலகுவாக தோற்றமுடியும்.

veta

Spoken English

புதிய பிரிவுகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம் Sat, Sun 8.00 a.m.

நெல்லியடி Sat, Sun 2.30 p.m.

சாவகச்சேரி Sat, Sun 2.30 p.m.

IELTS

(Duration: 50 hrs with 5 mock exams)

- Latest training materials.
- Skills development in all four categories.
- Personalised guidance and ample of opportunities to interact with the lecturer.
- Depend on individual needs, the student can access other English Modules FREELY.

விரிவுரைகள் Oxford University UK postgraduate ஆல் வழங்கப்படும்.

DMI INTERNATIONAL ENGLISH COLLEGE

யாழ்ப்பாணம் No.113. கஸ்தூரியார் வீதி, Tel.: 021-222 4403

நெல்லியடி M.M.V வீதி, Tel.:021-226 2470

சாவகச்சேரி கண்டி வீதி, (HNB அருகில்) Tel.:021-227 0775

சுன்னாகம் Tel.:021-224 1970


# மரண அறிவித்தல்



## வேலுப்பிள்ளை நடராசா

காரைநகர், பலகாட்டைப் பிறப்பிடமாகவும் தற்போது கருவேப்புலம் வீதி, கோணாவளை ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை நடராசா நேற்று (02.07.2014) புதன்கிழமை காலை 7 மணியளவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிர்காமர் வேலுப்பிள்ளை - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான பாலசிங்கம்-சிதம்பரம் தம்பதியரின் அன்பு மருமகனும், செல்லம்மாவின் அன்புக் கணவரும், கேதீஸ்வரன், ரதீஸ்வரன் (பேரவைச் செயலகம்-கைதடி) ஆகியோரின் அன்புத் தந்தையும், சுகந்தி, மாதுமை (விவசாய போதனாசிரியர்) ஆகியோரின் அன்பு மாமனும், தமிழினி, யாழவன், கஜரூபன், சாரங்கன் ஆகியோரின் அன்பு பேரனும் காலஞ்சென்றவர்களான அரியரத்தினம், சுப்பிரமணியம், பத்மநாதன், தருமலிங்கம், நாகம்மா, இராசம்மா, பொன்னம்மா மற்றும் கணேசபிள்ளை சின்னம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.07.2014) வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(49483)(10)

இல. 5/3, கருவேப்புலம் வீதி, கோணாவளை,.
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.
077 625 2862

தகவல்:
குடும்பத்தினர்.

# தவறிவிட்டது

பளைக்கும், கிளிநொச்சி உருத்திரபுரத்துக்கும் இடையில் வேல்முருகு கண்ணன் என்பவருடைய இன்சுரன்ஸ், ரக்ஸ், லைசன்ஸ், அடையாள அட்டை (771444504 V) தவறிவிட்டன. கண்டெடுத்து தருபவர்களுக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு: 077 126 8014

உதயா சைவ உணவகம் - சாவகச்சேரி.

(43676) (10)


# J.C.B (பைக்கோ) வாடகைக்கு




குறிப்பு :
போக்குவரத்துக் கூலி அறவிடப்பட மாட்டாது.

தொடர்பு: 021 224 1466 (யாழ்ப்பாணம்)
077 771 2482 (சுன்னாகம்)
077 984 7285 (பருத்தித்துறை)

புதிய எரிபொருள் நிரப்பு நிலையம்
207, K.K.S.வீதி, சுன்னாகம்.

(49380) (4.6.3)


# 31ஆம் நாள் நினைவஞ்சலி



யாழ்.பிரதேச செயலகத்தில் ஜே/62, கொழும்புத்துறை கிழக்கு கிராம அலுவலர் (தரம் - I)

செல்வி இ.கமலவேணி அவர்களின் அன்புச் சகோதரி

திருமதி குணவதி தெய்வேந்திரன் அவர்கள்

03.06.2014 அன்று இறைபதம் எய்தினார்.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் உறவினர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.


ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

சகோதர கிராம உத்தியோகத்தர்கள், பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்.

(40471)(12.3.6)

# மரண அறிவித்தல்

## பஞ்சாட்சரம் வேலுப்பிள்ளை



அராலி மத்தி, வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், 84/3, திருமால்வீதி, திருகோணமலையை வசிப்பிடமாகவும் கொண்ட பஞ்சாட்சரம் வேலுப்பிள்ளை 30.06.2014 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பஞ்சாட்சரம் - சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், பத்மாவதியின் அன்புக் கணவரும், பிரசாந்தன் (இத்தாலி), யாழினி (வீதி அபிவிருத்தி திணைக்களம் - திருகோணமலை), யாமினி (திருகோணமலை) ஆகியோரின் அன்புத் தந்தையும், பாண்டியன் (திருகோணமலை), நவஜீவன் (ஆசிரியர் - சென் மேரிஸ் கல்லூரி, திருகோணமலை), சுபத்திரா (இத்தாலி) ஆகியோரின் மாமனும், யதுக்ஷா, சுவஸ்திகா, நிலாஸ் (இத்தாலி), கபிஸ்னா, மதுஷிகா, அபிசாயி (இத்தாலி) ஆகியோரின் பேரனும், தம்பித்துரை, தர்மராசா, உமா லக்ஷ்மி, காலஞ்சென்றவர்களான நாகராசா, திரு ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற பத்மநாதன் (கல்வியங்காடு) மற்றும் நல்லைநாதன் (அராலி மத்தி) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.07.2014) வியாழக்கிழமை அராலி மத்தியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பி.ப.2.00 மணியளவில் அராலி பூனாவோடை இந்துமயானத்துக்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

அராலி மத்தி,
வட்டுக்கோட்டை.

(49472) (12)(3.6)

தகவல்:
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## திருமதி மாலினி சந்திரகுமார்



துன்னாலை வடக்கு, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும், வவுனியா, குருமன்காட்டை வதிவிடமாகவும், தற்போது பிரான்சில் வசித்து வந்தவருமாகிய திருமதி மாலினி சந்திரகுமார் 30.06.2014 திங்கட்கிழமை பிரான்சில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மிருகண்டு மற்றும் சாந்தமலர் தம்பதியரின் அன்பு மகளும், சந்திரகுமாரின் பாசமிகு மனைவியும், நிசாந்தன், நிசா ஆகியோரின் அன்புத் தாயும், விக்கி, கீதா, ராஜா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.07.2014) வியாழக்கிழமை பி.ப.3.00 மணியளவில் பிரான்சில் நடைபெற்று, பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

(45590) (12)(3.6)

தகவல்: தேவாரெக்ஸ்,
நெல்லியடி.

# விளையாட்டு நிகழ்வுகளில் விட்டுக்கொடுப்பு அவசியம்

## செல்வம் எம்.பி. கருத்து

மன்னார், ஜூலை 3

விளையாட்டு நிகழ்வுகளின் போது விட்டுக்கொடுப்புக்கள் அவசியம் தேவை. ஆனால் அனைத்து விடயங்களிலும் விட்டுக்கொடுத்துச் செல்ல முடியாது, அவ்வாறு விட்டுக்கொடுத்துச் செல்வதால் அது பெரிய தவறுகள் ஏற்பட வழி வகுக்கும்.

இவ்வாறு கூறினார் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்செல்வம்அடைக்கலநாதன்.

மாந்தை கிழக்கு பிரதேச சபையினால் உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட சபை எல்லைக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையிலான மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதிப்போட்டி மாந்தை கிழக்குபிரதேசசபைத்தவிசாளர் அ.தனிநாயகம் தலை மையில் கடந்த புதன்கிழமை பாண்டியன் குளம் மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது. இந் நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றும் போதே நாடாளுமன்ற உறுப்பினர் மேற்கண்டவாறு கூறினார். இதன்போது அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

விளையாட்டின்போது விட்டுக்கொடுப்புக்கள் மேற்கொள்ளலாம். எனினும் எமது இனம், எமது தேசம் எமது உரிமைகள் என்று வரும்போது விட்டுக்கொடுப்புக்களை மேற்கொள்ள முடியாது.

அவ்வாறு மேற்கொள்வதால் பெரிய தவறுகளைச் சந்திக்க நேரிடும். இதனை இளைய சமுதாயம் புரிந்துகொள்ள வேண்டும். மேலும் இவ்வாறான விளையாட்டுப் போட்டிகளை தொடர்ச்சியாக ஒவ்வொரு நினைவு நாள்களிலும் நடத்த வேண்டும் என்றும் இதன்மூலம் இளைஞர்களை ஒன்றுபடுத்த முடியும் என்பதுடன் இதற்காகத்தான் உதவிகளை வழங்குவதாகவும் அவர் கூறினார். (வ-56)

# ஆலயத்தில் திருட்டுச் சம்பவம்

வடமராட்சி, ஜூலை 4

பருத்தித்துறை ஆசைப்படி பிள்ளையார் ஆலய களஞ்சிய அறைக்குள் ஓடு பிரித்து இறங்கிய இனந்தெரியாதவர்கள் அங்கிருந்த சுமார் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான இரண்டு அம்பிளிபயர், ஒரு டிவிடி பிளேயர் என்பவற்றைத் திருடிச் சென்றுள்ளனர். இந்தச் சம்பவம் கடந்த சனிக்கிழமை நள்ளிரவு இடம்பெற்றுள்ளது. பொருள்களைத் திருடிய திருடர்கள் களஞ்சிய அறையில் இருந்த பணக்கொடுக்கல் வாங்கல் செய்யும் துவாரத்தினூடாக வெளியேறி ஆலய தெற்குவாசல் கேற்றை அலவாங்கால் உடைத்துக் கொண்டு வெளியே சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக ஆலய பரிபாலன சபையினர் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளனர். (க-173)

# யாழ். மாவட்டத்தில் 1964 இந்திய வீடுகள் பூர்த்தி

## இந்திய வீட்டுத் திட்டம் ஆரம்பமாகி 4 வருடங்களில்

யாழ்ப்பாணம், ஜூலை 3

இந்திய அரசின் வீட்டுத் திட்டம் யாழ்.மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டு நான்கு ஆண்டுகள் நிறைவடையும் நிலையில் இதுவரை ஆயிரத்து 964 வீடுகளே முழுமையாக நிர்மாணிக்கப்பட்டுள்ளதாகவும், 2 ஆயிரத்து 942 வீடுகளின் நிர்மாணிப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்திய அரசின் நிதியுதவியில், போரால் பாதிக்கப்பட்ட வடக்கு-கிழக்கு மற்றும் மலையக மக்களுக்காக 50 ஆயிரம் வீடுகள் அமைக்கும் பணி கடந்த 2010 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 27ஆம்திகதிஆரம்பிக்கப்பட்டது. இந்தத் திட்டத்தின் கீழ் யாழ். மாவட்டத்துக்கு 9 ஆயிரம் வீடுகள் ஒதுக்கப்பட்டிருந்தன. முதல் கட்டமாக 'பைலட் திட்டம்' முன்னெடுக்கப் பட்டது. இதில் 150 வீடுகள் நிர்மாணிக்கப்பட்டன. அதனைத் தொடர்ந்து அடுத்த கட்டமாக 397 வீடுகள் நிர்மாணிப்பு முன்னெடுக்கப் பட்டது. இதில் 338 வீடுகள் மாத்திரமே இதுவரையில் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

அடுத்த கட்டமாக 2 ஆயிரத்து 198 வீடுகள் அமைக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இதில் ஆயிரத்து 490 வீடுகள் நிர்மாணித்து முடிக் கப்பட்டுள்ளன. இறுதியாக 2 ஆயிரத்து 311 வீடுகள் அமைக் கும் பணிகள் ஆரம்பிக்கப்பட் டன, இதில் 136 வீடுகள் முழுமையாக நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

மேலும் தற்போது 19 கிராம சேவையாளர் பிரிவுகளில், வீட்டுத் திட்டத்துக்குரிய பயனாளிகளைத்தெரிவுசெய்வதற்குரிய புள்ளியிடல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. (வ-5)

# சமயசந்நிதிகளில்

வரணி, ஜூலை 3

வரணி வடக்கு கூழா நின்றபுலத்து முருகமூர்த்தி ஆலய அலங்கார உற்சவம் கடந்த 24 ஆம் திகதி ஆரம்பமாகி இடம்பெற்று வருகின்றது. இன்று வியாழக்கிழமை தீர்த்த உற்சவமும், நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பூங்காவன உற்சவமும் இடம்பெறும். (க-122)

★★★

அளவெட்டி பெருமாக்கடவை ஸ்ரீசித்தி விநாயகர் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் இன்று வியாழக் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தேர்த்திருவிழாவும், மறுநாள் சனிக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன. 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பூங்காவனத்திருவிழா இடம்பெறும். (க)

★★★

கோண்டாவில் பாரதிபுரம் ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலயத்தின் வருடாந்த மஹோற் சவம் கடந்த 20ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

இன்று முற்பகல் 10.30 மணிக்கு தேர்த் திருவிழாவும், நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும், மாலை 6.30 மணிக்கு கொடியிறக்கமும் இடம்பெறும்.

நாளை மறுதினம் சனிக்கிழமை மாலை 5 மணிக்கு பூங்காவனத் திருவிழாவும், 7ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு வைரவர் பொங்கலுடன் உற்சவம் நிறைவு பெறும். (வ)

★★★

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் கண் ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலயத் தேர்த்திருவிழா இன்று வியாழக் கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு வசந்த மண்டபப் பூசையுடன் ஆரம்பமாகி பிற்பகல் 3 மணிக்கு சுவாமி தேரில் வீதி வலம் வருவார்.

நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சுவாமி பித்தர் கேணிக்குத் தீர்த்த மாடச் செல்வார். அதனைத் தொடர்ந்து மகேஸ்வர பூசை இடம்பெறும். கொடியி றக்கம் இரவு 7 மணிக்கு நடைபெற்று சண்டேஸ்வர உற்சவமும் குருக்களின் ஆசீர் வாதமும் இடம்பெறும். (வ)

★★★

சாவகச்சேரி வடக்கு கண்ணகை அம்பாள் (சோலை அம்மன்) ஆலயபெருந்திருவிழா இன்று வியாழக் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்து தினங்கள்இடம்பெறும். எதிர்வரும் 11ஆம் திகதி தேர்த் திருவிழாவும், மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். சிவஸ்ரீ க.கிருபானந்தக் குருக்கள் தலைமையில் திருவிழா கிரியைகள் இடம் பெறும். (க-9)

★★★

சித்தன்கேணி தனுவோடைப்பதி சிவன் ஆலயத்தின் மூன்றாம் வீதியில் ஐந்து தேர்கள் ஒரே வேளையில் வீதி உலாவரும்காட்சி இன்று வியாழக் கிழமை இடம்பெறவுள்ளது.

ஐந்து தேர்களிலும் பிள்ளையார், நடராஜர், சிவகாமி அம்மன், முருகன், சண்டேஸ்வரர் என்ற ஒழுங்கில் வீதி உலா வரும் காட்சி இடம்பெறும். (க-50)

★★★

சித்தன்கேணி அருள்மிகு ஸ்ரீநாக கன்னியம்மன் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் இன்று வியாழக் கிழமை ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 11ஆம் திகதி வெள்ளிக் கிழமைவரையும் 10 நாள்கள் உற்சவம் தொடர்ந்து இடம்பெறுவதோடு பூசை வழிபாடுகளும், அன்னதானமும் இடம் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க)

★★★

மல்லாகம் கோட்டைக்காடு அருள்மிகு சாளம்பை முருகமூர்த்தி தேவஸ்தானத்தின் வருடாந்த மஹோற்சவம் நாளை வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. எதிர் வரும் 8ஆம் திகதி மாம்பழத் திருவிழாவும், 10ஆம் திகதி வேட்டைத் திருவிழாவும், 12ஆம் திகதி சப்பரத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன. மேலும் 13ஆம் திகதி தேர்த் திரு விழா வும், மறுநாள் 14ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறுவதுடன் மறுநாள் பூங்காவனத் திருவிழாவும், 18ஆம் திகதி வைரவர் பொங்கலும் இடம்பெறவுள்ளன. (க)

### தமிழ் மொழித் தினவிழா

தென்மராட்சி, ஜூலை 3

தென்மராட்சி கல்வி வலயத்தின் தமிழ்மொழித் தின விழா இன்று வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரி மண்டபத்தில் இடம்பெறும்.

வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வடமாகாண கல்விப் பணிப்பாளர் ஆ.இராஜேந்திரனும், சிறப்பு விருந்தினராக மாகாண கல்வி அமைச்சின் உதவிச் செயலாளர் திருமதி செலின் சுகந்தி செபஸ்ரியனும் கலந்து கொள்வர். (க-9)

### ஜோதிலிங்க தரிசனம்

பிரம்மகுமாரிகள் இராஜயோக நிலையத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள ஜோதிலிங்க தரிசனம் இன்றும், நாளையும் வவுனிக்குளம் சிவன் கோயிலில் காலை 6 மணி முதல் இரவு 8 மணிவரை இடம்பெறவுள்ளது. இந்த ஜோதி லிங்க தரிசன நிகழ்வில் இந்தியாவின் மகிமை வாய்ந்த 12 ஜோதிலிங்கங்களில் ஒன்றான சோமநாதர் ஆலயத்தின் ஜோதி லிங்க்ம் பக்தர்கள் தரிசனத்துக்காக வைக்கப்படவுள்ளது. மேலும் இராஜயோக பட விளக்கக் கண்காட்சியும் மனச்சாந்தி தரும் தியான அனுபவமும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத் தக்கது. (க)

### அழகியல் கண்காட்சி

செங்குந்த இந்துக் கல்லூரியின் அழகியல் கண்காட்சி இன்று வியாழக்கிழமை காலை 9 மணியளவில் அதிபர் க.தருமகுலசிங்கம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இதில் முதன்மைவிருந்தினராக உதவிக் கல்விப் பணிப்பாளர் (அழகியல்) திருமதி க.ஜெயபாலசிங்கம் கலந்துகொள்வார். சிறப்பு விருந்தினர்களாக ஆசிரிய ஆலோசகர்களான து.துஷ்யந்தன், திருமதி அ.இராஜபாரதி, திருமதி சா.தர்மராஜா, திருமதி சா.விஜயகுமார் ஆகியோர் கலந்துகொள்வார்கள். (க)


## மரண அறிவித்தல்

### திருமதி கௌசல்லியாமதி (கௌசி) ஜெனார்த்தனன்



ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கௌசல்லியாமதி (கௌசி) ஜெனார்த்தனன் 29.06.2014 ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் மதியாபரணம் - காலஞ்சென்ற புஸ்பராணி தம்பதியரின் அன்பு மகளும், ஜெனார்த்தனனின் (பயிற்சியாளர் LOLC)அன்பு மனைவியும், சம்யுக்தா, மிகுதுளன் ஆகியோரின் பாசமிகு தாயும், மதியரசன் (புரூஸ் - லண்டன்), விகர்ணமதி (றோகன் - பிரான்ஸ்), புஸ்பாகரன் (ஜேர்மனி), பிரகாஸ், முகில்வண்ணன், கெலன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.07.2014) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் மு.ப.10.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக ஆனைக்கோட்டை எருக்கலம்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

3ஆம் கட்டை,
ஆனைக்கோட்டை.

(49468)
(12)(3.6)

தகவல்: குடும்பத்தினர்.
தொ.பே.0778812846, 0779069283

## மரண அறிவித்தல்

### சிவகுரு சித்திவிநாயக பிரகாசம் (சோதிடர் P.M)



யாழ்ப்பாணம், ஊரெழுவைப் பிறப்பிடமாகவும், கைலாசபிள்ளையார் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட சிவகுரு சித்திவிநாயக பிரகாசம் (சோதிடர் P.M) நேற்றுமுன்தினம் (01.07.2014)செவ்வாய்க்கிழமை அதிகாலை 4.30 மணியளவில் கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவகுரு - அன்னம்மா தம்பதியரின் புதல்வரும், யாழ்.கொக்குவிலைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - பாக்கியம் தம்பதியரின் மருமகனும், செல்வமலரின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான சிவப்பிரகாசம், அருள்பிரகாசம், செல்வப்பிரகாசம், விநாயகப் பிரகாசம் மற்றும் Dr.செல்வவிநாயகப்பிரகாசம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், சுபாங்கினி, வினோதினி, தபோதினி, பிரபாகினி ஆகியோரின் அன்புத் தந்தையும், கிறிஸ்ரிவிக்டர் (செல்வராஜா - White House), மகேந்திரராஜ், சந்திரராஜ், பகீரதன் ஆகியோரின் அன்பு மாமனாரும், இன்பமலர், அரியமலர், முருகதாஸ், இந்திரஜோதி ஆகியோரின் மைத்துனரும், டிலக்ஷி சஞ்சீவன், கிறிசுபன், சுகன்யா - கயூரன், சுரேஷ் மேனன், லக்ஷ்மன், துஷ்யந்தன், சங்கவி, மகிஷா, மாதேஷ் ஆகியோரின் அன்புப் பேரனும், விட்னி, லூக்கா ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 05.07.2014 சனிக்கிழமை கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, மறுநாள் 06.07.2014 ஞாயிற்றுக்கிழமை மு.ப.9.00 மணிக்கு இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இடம்பெற்று, மு.ப.10.00 மணிக்கு பூதவுடல் தகனக்கிரியைக்காக கல்கிசை மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

இல.05-4/1, 57லேன்,
கொழும்பு - 6.

(50950)
(12)(3.6)

தகவல்: குடும்பத்தினர்
(சுபாங்கினி - மகள்)077 807 7794

## ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம்
20.05.1939

மறைவு
13.07.2013





அமரர் திருமதி
### கனகாம்பிகை சோமசுந்தரம்

( முன்னாள் பிரதி அதிபர், யாழ். வேம்படி மகளிர் கல்லூரி )

திதி:- பூர்வ பட்ச சஷ்டி (03.07.2014)

அன்பின் உருவாய், பண்பின் உறைவிடமாய்,
பாசத்தின் ஊற்றுக் கண்ணாய்
பகலிரவாய் பாடுபட்டு உயிர் காத்து வாழவைத்து
எமை உயர்த்திவிட்ட உத்தமியே!
ஆண்டு ஒன்றென்ன நூறாயினும்
ஆறாது உங்கள் நினைவலைகள் ....

7, மணிக்கூட்டு ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

(49467)

உங்கள் பிரிவால் வாடும்:
குடும்பத்தினர்.

## பண்டத்தரிப்பு பரிஷ் பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் (வ-து)

# பணிநிலை வெற்றிடம்

மேற்படி சங்கத்தில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பதவிக்காக தகைமையுள்ள விண்ணப்பதாரிகளிடமிருந்து வெளிவாரியாக விண்ணப்பம் கோரப்படுகின்றது.

*பொது முகாமையாளர் - 101/06 வெற்றிடம் - 01*

**சம்பளத்திட்டம்** : 11950 - 15300 / 155X10 - 180X10

**தகைமைகள்** : 04/2012இன்படி

அ) கூட்டுறவு ஊழியர் 7ஆவது சம்பளத்திட்டத் திட்டப்பதவியில் ஆகக் குறைந்தது 03 ஆண்டு கால அனுபவம் அல்லது கூட்டுறவு ஊழியர் 8ஆவது சம்பளத்திட்டப் பதவியில் ஆகக் குறைந்தது 06 ஆண்டு கால அனுபவம்.

***அல்லது***

ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக பட்டமொன்றுடன் அல்லது அதற்கு சமனான தகைமை ஒன்றுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் முகாமை மட்டத்திலான பதவியொன்றில் ஆகக் குறைந்தது 08 ஆண்டு கால அனுபவம். இதில் உயர்தர முகாமை மட்டத்திலான பதவியில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால கட்டாய அனுபவம்.

***அல்லது***

இ) கூட்டுறவு ஊழியர் உயர் தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் 06 வருட கால அனுபவம் இதில் சிரேஷ்ட முகாமை மட்டத்திலான பதவியில் ஆகக் குறைந்தது 02 வருட கால அனுபவம் கட்டாயமாகும். க.பொ.த.உயர்தரப் பரீட்சையில் 3 பாடங்களுடனான சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் முகாமை மட்டத்திலான பதவியில் ஆகக் குறைந்தது 10 வருட சேவை ஆற்றிய அனுபவம். இதில் உயர் தர முகாமை மட்டத்திலான பதவியில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால கட்டாய அனுபவம்.

**வயதெல்லை** : 18 - 45 (கூட்டுறவு பணியாளருக்கு வயதெல்லை விலக்களிக்கப்பட்டுள்ளது).

**விண்ணப்ப முடிவு திகதி** : 17.07.2014

மேற்படி பதவிகளுக்கான விண்ணப்பத்தினை சங்கத் தலைமைக் காரியாலயத்தில் ரூபா 10.00 செலுத்தி பெற்று பூரணப்படுத்தி தலைவர், பண்டத்தரிப்பு பரிஷ் பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் என்ற முகவரிக்கு 17.07.2014ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**தலைவர்,**
**பண்.பரிஷ்.ப.நோ.கூ.சங்கம், பண்டத்தரிப்பு**

(சி14863) (12.3.6)

## ஆள்கள் தேவை

கணினி மூலம் அச்சக வேலைகள் செய்யக் கூடிய ஆள்கள் தேவை. திறமைக்கேற்ப தகுந்த ஊதியம் வழங்கப்படும்.

தொடர்பு: கஜசங்கவி சென்ரர் அன் பிறின்டேஸ்
237,கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 7885 / 077 603 1071 (50949) (5,6,3)



## கனடா ஜெயசாயி சூப்பர் சென்ரர்

இடம் மாற்றுவதை முன்னிட்டு 15.06.2014 முதல் இருப்பகற்றல்.
கொள்வனவு செய்யும் அனைத்து விதமான ஆடைகளையும் அதன் விலையில் இருந்து ½ வாசி விலைக்கு பெற்றுக் கொள்ளலாம்.
இல. 114, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
T.P : 021 221 9393



## உணவு உற்பத்தியாளர் மற்றும் உணவு பதனிடல் தொழில் துறையினருக்கான அறிவூட்டல் செயலமர்வு

மேற்படி விடயம் தொடர்பான அறிவூட்டல் செயலமர்வானது எமது மன்றத்தினால் எதிர்வரும் 12.07.2014 திகதி (சனிக்கிழமை) ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது. உணவு பாதுகாப்பு மற்றும் தரக்கட்டுப்பாடு, உணவு ஏற்றுமதி, கழிவுப்பொருள் முகாமைத்துவம் மற்றும் சூழல் பாதுகாப்பு அத்துடன் மேற்படி தொழில் துறையினருக்கான கடன் வசதி திட்டங்கள் முதலான விடயங்களை உள்ளடக்கியதாக மேற்படி செயலமர்வு ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.

இடம் : யாழ்ப்பாணம் வர்த்தக தொழில்துறை மன்றம்
இல. 124, இராசாவின்தோட்டம் வீதி, யாழ்ப்பாணம்
காலம் : 12.07.2014 (சனிக்கிழமை)
நேரம் : காலை 09.00 - பி.ப. 01.30

அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் மேற்படி செயலமர்வில் பங்குபற்ற ஆர்வமுள்ள தொழில்முயற்சியாளர்கள் எதிர்வரும் 10.07.2014 ஆம் திகதிக்கு முன்னர் தமது பங்குபற்றுதலை உறுதிப்படுத்தவும்.

மேலதிக விபரங்களுக்கு அழைக்கவும் 021 222 6609

## பரிசில் வழங்கும் நிகழ்வு

நெல்லியடி கொமர்ஷல் வங்கிக் கிளையில் அருணலு கணக்கு மூலம் கணக்கைப் பேணிவந்த மாணவர்களில் தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த 48 மாணவர்களுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வு இன்று வியாழக்கிழமை காலை 9.30மணிக்கு நெல்லியடி முருகமூர்த்தி ஆலய திருமண மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் அ.சிறீகரன் கலந்துகொள்ளவுள்ளார். சிறப்பு விருந்தினர் களாக அருட்திரு.ஜேமியர் அடிகளார், கொமர்ஷல் வங்கியின் வடபிராந்திய. முகாமையாளர் எஸ்.ரஜீவன் ஆகியோர் கலந்து கொள்வர். (க-173)

# நாய்களுக்கு தடுப்பூசி

யாழ்ப்பாணம், ஜூலை 3

யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லைக்குள் அமைந்த பசார் -1 பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி கீழ்வரும் இடங்களில் வைத்து வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தங்களது வளர்ப்பு நாய்களுக்கு மேற்படி தடுப்பு ஊசியை ஏற்றிக் கொள்ளுமாறு மாநகர சுகாதார வைத்திய அதிகாரி கேட்டுக்கொண்டுள்ளார்.

இன்று வியாழக்கிழமை காலை 9 - 11 மணி வரை நமசிவாயம் பாடசாலை முன்பாக, மு.ப. 11.30 - 1.30 மணி வரை கூழாவியடி வைரவர் கோயிலடி, நாளை வெள்ளிக்கிழமை காலை 9-11 வரை றிம்மர் கோல், மு.ப. 11.30 - 1.30 மணி வரை சிறாம்பியடி ச.சமூகநிலையம். 7 ஆம் திகதி காலை 9-11 மணிவரை பலாலி வீதி இரண்டாம் ஒழுங்கை மு.ப. 11.30 -1.30 மணி வரை யாழ். வீதி, 8 ஆம் திகதி காலை 9-11 மணி வரை பெரு மாள் கோயிலடி, மு.ப.11.30-1.30 மணி வரை றொலெக்ஸ்பேக்கரி,9 ஆம் திகதி காலை 9-11 மணி வரை கன்னாதிட்டி காளி கோயிலடி, மு.ப. 11.30-1.30 மணி வரை சிவன் வடக்கு பாலர் பாடசாலை,10 ஆம் திகதி காலை 9-11 மணி வரை கீரிப் பிள்ளையார் கோயிலடி, மு.ப.11.30-1.30 மணி வரை மாவடி வீதி, 11 ஆம் திகதி காலை 9-11 மணி வரை பிரப்பங்குளம் வீதி, மு.ப. 11.30-1.30 மணி வரை B.A. தம்பி லேன்,14 ஆம் திகதி காலை 9 - 11 மணி வரை கில்னர் வீதி,மு.ப. 11.30-1.30 மணிவரைமானிப்பாய்வீதிசும்திங்கூல்பார். (க)

# INVITATION FOR BIDS
# TEACHING HOSPITAL, JAFFNA.

The Chairman of the Regional Procurement Committee, Teaching Hospital, Jaffna, invite sealed bids from eligible and qualified bidders for the construction and renovation works in the schedule below.

| Work/Service Details | Non-refundable Deposit (Rs.) (Bid fee) | Security Deposit (Rs.) | Validity Period of Bid Security (Days) | Approximate Direct cost of the work (Rs.In million) | Minimum ICTAD Grade |
|---|---|---|---|---|---|
| Renovation of Orthopaedic Workshop | 500.00 | 48,000.00 | 91 | 2.3 | C8 |
| Repair of Roof Ward No 31 | 500.00 | 22,000.00 | 91 | 1.0 | C9 |
| Renovation of Physiotherapy Unit, Renovation of Occupation therapy Unit and Interlock paving Medical Clinic front side | 500.00 | 45,000.00 | 91 | 2.2 | C8 |
| Renovation of Eye Male Ward No 19 | 500.00 | 80,000.00 | 91 | 3.9 | C8 |
| Renovation of Eye Female Ward No 15 | 500.00 | 47,000.00 | 91 | 2.3 | C8 |
| Renovation of ENT Clinic and Renovation of Medical Clinic area | 500.00 | 61,000.00 | 91 | 3.0 | C8 |

1. Bidding will be conducted through National Competitive Bidding Procedure
2. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall be registered in the field of building Construction for grade given in the schedule or above with the institute for Construction, Training and Development (ICTAD).
3. Interested bidders can inspect bid forms at the Residence Engineer's Office, CECB, Jaffna during office hours, if necessary.
4. A Complete set of Bidding Documents in English Language may be purchased by Interested Bidders from Director, Teaching Hospital, Jaffna upon producing valid registration book and receipt for the cash payment for the bid fee from 04.07.2014 until at 4.00 pm on 17.07.2014 during office hours. The payment shall be made to the Shroff, Teaching Hospital, Jaffna.
5. Sealed bids shall be delivered to the address below at before 10.00 hrs on 18.07.2014, late bides will be rejected. Bids will be open at Director's Office, Teaching Hospital, Jaffna soon after closing in the presence of bidders' representatives who choose to attend.

**Director (Chairman),**
**Regional Procurement Committee,**
**Teaching Hospital, Jaffna.**
**03.07.2014**

(C/14867)(10.6.3)

## மலிவு விற்பனை

கட்டட, தச்சு Tiles வேலைக்குரிய பழைய புதிய Electrical tools தையல் இயந்திரங்கள் என்பன விற்பனைக்குண்டு. (49457) (5.6.3)

தொடர்பு: 0765 741 627/077 069 0900

## பெயர் மாற்றம்

விசுவமடு மேற்கைச் சேர்ந்த ரெங்கசாமி தர்மராசா ஆகிய நான் இன்றிலிருந்து எனது பெயரை ரெங்கசாமி ரமேஸ்குமார் என்று மாற்றம் செய்கின்றேன். எனது சகல நடவடிக்கைகளும் ரெ.ரமேஸ்குமார் என்று இருக்கும்.

தகவல்:ரெ.ரமேஸ்குமார்
விசுவமடு மேற்கு. (441309) (5.6.3)

## உடன் தேவை

யாழ்நகரில் இயங்கும் நகைக்கடை ஒன்றுக்கு க.பொ.த.உயர்தரத்தில் வர்த்தகம் படித்த பெண்பிள்ளை கணக்காளராக கடமை புரியஉடன் தேவை. (49470) (5.6.3)

தொடர்பு: 077 0204 656

## மாபிள் பதித்தல்

உங்கள் வீடுகளுக்கு மிகவும் அழகாகவும் நேர்த்தியாகவும் அனுபவமுள்ளவர்களால் மாபிள் பதித்துத் தரப்படும்.

ஒரு சதுர அடி ரூபா 35/= (45569) (5.6.3)

விபரங்களுக்கு: 078 462 5621

## காணி விற்பனைக்கு

கொழும்புத்துறை 5ஆம் குறுக்குத் தெருவில் நிலபரப்பு-2 குழி 3 கொண்ட காணி,கிணறு, மலசலகூடம், சுற்றுமதில் அடங்கலாக உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு:021 205 1013

(49469)(5.6.3)



இங்கிலாந்தின் கட்டுப்பாட்டில் இருந்த ஹொங்கொங், சீனாவின் கட்டுப்பாட்டுக்குள் வந்ததன், 17ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு, ஹொங்கொங்கில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற பிரமாண்டமான பேரணியில் ஐந்து லட்சம் பேர் பங்கேற்றனர். இங்கிலாந்து வசமிருந்த ஹொங்கொங், 1997 ஆம் ஆண்டு ஜூலை முதலாம் திகதி சீனாவின் கட்டுப்பாட்டுக்கு மாற்றப்பட்டது. அது தொடர்பான உடன்படிக்கையில், 2047ஆம் ஆண்டுவரை ஹொங்கொங் சீனாவின் ஆளுமையின் கீழ் இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆயினும் சீனாவின் நேரடி ஆளுகை மற்றும் அடக்குமுறைகளுக்கு எதிராக ஹொங்கொங் மக்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர். இந்த நிலையில், ஹொங்கொங் சீனக் கட்டுப்பாட்டில் வந்ததன் 17ஆவது ஆண்டு விழாவை, ஹொங் கொங் நகர மக்கள் வெகுவாகக் கொண்டாடினர். ஐந்து லட்சம் பேர் பங்கேற்ற அந்த பேரணியில், கூடுதல் சுதந்திரம், ஜனநாயகம் வேண்டும் என்று அவர்கள் கோஷம் எழுப்பினர். (ற)

## குண்டு வெடிப்பு

### நைஜீரியாவில் 15 பேர் சாவு

மைதகுரி, ஜூலை 3

நைஜீரியாவின் வடகிழக்குப் பகுதி நகரான மைதகுரியில், சனநெருக்கடி மிகுந்த ஒரு அங்காடிப் பகுதியில் இடம்பெற்றுள்ள ஒரு குண்டுவெடிப்பில் குறைந்தது 15 பேர் உயிரிழந்துள்ளனர். அடுப்புக்கரி நிரப்பப்பட்டிருந்த ஒரு வாகனத்தில் இந்தக் குண்டு பதுக்கி வைக்கப்பட்டு வெடிக்க வைக்கப்பட்டுள் ளது என்று முதற்கட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

இந்தத் தாக்குதலுக்கு யார் காரணம் என்று இதுவரை தெளிவாகத் தெரியவில்லை. ஆயினும் மைதுகுரிப் பகுதியில் அவசரகால உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தாலும், இஸ்லாமியத் தீவிரவாதக் குழுவான போக்கோ ஹறாம் அந்தப் பகுதியில் செயற்பட்டு வருகின்றது. இந்தத் தாக்குதலை அந்த அமைப்பே செய்திருக்கக் கூடும் என்று சந்தேகிக்கப்படுகின்றது.

அதேவேளை, போக்கோ ஹறாமின் புலனாய்வு வலையமைப்பைத் தகர்த்து அதன் தலைவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று நைஜீரிய அதிகாரிகள் தெரிவித்திருந்துள்ளனர்.

கடந்த ஏப்ரல் மாதம் வடகிழக்கு நைஜீரியாவில் சுமார் 300 பாடசாலை மாணவிகள் கடத்தப் பட்ட சம்பவத்துடன் தொடர்புபட்டவர், என்று அடையாளம் காணப்பட்டுள்ள பாபுஜி யாரீ என்ற நபரே கைது செய்யப்பட்டுள்ளார் என்று அந்தநாட் டுப் பாதுகாப்பு அமைச்சகப் பேச்சாளர் மேஜர் ஜெனரல் கிறிஸ் ஒலுகொலாடே தெரிவித்துள்ளார். (ற)



# முஸ்லிம் மக்களின் மீது பௌத்தர்கள் தாக்குதல்

## மியான்மரில் பெரும் பதற்றம்



மியான்மரின் ரன்கைன் மாகாணத்தில் இரு மதத்தவருக்கும் இடையே ஏற்கனவே பலதடவைகள் முரண்பாடுகள் நடந்துள்ளன.

மண்டலே, ஜூலை 3

மியான்மரின் இரண்டாவது பெரிய நகரான மண்டலேயில் முஸ்லிம்களுக்குச் சொந்தமான கடைகளும், ஒரு பள்ளிவாசலும் பௌத்தர்களால் தாக்கிச் சேதப்படுத்தப்பட்டுள்ளன. சுமார் 500க்கும் மேற்பட்ட பௌத்தர்கள், மூங்கில் கட்டைகள் மற்றும் இரும்புக் கம்பிகளுடன் தாக்க முயன்றனர் என்றும், அவர்களைத் தடுப்பதற்குப் பொலிஸார் பெரும் பிரயத்தனம் மேற்கொண்டனர் என்றும் அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த வன்முறைகளில் முஸ்லிம் ஒருவர் சுடப்பட்டார் என்றும், மூன்று பௌத்தர்கள் காயமடைந்தனர் என்றும் உள்ளூர் செய்திகள் கூறுகின்றன.

மியான்மரின் மேற்குப் புற மாகாணமான ரக்கைன் மாகாணத்தில், கடந்த மூன்றாண்டுகளாகவே, பெரும்பான்மைப் பௌத்தர்களுக்கும், சிறுபான்மை முஸ்லிம் சமுகத்துக்கும் இடையே மதரீதியான வன்செயல்கள் இடம்பெற்றிருக்கின்றன.

இந்த மோதல்களில் 2012 ஆம் ஆண்டில் மட்டும், ரக்கைன் மாகாணத்தில் குறைந்தது 200 பேர் கொல்லப்பட்டிருக்கிறார்கள். (ற)

## அந்தரத்தில் தொங்கிய பயணிகள்

பாரிஸ், ஜூலை 3

பிரான்ஸ் நாட்டில் ஆல்ப்ஸ் மலையில் அமைக்கப்பட்டுள்ள கேபிள் கார் சேவை திடீரெனத் தடைப்பட்டது. அதிலிருந்த பயணிகள் பயத்தால் அலறினர். இந்தச் சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

பிரான்ஸின் க்ரனோபில் பகுதியில் 7 பயணிகளுடன் சென்ற 4 கேபிள் கார்கள் நடுவானில் திடீரெனதடைப்பட்டு, பாதையை விட்டு கீழே இறங்கியுள்ளன. அதனையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த அவசர சேவைகள் ஹெலிகொப்டரின் மூலம் சில பயணிகளை பத்திரமாக மீட்டுள்ளனர். சுமார் 3 மணி நேரப் போராட்டத்துக்குப் பின்னர் கயிறுகளின் உதவியுடனும் சிலரைக் கீழே இறக்கிக் காப்பாற்றியுள்ளனர். இதுகுறித்து பயணிகள் கூறுகையில்;

"எங்களது வாழ்வில் இந்த அனுபவத்தை எப்போதும் மறக்க முடியாது. கயிற்றில் ஹெலிகொப்டரின் மூலம் எங்களை தூக்கியமை திருப்தியாக இல்லை"- என்று தெரிவித்துள்ளனர். (ற)

## ஈராக் நாடாளுமன்ற கூட்டத்தில் முடிவில்லை

பாக்தாத், ஜூலை 3

ஈராக்கின் பல இடங்களில் ஆயுதக் குழுவினரோடு சண்டை நடந்து வரும் நிலையில், அந்த நாட்டு நாடாளுமன்றம் கூடியபோது, புதிய அரசு குறித்து ஒருமித்த கருத்து ஏற்படவில்லை.

நேற்றுமுன்தினம் கூடிய கூட்டத்தில் புதிய சபாநாயகரைத் தேர்வு செய்யும் முயற்சி தோல்வியில் முடிந்தது. ஈராக்கின் நாடாளுமன்றத்தை பொறுத்த வரையில் சன்னிப் பிரிவைச் சேர்ந்தவரே சபாநாயகராக நியமிக்கப்படுவார். ஷியாப் பிரிவைச் சேர்ந்த இரு துணை சபாநாயகர்கள் நியமிக்கப்படுவர்.

இந்நிலையில் நேற்றைய கூட்டத்தின் போது சபாநாயகரைத் தேர்வு செய்வதற்கான ஒருமித்த கருத்து எட்டப்படவில்லை.

அதேவேளை ஆயுதக்குழுவினர் இஸ்லாமிய நாடு குறித்த அறிவிப்புவெளியிட்டுள்ளநிலையில் நாட்டின் பல பகுதிகளை மீட்க இராணுவத்தினர்கடும்சண்டையிட்டு வருகின்றனர். (ற)

## நீதிபதிக்கு சிறை

### பணம் பெற்று தீர்ப்பை மாற்றினாராம்

லண்டன், ஜூலை 3

இந்தோனேஷியாவில் தேர்தல் வழக்குகளில் தீர்ப்பை மாற்றுவதற்காக 50 லட்சம் டொலர் இலஞ்சம் வாங்கியமைக்காக அரசியலமைப்பு நீதிமன்ற முன்னாள் நீதிபதிக்கு ஆயுள் தண்டனை விதித்து திங்கட்கிழமை தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

குற்றஞ்சாட்டப்பட்ட முன்னாள் நீதிபதி அகில் முக்தார், பிராந்திய தேர்தல் வழக்குகள் தொடர்பாக இதுவரை மொத்தம் 54 லட்சம் டொலர்களை இலஞ்சமாகப் பெற்றுள்ளார் என்று கூறப்படுகின்றது.

கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம், ஒரு தொழிலதிபர் மற்றும் அமைச்சர் ஆகியோரிடம் இருந்து இரண்டரை இலட்சம் டொலர் இலஞ்சம் பெற்ற மைக்காக ஊழல் தடுப்பு அதிகாரிகளால் அகில் கைது செய்யப்பட்டார். (ற)

## தாக்குதலை தொடங்கியது உக்ரைன்

கீவ், ஜூலை 3

உக்ரைனில் ரஷ்ய ஆதரவு கிளர்ச்சியாளர்களுடனான போர் நிறுத்தம் தோல்வியில் முடிந்ததையடுத்து அந்தநாட்டு இராணுவம் நேற்று மீண்டும் தாக்குதலை ஆரம்பித்துள்ளது.



பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருக்கும் உக்ரைன் இராணுவத்தினர்.

இது குறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள உக்ரைன் ஜனாதிபதி பெட்ரோ போரோஷென்கோ, "உக்ரைனில் அமைதியை நிலைநாட்டுவதற்காக கிளர்ச்சியாளர்களுடனான போர் நிறுத்தம் அறிவிக்கப்பட்டது. ஆனால், கிளர்ச்சியாளர்களோ புதிய குழுக்களை தங்களுடன் சேர்த்துக்கொள்ளவும், ரஷ்யாவிடம் இருந்து கனரக ஆயுதங்களை வாங்கி சேமித்துக்கொள்ளவும் அதனை ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொண்டனர். போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறி 100 முறை கிளர்ச்சியாளர்கள் தாக்குதலில் ஈடுபட்டனர். இந்தச் சூழ்நிலைகளை ஆராய்ந்த பின்னரே போர் நிறுத்தத்தை நீடிப்பதில்லை என்று தீர்மானிக்கப்பட்டது"- என்று தெரிவித்துள்ளார்.

இந்தநிலையில், உக்ரைன் நாடாளுமன்றத்தில் அவைத் தலைவர் அலெக்சாண்டர் துர்சினோவ் நேற்று உரையாற்றுகையில்; "கிளர்ச்சியாளர்களின் நிலைகள் மற்றும் அவர்கள் ஆதிக்கம் நிறைந்த பகுதியில் உக்ரைன் இராணுவம் தீவிர தாக்குதல்களை ஆரம்பித்துள்ளது" - என்று கூறியுள்ளார். (ற)

# இந்தியாவை மிரட்டுகின்றது எல் -நினோ

## பருவ மழைகள் பின்தள்ளிப் போகலாமாம்

புதுடில்லி, ஜூலை 3
எல்-நினோ என்றழைக்கப்படும் வெப்ப நீரோட்டத்தால் இந்த ஆண்டு இந்தியாவில் பருவமழை குறையும் என்றும் அதனால் கடும் வறட்சி ஏற்படலாம் என்றும் ஆஸ்திரேலிய வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது.

பசிபிக் கடலின் மேற்பரப்பில் நிலவும் வெப்பம்தான், இந்திய வானிலை மாற்றங்களைத் தீர்மானிக்கிறது. இந்த வெப்ப நிலை சீராக இருந்தால், இந்தியாவின் வானிலை வழக்கப்படி இருக்கும். இல்லாவிட்டால் மாறுதல் ஏற்பட்டு, கடும் வறட்சியோ, அல்லது அதிக மழை வீழ்ச்சியோ ஏற்படும். ஒவ்வொரு ஆண்டும் மேற்கு பசிபிக் கடலோர வெப்ப அளவு மற்றும் கடல் அழுத்தத்தை கணக்கிட்டு, இந்தியாவின் பருவ நிலை கணக்கிடப்படுகிறது.

இந்த நிலையில், இந்த ஆண்டுக்கான எல்-நினோவின் தாக்கம் அதிகரித்துக்கொண்டே செல்கிறது. இந்தியாவில் பருவமழை பெய்ய வேண்டிய மாதங்களில், எல்-நினோவின் நிலைப்பாடு அச்சமூட்டுவதாக உள்ளது. இது குறித்து ஆஸ்திரேலிய வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள ஒரு அறிக்கையில், 'வளி மண்டலத்தில் தற்போது ஏற்பட்டுள்ள மாற்றங்களின் அடிப்படையில் எல்-நினோ வழக்கத்துக்கு முன்னதாகவே உருவாகலாம். இதனால், எல்-நினோ நீண்ட நாள்கள் இருந்து, பருவநிலையில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தலாம்.' என்று கூறப்பட்டுள்ளது. (ற)


### சோனியாவுக்கு வருமான வரித்துறை அழைப்பு

புதுடில்லி, ஜூலை 3
காங்கிரஸ் கட்சியின் அதிகார பூர்வ பத்திரிகையான 'நேஷனல் ஹெரால்டில்' வருமான வரி மீளாய்வு தொடர்பாகவும், சொத்துக்களை பரிமாற்றம் செய்தபோது வருமான வரி விலக்குப் பெற்றதாகவும் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ள நிலையில், சோனியா மற்றும் ராகுலுக்கு அதுகுறித்து கடிதம் அனுப்ப வருமான வரித்துறை முடிவு செய்துள்ளது.

நேஷனல் ஹெரால்டில் காங்கிரஸ் தலைவர் சோனியா, துணைத் தலைவர் ராகுல் உட்பட மூத்த தலைவர்கள் பங்குதாரர்களாக இருக்கும் நிலையில், பத்திரிகையின் சொத்துக்களை வாங்க கட்சி நிதியைப் பயன்படுத்தியதாக சுப்ரமணியம் சுவாமி தாக்கல் செய்த வழக்கில் நீதிமன்றம் இருவருக்கும் அழைப்பாணை அனுப்பியிருந்தது. (ற)

### ராசா விசாரணை முடிந்தது

புதுடில்லி, ஜூலை 3
2ஜி முறைகேடு தொடர்பாக, முன்னாள் மத்திய அமைச்சர் ராசாவிடம், குற்றச்சாட்டு பதிவு நேற்று இரண்டாவது நாளாக, டில்லி, சி.பி.ஐ. சிறப்பு நீதி மன்றில் நடைபெற்றது. நேற்றுடன் ராசா மீதான குற்றச்சாட்டு பதிவு நிறைவுபெற்றது. தி.மு.க. சட்டமன்ற உறுப்பினரான கனிமொழியின் குற்றச்சாட்டு, அண்மையில் பதிவு செய்யப்பட்டது. (ற)



பஞ்சாப், ஜலந்தரில் பெய்துவரும் தொடர் மழை காரணமாக ஏற்பட்டுள்ள வெள்ளத்தின் ஊடாக மோட்டார் சைக்கிள் ஓட்டிச் செல்லும் பொலிஸ் அதிகாரி ஒருவர். (ற)

# பா.ஜ.கவையும் உளவறிந்தது அமெரிக்கா

## இந்தியா அழைப்பாணை

புதுடில்லி, ஜூலை 3
2012ஆம் ஆண்டில், பா.ஜ.கவை, அமெரிக்க உளவு நிறுவனமான என்.எஸ்.ஏ., (தேசிய பாதுகாப்பு நிறுவனம்) உளவு பார்த்த விடயம் தற்போது அம்பலமாகியுள்ள நிலையில், அது குறித்து விளக்கம் அளிக்க வேண்டும் என்று இந்தியாவுக்கான அமெரிக்க தூதருக்கு இந்திய மத்திய அரசு அழைப்பாணை அனுப்பி உள்ளது.

அமெரிக்காவில் இருந்து வெளியாகும் 'வொஷிங்டன் போஸ்ட்' பத்திரிகை, என்.எஸ்.ஏ. உளவுப் பிரிவு முன்னாள் அதிகாரி ஸ்நோடன் கொடுத்த தகவல்களின் அடிப்படையில், இந்தியாவில் பா.ஜ.க, பாகிஸ்தானில் பாகிஸ்தான் மக்கள் கட்சி, எகிப்தில் முஸ்லிம் சகோதரத் துவ கட்சி போன்ற சில கட்சி களை அமெரிக்காவின் என்.எஸ்.ஏ. உளவு பார்த்தது என்று கடந்த 30ஆம் திகதி செய்தி வெளியிட்டிருந்தது. வெளிநாட்டு நிகழ்வுகளை ஆய்வு செய்தல் என்ற பெயரில் இந்த உளவு நடந்தது என்றும், அதற்காக அமெரிக்க சட்டப்படி, நீதிமன்றில் அனுமதி பெறப்பட்டது என்றும் அந்தப் பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

### 193 நாடுகளில் உளவு

அமெரிக்காவின் என்.எஸ்.ஏ., 193 நாடுகளில் உள்ள, குறிப்பிட்ட சில கட்சிகளை உளவு பார்த்துள்ளது. அதேவேளையில், பிரிட்டன், கனடா, ஆஸ்திரேலியா மற்றும் நியூஸிலாந்து ஆகிய நாடுகளுடன் அமெரிக்கா செய்து கொண்ட ஒப்பந்தங்களின்படி, அந்நாடுகளில் இதுபோன்ற உளவுப் பணி மேற்கொள்ளப்படவில்லை என்றும் கூறப்படுகின்றது.

" அமெரிக்காவின் என்.எஸ்.ஏ. 190 நாடுகளில் உள்ள பல கட்சிகளை வேவு பார்த்துள்ளது. "



### தூதருக்கு அழைப்பாணை

பா.ஜ.கவை அமெரிக்கா உளவு பார்த்தமை அந்தக் கட்சியில் பெரும் அதிர்ச்சி அலைகளை ஏற்படுத்தி உள்ளது. அதையடுத்து, இந்தியாவில் உள்ள அமெரிக்க தூதருக்கு இந்திய மத்திய அரசு அழைப்பாணை அனுப்பி உள்ளது. அதில் உளவு பார்த்தமை குறித்து வெளியான செய்திக்கு விளக்கம் அளிக்க வேண்டும்என்றும், இதுபோன்ற செயல்களை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் எதிர்காலத்தில் இதுபோன்ற நடவடிக்கைகள் இடம்பெறாது என்று அமெரிக்கா உறுதி அளிக்க வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற)



ஜம்மு காஷ்மீர் மாநிலம் அமர்நாத் குகைக் கோயிலில் உள்ள பனி லிங்கத்தைத் தரிசிக்க ஆண்டுதோறும் யாத்திரிகர்கள் ஜம்மு வழியாக பயணம் செய்வார்கள். அதன்படி இந்த ஆண்டும் அமர்நாத் யாத்திரை தொடங்கி உள்ளது. கடந்த மாதம் 28ஆம் திகதி தொடங்கிய இந்த ஆண்டுத் தரிசனத்தின் நான்காவது நாளான நேற்றுமுன்தினம் மட்டும் 15 ஆயிரத்து 812 யாத்திரிகர்கள் பனி லிங்கத்தைத் தரிசித்து வழிபாடு செய்துள்ளனர். கடந்த 4 நாள்களில் 50 ஆயிரத்து 528 யாத்திரிகர்கள் தரிசனம் செய்துள்ளனர் என்றும் அமர்நாத் ஆலயத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (ற)

# கச்சதீவு ஒப்பந்தத்தை இரத்துச் செய்க

## ம.தி.மு.க. பொதுச் செயலர் வைகோ வலியுறுத்து

சென்னை, ஜூலை 3
கச்சதீவு ஒப்பந்தத்தை இரத்துச் செய்ய வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார் ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ.

கச்சதீவு தொடர்பாக வழக்கொன்றில் இந்திய மத்திய அரசு உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த மனுவில், கச்சதீவுப் பகுதியில் இந்திய மீனவர்கள் மீன்பிடிப்பதற்கு உரிமையில்லை என்று தெரிவித்திருந்தது. அதுகுறித்து வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே வைகோ இவ்வாறு வலியுறுத்தியுள்ளார். அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

"கச்சதீவு தொடர்பான ஒரு வழக்கில் சென்னை உயர்நீதி மன்றத்தில் மத்திய வெளியுறவுத்துறை மற்றும் பாதுகாப்புத் துறை அமைச்சகம் சார்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பதில் மனு, தமிழக மக்களுக்கும், குறிப்பாக தமிழ்நாட்டு மீனவர்களுக்கும் கடும் அதிருப்தியையும் வேதனையையும் ஏற்படுத்தி இருக்கின்றது.

1974 இல் இலங்கைக்குத் தாரை வார்க்கப்பட்ட கச்சதீவு பகுதியில் மீன்பிடிக்கும் உரிமை தமிழக மீனவர்களுக்கு இல்லை, இங்கே ஓய்வு எடுப்பதற்கும், மீன் பிடி வலைகளை உலர்த்தவும், அந்தோனியார் ஆலயத் திருவிழாவில் பங்கு ஏற்பதற்கும் மட்டுமே கச்சதீவு ஒப்பந்தம் வகை செய்கிறது என்று இந்திய அரசின் சார்பில் அதிகார பூர்வமாக உயர்நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டு இருக்கின்றது.

ஜூன் 24, 1974 ஆம் ஆண்டில், செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தத்தில் அதன் உறுப்பு 5, கச்சதீவுக்குச் செல்ல இந்திய



வைகோ

மீனவர்களுக்கும், அங்குள்ள அந்தோனியார் கோயிலில் வழிபாடு செய்யச் செல்பவர்களுக்கும் எப்போதும் உள்ள உரிமையின் அடிப்படையில் சென்று வர உரிமை உண்டு. அதற்கான பயண ஆவணங்களோ, இலங்கையின் விசா அனுமதியோ தேவை இல்லை என்று கூறுகிறது.

1976 மார்ச் 23 அன்று அப்போதைய இந்திய வெளியுறவுச் செயலர் மற்றும் இலங்கை வெளியுறவுச் செயலாளர் ஆகிய இருவரும் கையொப்பமிட்ட ஒப்பந்தம் இந்தியாவின் உரிமையை இலங்கைக்கு விட்டுக் கொடுத்து விட்டதாக இலங்கை கூறி வருகிறது. இந்திய அரசின் நிலைப்பாடும் அதுதான் என்பதை மத்திய அரசின் பிரமாணப் பத்திரம் உணர்த்துகிறது.

இரண்டு நாடுகளுக்கு இடையே உடன்பாடு ஏற்பட்ட காலத்தில் உள்ள நிலைமை பின்னர் மாறுமானால், செய்து கொண்ட உடன்பாட்டையும் இரத்துச் செய்யலாம் என்று பன்னாட்டுச் சட்ட விதிகள் கூறுகின்றன. இந்திய அரசு தமிழக மீனவர்களின் உயிருக்கும், வாழ்வாதார உரிமைக்கும் உத்தரவாதம் கிடைப்பதற்கு, பன்னாட்டுச் சட்ட விதிகளின்படி கச்சதீவு ஒப்பந்தத்தை இரத்துச் செய்து, கச்சதீவை மீட்பது மட்டுமே ஒரே தீர்வு என வலியுறுத்துகிறேன்" - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

# சுனந்தா சாவு தொடர்பில் ராஜ்நாத்துக்கு விளக்கம்

புதுடில்லி, ஜூலை 3
முன்னாள் மத்திய அமைச்சர் சசி தரூரின் மனைவி சுனந்தா புஷ்கரின் சாவு தொடர்பாக, இதுவரை மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் குறித்து, மத்திய உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங்கிடம் விளக்கமளிக்கப்பட்டுள்ளது. சுனந்தாவின் சாவு, திட்டமிடப்பட்ட ஒன்று என்று பா.ஜ.க. மூத்த தலைவர் சுப்பிரமணியம் சாமி கூறியிருந்த நிலையில், அவரது பிரேத பரிசோதனை அறிக்கை திருத்தப்பட்டுள்ளது என்று வந்துள்ள தகவல் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இந்த விவகாரம் குறித்து சசி தரூர் கருத்துக் கூற மறுத்துவிட்டார். (ற)

## கொக்கோடெக் கண்காட்சி 7ஆம் திகதி

கொழும்பு.ஜூலை 3

தெங்கு அபிவிருத்தி அமைச்சு ஆசிய பசிபிக் தெங்கு உற்பத்தி நாடுகளுடன் இணைந்து ஏற்பாடு செய்துள்ள 46ஆவது கொக்கோடெக் கண்காட்சி எதிர்வரும் 7ஆம் திகதி தொடக்கம் 11ஆம் திகதி வரை பண்டாரநாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது .

இந்தத் தகவலை தெங்கு அபிவிருத்தி அமைச்சர் ஜகத் புஷ்பகுமார தெரிவித்தார்.

இந்தமாநாட்டில் 27 நாடுகளைச் சேர்ந்த 156 பிரதிநிதிகள் கலந்துகொள்ளவுள்ளனர். (ச)



அரச சேவை ஆணைக்குழுவை நியமிக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை அலரிமாளிகையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் ஆணைக்குழுவுக்கு நியமிக்கப்பட்டவர்களுடன் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ காணப்படுகின்றார். இந்த ஆணைக்குழுவில் ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதியரசரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான சத்யா ஹெட்டிகே, எஸ்.சீ.மாணப்பெரும, ஆனந்த செனவிரத்ன ,எஸ்.எச்.பத்திரண ,எஸ்.தில்லை நடராஜா, எஸ்.ஏ.மொஹமட் நஹியா, காந்தி விஜேதுங்க ,சுனில்.ஏ.சிறிசேன, வைத்திய நிபுணர் சொய்சா குணசேகர ஆகியோர் அங்கத்துவம் வகிக்கின்றனர்.

# பொருளாதாரத் தடை விதிக்கப்படும் அபாயம்

## ஆளும்கட்சிக் கூட்டத்தில் ஆராய்வு

கொழும்பு.ஜூலை 3

இலங்கை மீது பொருளாதாரத் தடை விதிக்கப்படும் சாத்தியம் தொடர்பாக, பேருவளையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நடந்த, ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களின் கூட்டத்தில் ஆராயப்பட்டுள்ளது என்று கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

இறுதிப் போரின் போது இழைக்கப்பட்ட மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க்குற்றங்கள் தொடர்பாக, ஐ.நா மனித உரிமை ஆணையாளர் அலுவலகத்தால் மேற்கொள்ளப்பட்டு வரும் விசாரணையின் விளைவாக, பொருளாதாரத் தடை விதிக்கப்படும் சாத்தியம் குறித்தே, இந்தக் கூட்டத்தில் முக்கியமாக ஆராயப்பட்டது என்று அரசியல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.



ஆளும் கட்சிக் கூட்டத்தில் கலந்து கொண்டோர்

இந்தக் கூட்டத்தில் கருத்து வெளியிட்ட ஒருவர், இலங்கை போர்க்குற்ற விவகாரம், ஐ.நா பாதுகாப்புச் சபைக்கு கொண்டு செல்லப்படக் கூடும் என்று சுட்டிக்காட்டியிருந்தார்.

அதற்கு, வேறு சில உறுப்பினர்களோ பாதுகாப்புச் சபையில் சீனாவும், ரஷ்யாவும். இலங்கையை மீட்க வரும் என்று குறிப்பிட்டனர்.

அதேவேளை, ரஷ்யாவை அதிகமாக நம்பக்கூடாது என்றும் சுட்டிக்காட்டப்பட்டது. சில ஆண்டுகளுக்கு முன்னர் பொலிவியா விடயத்தில் ரஷ்யா கண்டுகொள்ளாமல் இருந்து விட்டதும் நினைவூட்டப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார, நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிக்க வேண்டும் என்று கோரியிருந்தார்.

அதற்கு இது பொருத்தமான நேரமல்ல என்று சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் பலரும் வாதிட்டனர்.

இந்தக் கூட்டத்தில் விலைவாசி உயர்வு தொடக்கம் இனப் பதற்றம் வரை அனைத்து விடயங்கள் குறித்தும் விவாதிக்கப்பட்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ச)

## அளுத்கம பிரதேசத்தில் விசேட தேடுதல்கள்

### தாக்குதலுக்கு பயன்படுத்திய ஆயுதங்களை கண்டுபிடிக்க

கொழும்பு.ஜூலை 3

அளுத்கம மற்றும் பேருவளை. பிரதேசங்களில் மறைத்து வைக்கப்பட்டுள்ளதாக சந்தேகிக்கப்படும் ஆயுதங்களை கண்டுபிடிப்பதற்காக பொலிஸ் விசேட அதிரடிப்படையுடன் இணைந்து பொலிஸார் விசேட தேடுதல் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலு வலகம் தெரிவித்தது.

அளுத்கம மற்றும் பேருவளை பிரதேசங்களிழ் அண்மையில் இடம்பெற்ற மோதல்களில் பல கடைகள், வீடுகள் சேதப்படுத்தப்பட்டதோடு பலர் காயமடைந்துமிருந்தனர்.



கோப்புப்படம்

இந்த நாசகார வேலைகளுக்கு பயன்படுத்தப்பட்ட கைக்குண்டுகள், இரும்புத்தடிகள் மற்றும் ஆயுதங்களை பொலிஸ் நிலையங்களிலோ, பொதுவான இடமொன்றிலோ கையளிக்குமாறு பொலிஸார் ஒலிபெருக்கி மூலம் கடந்த வாரம் அறிவித்திருந்தனர். உரிய காலத்தினுள் ஆயுதங்களை கையளிப்பவர்களுக்கு எதிராக எந்தவித சட்ட நடவடிக்கையும் எடுக்கப்பட மாட்டாது என்று பொலிஸார் அறி வித்திருந்தனர்.

ஆயுதங்களை கையளிக்க வழங்கப்பட்டிருந்த காலக்கெடு முடிவடைந்துள்ள நிலையில் அளுத்கம, பேருவளை, தர்கா நகர் பகுதிகளில் தேடுதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## எரிபொருள் தரமில்லாததால் திருப்பி அனுப்ப நடவடிக்கை

### பெற்றோலிய கூட்டுத்தாபனம் தெரிவிப்பு

கொழும்பு.ஜூலை 3

வெளிநாட்டிலிருந்து தருவிக்கப்பட்ட 20 ஆயிரம் மெற்றிக் தொன் எரிபொருள் உரிய தரத்திலில்லாததால் அதனை மீளத் திருப்பியனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பெற்றோலிய கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

மின் உற்பத்திக்காக கப்பலில் தருவிக்கப்பட்ட எரிபொருளை பரீட்சித்த போது அதில் சல்பர் அளவு குறைவாக இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது. அதனையடுத்தே எண்ணெயைத் திருப்பி அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று பெற்றோலிய கூட்டுத்தாபனம் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை -கடல் கொந்தளிப்பாக காணப்படுவதால் கப்பல் மூலம் நுரைச்சோலை அனல் மின் நிலையத்துக்கு நிலக்கரி எடுத்து வருவதில் பாதிப்பு ஏற்படும் என்று தெரிவிக்கப்படுகிறது. (ச)

## தேரருக்குத் தொடர்ந்து விளக்கமறியல்

ஜாதிக பல சேனா அமைப்பின் தலைவர் வட்டரக்க விஜித தேரரை எதிர்வரும் 7 ஆம் திகதி வரை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்த வழக்கு நேற்று புதன்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே, பாணந்துறை நீதிவான் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.



பொலிஸாரிடம் பொய்யான முறைப்பாட்டை வழங்கியதாக வட்டரக்க விஜித தேரர் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளதாகவும், இதுகுறித்த விசாரணைகள் இன்னும் நிறைவடையவில்லை என்றும் நீதிமன்றத்தில் பொலிஸார் குறிப்பிட்டனர். அதனையடுத்தே மீண்டும் அவரை விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டுள்ளார். (ச)

# சமூக ஒருமைப்பாட்டு வாரம் 14 முதல் 21ஆம் திகதிவரை

## அமைச்சர் வாசுதேவ நாணயக்கார அறிவிப்பு

கொழும்பு.ஜூலை 3

சமூக ஒருமைப்பாட்டு வாரம் எதிர்வரும் 14ஆம் திகதி முதல் 21ஆம் திகதி வரை நாடளாவிய ரீதியில் நடத்தப்படவுள்ளது.

சமூக ஒருமைப்பாட்டினூடாக தேசிய ஐக்கியம் என்ற தொனிப்பொருளில் இந்த வருடம் சமூக ஒருமைப்பாட்டு வார நிகழ்வுகள் முன்னெடுக்கப்படவுள்ளன என்று தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

தேசிய ஒருமைப்பாடு தொடர்பான கொள்கை 2012ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்டு ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டதுடன், 2012 ஆம் ஆண்டு முதல் தேசிய ஒருமைப்பாட்டு வார நிகழ்வுகள் நாடு முழுவதிலும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

2014 ஆம் ஆண்டு சமூக ஒருமைப்பாட்டு வாரத்தின் முக்கிய அம்சங்களாக வட மாகாணத்தில் கிளிநொச்சியிலும், சப்ரகமுவ மாகாணத்தில் குருவிட்ட பிரதேசத்திலும் அமைச்சின் மத்திய நிலையங்கள் இரண்டு அமைக்கப்படவுள்ளன.

ஒருமைப்பாட்டு வார நிகழ்வுகள் எதிர்வரும் 14ஆம் திகதி பொலநறுவைக்கான ஆய்வு சுற்றுலாவுடன் ஆரம்பமாகின்றது எதிர்வரும் 15ஆம் திகதி கிளிநொச்சியில் மத்திய நிலையம் அமைக்கும் பணிகள் ஆரம்பிக் கப்படும்.

சமூகத்தில் ஒதுக்கப்பட்ட மக்களை பொது இடங்களில் உள்ளடக்கி சகலரையும் ஒரே மட்டத்துக்குக் கொண்டுவரும் நோக்கிலேயே சமூக ஒருமைப்பாட்டு வேலைத்திட்டங்களை அரசு முன்னெடுத்துள்ளது என்று அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

கணவனை இழந்த பெண்கள், புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெறாத மாணவர்கள் என பல்வேறு தரப்பினர் பல மட்டங்களில் சமூகத்திலிருந்து ஒதுக்கப்படுகின்றனர்.

இவ்வாறான விடயங்களைத் தடுப்பதே அரசின் பிரதான நோக்கமாகவுள்ளது. ஒருமைப்பாட்டு வாரத்தில் 'புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றவிருக்கும் வசதியற்ற மாணவர்களுக்கு செயலமர்வுகள் நடத்தப்படவுள்ளன.



வாசுதேவ நாணயக்கார

அவற்றின் ஊடாக சமூகத்திலிருந்து அவர்கள் ஒதுக்கப்படுவதைத் தடுக்க முடியும் என்று அமைச்சர் மேலும் தெரிவித்தார். 25 மாவட்டங்களையும் உள்ளடக்கும் விதமாக மொழிச் சங்கங்கள் மூலம் சமூக ஒருமைப்பாட்டு நிகழ்ச்சித்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது என்று அமைச்சர் கூறினார். (ச)

# கடல் அலையில் இருந்து மின்சாரம்


## 10 ஆம் வகுப்பு மாணவன் கண்டுபிடித்தார் இயந்திரத்தை

பழைய பொருள்களைக் கொண்டு கடல் அலையிலிருந்து மின்சாரம் தயாரிக்கும் இயந்திரத்தை உருவாக்கி அலகா பாத்தைச் சேர்ந்த 10 ஆம் வகுப்பு மாணவரொருவர் சாதனை படைத்துள்ளார். டில்லி பப்ளி பாடசாலையில் கல்வி பயின்ற வரும் சுதான்சு என்ற இந்த மாணவர் ரூ.4 ஆயிரம் செலவு செய்து இந்த இயந்திரத்தைத் தயாரித்துள்ளார். கடல் அலையிலிருந்து மின்சாரம் தயாரிக்கும் இந்த இயந்திரம் தயாரித்த மின்சாரத்தை சேமிக்கவும் செய்கிறது. இந்த இயந்திரத்தை கடற்கரையின் சமமான பகுதியில் வைத்துவிட்டால்,

ஒவ்வொரு அலையும் அதன்மீது மோதிச் செல்லும் போது ஒரு வோல்ட் மின்சாரம் உற்பத்தியாகிறது. அந்த மின்சாரம் டைனமோ வழியாக பற்றரியில் சேமிக்கப்படுகிறது. இந்த இயந்திரத்தை ஆறுகள் மற்றும் ஏரிகளிலும் பொருத்த முடியும்.

இந்த இயந்திரத்துக்கு 'ஷீ-ஷோர் எலக்ட்ரோ ஜெனரேட்டர்' என்று பெயரிட்டுள்ளார் சுதான்சு. இந்தக் கண்டுபிடிப்புக்காக அவருக்கு 'சைல்டு சைன்டிஸ்ட்' சான்றிதழும் வழங்கப் பட்டுள்ளது.

அவரது இயந்திர வகையை சிறு சிறு மாற்றம் செய்தால் வணிக ரீதியாக அதனைப் பயன்படுத்த முடியும் என்று தொழிலதிபர் ராஜீவ் நாயர் தெரிவித்தார்.





## மிகப் பெரிய எக்ஸ்– கதிர் தொலைநோக்கி அமைக்க முடிவு

ஐரோப்பிய விண்வெளி நிறுவனத்தின் அறிவியல் நிகழ்ச்சியில் மிகப் பெரிய எக்ஸ் கதிர் விண்வெளி தொலைநோக்கி அமைப்பது தொடர்பாக முடிவெடுக்கப்பட்டுள்ளது. இதுவரை உள்ள தொலைநோக்கிகளை விட மிகப் பெரிதாக இதனை அமைப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. 12 மீற்றர் நீளமும் 5 தொன் நிறையுடையதுமாக இதனை உருவாக்கி 2028 ஆம் ஆண்டில் இதனைப் பயன்டுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

## 15 மில்லியன் டொலர்களுக்கு ஏலம்போன வானவில் சுரங்கப்பாதை





பீற்றர் டொயிக் என்பவரால் உருவாக்கப்பட்ட ரொறொன் ரோவிலுள்ள வீதியோர வானவில் சுரங்கப்பாதை ஒன்றின் ஓவியம் 15.5 மில்லியன் டொலர்களுக்கு ஏலத்தில் விற்பனையாகி உள்ளது.

லண்டனைச் சேர்ந்த Sotheby's, ரொறொன்ரோ டொன்வலி நடை பாதையில் உள்ள வானவில் சுரங்கபாதையின் இந்த ஓவியத்தைப் பிரிட்டன் பவுன்ஸ் 8,482,500 கனேடிய டொலர்கள் 15,481,453 இற்கு திங்கட்கிழமை ஏலத்தில் தட்டிக்கொண்டுள்ளது. Countrydrock (wingdmirror), என்ற தலைப்பை கொண்டு ஒயிலால் கன்வசில் பெயின்ட் செய்யப்பட்ட இந்த ஓவியம் 1999 இல் உருவாக்கப்பட்டது.

ஸ்கொட்லாந்தில் பிறந்து மொன்றியல் மற்றும் ரொறொன் ரோவில் வதியும் பீற்றர் டொயிக் என்பவரே இதை பெயின்ட் செய்தவராவார்.

## டுவிட்டரை வாங்க பேஸ்புக் முயற்சி..



குறும்பதிவு சேவையான டுவிட்டரை சமூக வலைப்பின்னல் சேவையான பேஸ்புக் வாங்குவதற்கு முற்பட்ட செய்தியில் சுவாரசியமான தகவல் வெளியாகியுள்ளது. சில ஆண்டுகளுக்கு முன் இந்தக் கோரிக்கையுடன் பேஸ்புக் தங்களை அணுகியதாகவும், ஆனால் அதை ஏற்காமல் நிராகரித்துவிட்டதாகவும் டுவிட்டர் இணை நிறுவனரான பிஸ் ஸ்டோன் பேட்டி ஒன்றில் கூறியிருந்தார்.

சமூக ஊடகங்களின் இரு தூண்கள் என்று சொல்லப்படக் கூடிய வகையில் பேஸ்புக்கும் டுவிட்டரும் பிரபலமாகி இருக்கின்றன. இரு நிறுவனங்களுமே பங்குச் சந்தையில் நுழைந்திருக்கின்றன. இரு நிறுவனங்களுமே வளர்ச்சி பாதையிலும் அதற்கான வழிகளிலும் கவனம் செலுத்தி வருகின்றன.

குறிப்பாக பேஸ்புக் எதிர்கால கணக்குகளுடன் புதிய வசதிகளை அறிமுகம் செய்து வருவதுடன் தனக்கு வலுச்சேர்க்கக்கூடிய இணைய நிறுவனங்களையும் செயலிகளையும் கையகப்படுத்தி வருகிறது.

இளைய தலைமுறையை கவர்ந்த வாட்ஸ் அப் செயலியை பேஸ்புக் வாங்கியதும், அதனைத் தொடர்ந்து மெய்நிகர் சேவையான ஆக்குலஸ் ரிஃப்ட் நிறுவனத்தை பேஸ்புக் வாங்கியதும் இணைய உலகில் பரபரப்பை ஏற்படுத்தியமை நினைவிருக்கலாம்.

இடையே, தானாக அழையும் செய்திகளை அனுப்ப உதவும் ஸ்னேப்சேட் செயலியை பேஸ்புக் வாங்க முற்பட்டதும், அதற்கு 3 பில்லியன் டொலர் தருவதாக கூறியும் கூட ஸ்னேப்சேட் அதை ஏற்க மறுத்ததும் இணைய உலகில் வியப்புடன் பேசப்பட்டது.

இதற்கு சில ஆண்டுகளுக்கு முன்னரே பேஸ்புக், குறும் பதிவு சேவையான டுவிட்டரை விலைக்கு வாங்க முயன்றிருக்கிறது. இந்தத் தகவலை டுவிட்டர் இணைநிறுவுநரானபிச்ஸ்டோன், ஸ்கை நியூஸ் பேட்டியில் கூறியுள்ளார்.

பேஸ்புக் நிறுவுநர் மார்க் ஜக்கர்பர்கே தொடர்பு கொண்டு டுவிட்டரை வாங்க விரும்புவதாக கூறியதாகவும், உடனே மனம் போன போக்கில் 500 மில்லியன் டொலர் விலை கூறியதாகவும் ஸ்டோன் தெரிவித்துள்ளார். இந்த விலையைக் கேட்டு ஜக்கர்பர்க் தானாக விலகி விடுவார் என்று எதிர்பார்த்ததற்கு மாறாக, அவர் அந்த விலையைத் தரத் தயாராக இருப்பதாக மறு நாள் கூறிய போது டுவிட்டர் நிறுவுநர்கள் ஸ்டோன் மற்றும் இவான் வில்லியம்ஸ் அதிர்ச்சியும் ஆச்சரியமும் அடைந்திருக்கின்றனர். ஆனால், நிறுவனம் வளரும் நிலையில் தான் உள்ளது என்று கூறி ஜக்கர்பர்க் கோரிக்கையை நிராகரித்து விட்டனர். டுவிட்டரின் மதிப்பு 23 பில்லியன் டொலர். பேஸ்புக், டுவிட்டரை ஏன் வாங்க முற்பட்டது, டுவிட்டர் ஏன் அதை நிராகத்தது என்பவை சுவாரஸ்யமான கேள்விகள். ஆனால், இணைய உலகைப் பொறுத்தவரை டுவிட்டர், பேஸ்புக் வசமாகாமல் தனித்து நின்றிருப் பது தான் நல்லது என்று தோன் றுகிறது.

## மனிதன் ஞானக் கண்களை ஏன் விருத்தி செய்ய வேண்டும்?

பெறுமதி வாய்ந்ததும் புனிதமானதுமான மனித வாழ்வின் நிறைவுக்கு ஞானக்கண் - ஞானசக்ஷு - ஞான நேத்திரம் மிகவும் அவசியமாகின்றது. ஆத்மஞானம் - தன்னை அறிதலுக்கு மனிதனுக்கு ஞானக் கண் வேண்டும்.

மனிதனாகப் பிறவி எடுப்பது அரிது என அற நூல்கள் கூறியுள்ளன. ஆத்ம ஞானம் இல்லாத மனிதன் மிருகத்துக்குச் சமமானவன், என்று அறநூல்கள் பிரகடனப்படுத்தியுள்ளன.







## பேஸ்புக்கில் அஜித்

தமிழ் சினிமாவில் எல்லையற்ற ரசிகர் பலத்தை கொண்டவர்களில் முன்னிலை வகிக்கும் நடிகர்களில் ஒருவர் அஜித். தற்போது பிரபலங்கள் அனைவரும் தமக்கென சமூக வலைத்தளங் களான பேஸ்புக், டுவிட்டரில் உள்ளனர். சமீபத்தில் கூட விஜய் பேஸ்புக்கில் இணைந்து பேஸ்புக் நிறுவனத்திடமிருந்து உறுதிப்படுத்தல் வாங்கினார். ஆனால் நீண்ட நாள்களாக பல லட்சம் ரசிகர்களின் ஆதரவில் இயங்கிவந்த அஜித்தின் பேஸ்புக் பக்கத்துக்கு இன்று உறுதிப்படுத்தல் வழங்கப்பட்டுள்ளது. இந்தப்பக்கம் அஜித் ரசிகர் ஒருவரால் தான் இயங்கி வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் ரசிகர் ஒருவர் நடத்தும் பக்கத்திற்கு உறுதிப்படுத்தல் கொடுக்கப்பட்டது இதுவே முதன் முறையாம்.

CMYK

# இளைஞர்களின் வெற்றிக்கு அவசியம் நேற்றைய கனவுகள்

## விமர்சனம்

ஒவ்வொரு மனிதனும் வாழ்வில் ஏதேனும் ஒரு சந்தர்ப்பத்திலாவது தோல்வியைச் சந்திப்பவனாகவே காணப்படுகின்றான்.


இளைஞர்கள் தமது வாழ்வின் இலக்குகளை இலகுவாக வெற்றி கொள்ள நேற்றைய நினைவுகள் அவசியமாகின்றன.

ஒவ்வொரு மனிதனும் வாழ்வில் ஏதேனும் ஒரு சந்தர்ப்பத்திலாவது தோல்வியைச் சந்திப்பவனாகவே காணப்படுகின்றான்.

எனினும் ஒரு சிலரால் மட்டுமே அந்தத் தோல்வி மூலம் பெற்றுக்கொண்ட படிப்பினையை மனதில் கொண்டு, தொடர்ந்து முயற்சி செய்து வெற்றி பெற முடிகிறது.

ஒவ்வோர் அனுபவமும் எமக்கு யாதாயினுமொரு படிப்பினையை உணர்த்துகின்றது. ஏட்டுக் கல்வியிலும் பன்மடங்கு சிறந்ததாக இந்த அனுபவ அறிவு எமது வாழ்வை வளம்படுத்துகின்றது.





இந்த அறிவைத் துணை கொண்டு முயற்சியில் ஈடுபடுபவனுக்கு வெற்றி என்பது வெகுதூரத்தில் இல்லை.

நேற்றைய நினைவுகளை வெறுமனே கடந்த காலம் என்று ஒதுக்கி விடாது, எமது முன்னைய செயற்பாடுகளைச் சீர்தூக்கிப் பார்த்து அதன் நிறைகுறைகளை ஆராய்ந்து, தவறுகள் ஏற்பட்டிருப்பின் அவற்றுக்கான காரணங்களைப் புரிந்து கொண்டு, மீண்டும் அவ்வகைத் தவறுகள் ஏற்படா வண்ணம் சிந்தித்துச் செயலாற்றும் ஒருவனால் பன்மடங்கு முன்னேற முடியும் என்பது எவராலும் மறுக்கப்பட முடியாததாகும்.

நாளைய கனவுகள் என்பது மனிதர்கள் அனைவருக்கும் பொதுவானது. இவ்வாறு கனவுகளோ, ஆசைகளோ இல்லாத மனிதரைக் காண்பது மிக அரிது. எனினும் எல்லோராலும் தமது இலட்சியங்களை அடைய முடிவதில்லையே. ஏன் என்று சிந்தித்ததுண்டா? வெறுமனே கனவுகளுடன் நாள்களை வீணடித்தல் அறிவு பூர்வமானதன்று.

நேற்றைய நினைவுகளை மனதில் கொண்டு, இன்றைய பொழுதுகளை செம்மையாக்கி, நாளைய கனவுகளை நனவாக்கிடலாம்.

இந்த வகையில் நேற்றைய நினைவுகளே இளைஞர்கள் வெற்றிக்கு இன்றியமையாதவை என்பது எனது கருத்தாகும்.

*சு. விநோஜி.*
*யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை*

நீங்களும் எழுதலாம்....

இளைஞர்களின் வெற்றிக்கு அவசியம்

நேற்றைய நினைவுகளா? நாளைய கனவுகளா?


உங்கள் காரணங்களை விமர்சனப் பகுதியில் முன் வைத்து விமர்சியுங்கள்

தரமான விமர்சனங்கள் பிரசுரமாகும்.

## எதிலும் கவனம்

* எண்ணங்களைப் பற்றி கவனமாக இருங்கள். அவை வார்த்தைகளாக வெளியேறுகின்றன.
* வார்த்தைகளில் கவனமாக இருங்கள். அவை செயலாக மாறுகின்றன.
* செயல்களில் கவனமாக இருங்கள். அவை ஒழுக்கமாக உயர்கின்றன.
* ஒழுக்கத்தில் கவனமாக இருங்கள். அது எமது வாழ்க்கை திறம்பட அமைய உதவுகின்றன.


*சிந்து சிவதாஸ்*
*ஐங்கரன் வீதி, சுதுமலை.*



## உயிருள்ளவரை....



அன்பே
என் உயிருள்ளவரை
உன் நினைவுகள்-
என்னைத் தாலாட்டும்
அதில் என் மனம்
இன்ப நீச்சலடிக்கும்
காலங்கள் கடந்தாலும்
கல்லறை சென்றாலும்
அழியாத
உன் நினைவுகளுக்கு
என் கண்ணீர்
மட்டுமே அர்ப்பணம்
அடுத்த ஜென்மத்திலாவது
நாம் சேர்ந்து
வாழ்வோமென்பது நிச்சயம்...



## அம்மா..

என் குரல் கேட்க முன்பே
என் முகம் பார்க்க முன்பே
என் அழகை உணரும் முன்பே
என்னை கருவிலே அணுஅணுவாக
ரசித்துப் பூரித்துப் போன ஒரே
ஒரு உயிர் என் தாய்...!

*க. தாட்ஷாயனி*
*கொக்குவில் இந்துக் கல்லூரி.*

## துணிவு இருந்தால் வெற்றி

நம்மிடம் உள்ள திறமைகளுக்கும், எமது வாழ்வின் முன்னேற்றத்துக்கும் தடையாக உள்ளவை அச்சமும், தயக்கமும் தான். நாம் பிறந்தது முதல் இறக்கும் வரை எத்தனையோ பிரச்சினைகளை எதிர்நோக்குகிறோம்.


எந்த ஒரு பிரச்சினைக்கும் சாவு என்பது முடிவல்ல. சகல பிரச்சினைகளுக் கும் ஏதாவது ஒரு தீர்வு நிச்சயம் இருக் கும். "ஒரு கதவு மூடிக் கொண்டால் இன்னொரு கதவு நமக்காய் திறந்து இருக்கும்".

இதனை நாம் முதலில் உணர வேண்டும். எதையும் எதிர்நோக்கும் துணிவு இருந்தால் மட்டுமே பிரச்சினைகளைத் தீர்த்து விடமுடியும்.

பயம் என்ற சொல் பலரின் இதயத் துடிப்பை நிறுத்தி உள்ளது. வாழ்க்கையின் முன்னேற்றத்தைத் தடுத்துள்ளது. பொதுவாகவே பிரச்சினைகள் நமக்குப் பயத்தை உண்டு பண்ணுவதில்லை. அந்தப் பிரச்சினை குறித்து நாம் எண்ணும் விதமே பயத்துக்கு காரணமாகும். இந்த பயமே குறித்த பிரச்சினை தொடர்பான மற்றைய பிரச்சினைகளுக்கும் வித்திடுகிறது.



பயம் என்பது எமது வாழ்வை செயலிழக்கச் செய்யும் ஒரு ழுன்நோய். எமது வாழ்க்கையில் எத்தனை தடைகள் வந்தாலும் துணிச்சலுடன் அவற்றுக்கு முகங்கொடுத்து வாழப் பழகிக் கொள்ள வேண்டும். எமது மனதை சூழ்ந்திருக்கும் பயம் எனும் இருளை ஒழிப்போம்! வளமுடன் வாழ்வோம்.



எமது வாழ்க்கையில் எத்தனை தடைகள் வந்தாலும் துணிச்சலுடன் அவற்றுக்கு முகங்கொடுத்து வாழப் பழகிக் கொள்ள வேண்டும்.

## இளைஞர், யுவதிகளே!

உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும் பிரச்சினைகள் பற்றிப் பேசவும் தேடல்களுக்குத் தீனி போடவும் இளவல்கள் வட் டம் என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இந்தப் பகுதிக்கான உங்கள் படைப்புக்களையும் ஏதாவது சந்தேகங்களையும் விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.

பெயர் :-..........................................

முகவரி :-......................................

..........................
திகதி

..........................
கையொப்பம்

**இளவல்கள் வட்டம்** ,
உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


# மீதி வயல்களையும் விடுவியுங்களேன்

## கேப்பாப்புலவு விவசாயிகள் இராணுவத்திடம் வேண்டுகோள்

முல்லைத்தீவு,ஜூலை 3
முல்லைத்தீவு, கேப்பாப்புலவில் இதுவரை விடுவிக்கப்படாத சுமார் 160 ஏக்கர் வயல் காணிகளை விடுவித்து பயிர்ச் செய்கை மேற்கொள்வதற்கான அனுமதியை பெற்றுத் தருமாறு விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**முல்லைத்தீவு, கேப்பாப்புலவு பகுதியில் பொதுமக்களுக்கு சொந்தமான சுமார் 1,500 ஏக்கர் நிலப் பரப்பை இராணுவம் ஆக்கிரமித்து வைத்துள்ளது.**

முல்லைத்தீவு, கேப்பாப்புலவு பகுதியில் பொதுமக்களுக்குச் சொந்தமான சுமார் 1,500 ஏக்கர் நிலப்பரப்பை இராணுவம் ஆக்கிரமித்து வைத்துள்ளது. இந்தப் பகுதி மக்கள் வேறு இடங்களில் மாற்றுக் காணிகளில் குடியேற்றப்பட்டுள்ளனர்.
இந்த நிலையில் கேப்பாப்புலவில் உள்ள வயற்காணிகளில் குறிப்பிட்ட ஒரு பகுதி இதுவரை விடுவிக்கப்படவில்லை. அதனால் தமது விவசாயச் செய்கை பாதிக்கப்பட்டுள்ளது என்று அந்தப் பகுதி மக்கள் கூறினர்.
கடந்த இரு மாதங்களுக்கு முன்னர் 24 விவசாயிகளுக்குச் சொந்தமான குறித்த குளத்தின் கீழ் உள்ள நெற்செய்கைக் காணிகளை அதன் உரிமையாளர்களிடம் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ கையளித்துள்ளார்.
எஞ்சியுள்ள ஐம்பது விவசாயிகளுக்கான காணிகள் இதுவரை விடுவிக்கப்படவில்லை.
பயிர்ச் செய்கை மேற்கொள்வதற்காக குறித்த வயற் காணிகளை பெற்றுத் தருமாறு அந்தப் பகுதி விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-55)


திருவிழா நடைபெற்றபோது...

## அந்தோனியாருக்கு திருவிழா

முல்லைத்தீவு,ஜூலை 3
செல்வபுரம், முல்லைத்தீவு கிராமத்தில் புதிதாக அமைக்கப்பட்ட புனித அந்தோனியார் ஆலயத்தின் திருவிழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.
இந்த ஆலயம் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத் தலைவர் எஸ்.மரியநாயகம் பூலோகம், செயலர் எஸ்.சுரேஸ் ஆகியோரின் முயற்சியாலும் பொது மக்களின் பங்களிப்பாலும் உருவாக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச)

## முள்ளந்தண்டு பாதிக்கப்பட்டோருக்கு கிளிநொச்சியில் சிகிச்சை நிலையம்

### வடமாகாண சுகாதார அமைச்சர் தெரிவிப்பு

கிளிநொச்சி,ஜூலை 3
கிளிநொச்சி, பழைய மருத்துவமனைக் கட்டடத்தில் முள்ளந்தண்டுபாதிப்புக்கு உள்ளானவர்களுக்கான சிகிச்சை நிலையம் ஆரம்பிக்கப்படவுள்ளது என்று வடமாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் தெரிவித்தார்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-
மாற்று வலுவுள்ளோரில் முள்ளந்தண்டு பாதிக்கப்பட்டவர்களுக்காக வவுனியாவில் வைகறை என்ற பெயரில் நிலையம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
அங்கு 20 பேர் தங்கி சிகிச்சை பெறக்கூடிய அனைத்து வசதிகளும் செய்யப்பட்டுள்ளன.
முள்ளந்தண்டு பாதிக்கப்பட்டவர்களுக்கான மேலதிக வசதியாக கிளிநொச்சி, பழைய மருத்துவமனையில் சிகிச்சை நிலையமொன்றை ஆரம்பிக்கவுள்ளோம்.
தற்போது கிளிநொச்சி மாவட்டத்தில் முள்ளந்தண்டு பாதிக்கப்பட்டவர்கள் தங்கிநின்று சிகிச்சை பெறவேண்டுமானால் கிளிநொச்சி பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் மருத்துவர் ப.கார்த்திகேயனுடன் தொடர்புகொண்டால் முள்ளந்தண்டு பாதிப்புக்கு உட்பட்ட வர்களுக்கான சிகிச்சைகள் வழங்க வசதிகள் செய்யப்படும்.
உணவு, தங்குமிடம், இயல் மருத்துவம், உளவளத் துணை உட்பட அனைத்து வசதிகளும் செய்யப்படும்- என்றார். (ச-18)

## தகுதிகள் இல்லாததால் நியமனம் இல்லை

வவுனியா, ஜூலை 3
வவுனியா நகரசபையில் ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றிய 7 தொழிலாளர்களையும் ஏற்கனவே நிரந்தர நியமனத்துக்கு உள்வாங்குவதற்கான நடவடிக்கையை ஆளணிக்கு அமைவாக எடுத்திருந்தோம். எனினும் அவர்கள் நிரந்தர நியமனத்துக்கு உள்வாங்குவதற்கான புள்ளிகளை பெறத் தவறியதால் தெரிவு செய்யப்படவில்லை என்று வவுனியா நகர சபை செயலர் சி.சத்தியசீலன் தெரிவித்தார்.
வவுனியா நகரசபையில் நிரந்தர நியமனம் வழங்கப்படாமையால் பாதிக்கப்பட்ட 7 தொழிலாளர்களும் நிரந்தர நியமனம் கோரி நகரசபைக்கு முன்பாக கவனவீர்ப்புப் போராட்டத்தில் நேற்றுமுன்தினம் ஈடுபட்டனர். இது தொடர்பாக வவுனியா நகரசபை செயலர் சி.சத்தியசீலனிடம் கேட்டபோதே அவர் இவ்வாறு கூறினர்.
இந்த 7 பேரும் ஏற்கனவே எமது சபையால் அமைய அடிப்படையில் டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கைக்காக கடந்த 2012 ஆம் ஆண்டு வேலைக்கு சேர்த்துக்கொள்ளப்பட்டவர்கள் இவர்களுடைய சேவைக் காலத்தை ஒவ்வொரு வருடமும் நாம் புதுப்பித்துக் கொள்கின்றோம். அவர்கள் புள்ளி அடிப்படையில் தெரிவு செய்யப்படாததால் குறித்த ஆளணி வெற்றிடம் முழுமையாக நிரப்பப்பட்டுவிட்டது என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச-402)


புதுப்பொலிவுடன் சமுர்த்தி வங்கி

## முள்ளியவளையில் சமுர்த்தி வங்கி

### ரூ.2.5 மில்லியன் செலவில் நிர்மாணம்

முள்ளியவளை,ஜூலை 3
முள்ளியவளை சமுர்த்தி வங்கிச் சங்க கட்டடம் 2.5 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் முள்ளியவளை பிரதான வீதி அருகே நிர்மாணிக்கப்பட்டுள்ளது.
இந்த வங்கி விரைவில் திறந்து வைக்கப்படவுள்ளது என்று வங்கி முகாமையாளர் தெரிவித்தார்.
முல்லைத்தீவு சமுர்த்தி வங்கிச் சங்கத்துக்கான புதிய கட்டடமும் கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்துக்கு அருகே நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது.
இந்தக் கட்டடத்தின் நிர்மாணப் பணிகள் பூர்த்தியாகும் நிலையில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-102)

## குளங்கள், கிணறுகள் வற்றின ஒட்டுசுட்டானில்

ஒட்டுசுட்டான், ஜூலை 3
ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் நிலவும் கடும் வறட்சியால் குளங்கள், கிணறுகள், ஆறுகள் என்பன நீரின்றிக் காணப்படுகின்றன.
அதனால் கால்நடைகள் தண்ணீர் தேடி அலைந்து திரிகின்றன. கிணறுகளில் நீர் வற்றியுள்ளதால் குடிதண்ணீருக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவி வருகிறது என்று மக்கள் தெரிவித்தனர்.
ஒட்டுசுட்டான் மருந்தகத்தில் உள்ள கிணறுகளில் ஒரு கிணற்றில் மட்டுமே போதுமானளவு தண்ணீர் உள்ளது.
ஏனைய மக்களின் வீடுகளிலுள்ள கிணறுகளில் தண்ணீர் வற்றிப் போயுள்ளது.
மேட்டுப் பிரதேசத்தில் வசிப்பவர்கள் தண்ணீர் பெறுவதற்காக நீண்ட தூரம் அலைகின்றனர் என்று கூறப்படுகிறது.
எனவே கால்நடைகளுக்காக முத்துஐயன்கட்டு குளத்து தண்ணீரைத் திறந்து விடும்படி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-500)


முள்ளியவளை காட்டு விநாயகர் சனசமூக நிலைய கலையரங்கில் கலைத்தாய் நாடக மன்றத்தால் நடத்தப்பட்ட பண்டாரவன்னியன் வரலாற்று நாடகத்தின் காட்சியைக் காணலாம். (ச-102)

## அக்கராயனில் பஸ் தரித்து நிற்க இதுவரை அனுமதி இல்லை

### 6 மாதங்கள் கடந்தும் நிலைமை இது என்கிறார் துணுக்காய் பிரதேச செயலர்

கிளிநொச்சி,ஜூலை 3
துணுக்காயிலிருந்து பயணிக்கும் தனியார் பஸ் அக்கராயன் சந்தியில் 5 நிமிடங்கள் தரித்துச் செல்வதற்கான அனுமதிக்காக கிளிநொச்சி அரச அதிபருக்கு கடிதம் அனுப்பி 6 மாதங்கள் கடந்த நிலையிலும் அரச அதிபரிடமிருந்து பதில் கிடைக்கவில்லை.
இவ்வாறு துணுக்காய் பிரதேச செயலர் சி.குணபாலன் தெரிவித்தார்.


குணபாலன்

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-
துணுக்காயிலிருந்து பயணிக்கும் தனியார் பஸ்கள் ஆலங்குளம், உயிலங்குளம், கோட்டைகட்டியகுளம், அம்பலப் பெருமாள்குளம், அக்கராயன், கிளிநொச்சி நகரம் ஊடாக யாழ்ப்பாணம் செல்கின்றது.
எனினும் அக்கராயன் சந்தியில் துணுக்காயிலிருந்து பயணிக்கும் தனியார் பஸ் தரிக்க முடியாது என்று கிளிநொச்சி தனியார் பஸ் சங்கம் அறிவித்திருந்தது.
அதனால் துணுக்காயிலிருந்து குறித்த வழித்தடங்களூடாக பயணித்த தனியார் பஸ் தனது பணியை நிறுத்தியதனால் பல கிராம மக்கள் போக்குவரத்து நெருக்கடிகளை எதிர்கொண்டனர்.
அதனையடுத்து அக்கராயன் பகுதியில் தனியார் பஸ் தரித்துச் செல்வதற்கான அனுமதியை பெற்றுத்தருமாறு கிளிநொச்சி அரச அதிபருக்கு கடிதம் அனுப்பியிருந்தும் 6 மாதங்கள் கடந்தும் அரச அதிபரிடமிருந்து பதில் கிடைக்கவில்லை-என்றார். (ச-18)

## உள்ளக வீதி பெரும் சேதம்

மன்னார்,ஜூலை 3
நானாட்டான் பிரதேச செயலகத்துக்குட்பட்ட வெள்ளாளகட்டு கிராமத்தின் உள்ளக வீதி சேதமடைந்துள்ளது.
இந்த வீதி குண்டும் குழியுமாக பயணிக்க முடியாத அளவுக்கு சேதமடைந்து காணப்படுகிறது என்று மக்கள் தெரிவித்தனர்.
இந்த வீதியை புனரமைத்து வழங்க உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச)

## காலநிலைக்கு தகுந்த வகையில் விவசாய உற்பத்திப் பொருள்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 3
வாழ்வின் எழுச்சித் திட்டத்தின் கீழ் இந்த ஆண்டு விவசாய காலநிலை வலயம் ஒவ்வொன்றுக்கும் உகந்த விவசாய உற்பத்திப் பொருள்களே வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இதனூடாக வாழ்வின் எழுச்சித் திட்டத்தை மேலும் வெற்றிகரமாக மாற்ற முடியும் என்று யாழ்.மாவட்டச் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

வாழ்வின் எழுச்சித் திட்டத்தின் கீழ் வருடந்தோறும், வீட்டுத் தோட்டச் செய்கையை ஊக்குவிக்கும் வகையில் மரக்கறி விதைப் பைக்கற்றுக்கள் மற்றும் பழமரக் கன்றுகள் என்பன வழங்கப்பட்டு வருகின்றன. கடந்த 2011 ஆம் ஆண்டிலிருந்து இவ்வாறு வழங்கப்பட்டு வந்தாலும், சில மரக்கறி விதைப் பைக்கற்றுக்கள் மற்றும் பழமரக் கன்றுகள் என்பன வடக்கின் கால நிலைக்கு ஒவ்வாதவையாக இருந்து வருகின்றன.

இதனால் அவை அழிவடைந்து விடுவதுடன், எதிர்பார்த்தளவு விளை பொருள்களையும் கொடுப்பதில்லை. இதனால் வாழ்வின் எழுச்சித் திட்டத்தில் பாதிப்பு ஏற்பட்டு வந்தது. இதனைத் தவிர்க்கும் முகமாக இந்த ஆண்டு வழங்கப்படவுள்ள வாழ்வின் எழுச்சி விதைப் பைக்கற்றுக்களை காலநிலை வலயத்துக்கு ஏற்ப வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

விவசாயத் திணைக்களத்தால் ஒவ்வொரு காலநிலை வலயத்துக்கும் உகந்ததென விதை வகைகள் தீர்மானிக்கப்பட்டுள்ளன. அதற்கமைய ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும், அந்த மாவட்டத்துக்குத் தேவையான, காலநிலைக்கு உகந்த விதைப் பைக்கற்றுக்களை அந்தந்த வலயங்களுக்கு வழங்கவுள்ளதால் உகந்த விதைப் பைக்கற்றுக்களை கோருமாறு பொருளாதார அபிவிருத்தி அமைச்சுக் கோரியுள்ளது. (வ-5)

## குரங்குப் பிரச்சினை குறித்து ஆலோசனை

தென்மராட்சி பிரதேசத்தில் பெரும் சேதங்களை உருவாக்கும் குரங்குகள் தொடர்பான பிரச்சினைகள் குறித்த ஆலோசனைக் கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு மீசாலை 'பழமுதிர்ச் சோலை' மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (வ-9)



குடாநாட்டில் தற்போது காணப்படும் அதிகரித்த வெப்பமான காலநிலை நீடிக்கிறது. தாகம் தீர்க்க மனிதர்களும் கால்நடைகளும் தண்ணீர் தேடி அலையும் அவலம். இந்த நிலையில் வெப்பத்தைத் தணிக்க நுங்கு குடிப்பதற்கு இளைஞர்களும் சிறுவர்களும் முண்டியடிப் பதையே காண்கிறீர்கள். (வ-21)

# பொருளாதார இழப்பில் பழச் செய்கையாளர்கள்

அச்சுவேலி, ஜூலை 3
யாழ்.மாவட்டத்தில் பழவகைகளை இரசாயனக் கலவை மூலம் பழுக்கச் செய்து விற்பனை செய்வதால் பொதுமக்கள் அவற்றைப் பயன்படுத்தும் அளவைக் குறைத்துக் கொண்டமையே பழவகைகளின் விலை வீழ்ச்சி அடைந்துள்ளது. இதனால் விவசாயிகள் மற்றும் பழப் பயிர்ச் செய்கையில் ஈடுபடுவோர் தாம் பொருளாதார இழப்புக்கு உள்ளாகி இருப்பதாகக் கவலை தெரிவிக்கின்றனர்.



வாழைப்பழம், மாம்பழம் உள்ளிட்ட பழவகைகள் பெரும்பாலும் இரசாயனக் கலவை தெளிக்கப்பட்டே பழுக்க வைக்கப்படுகின்றன. அவற்றை உண்பதால் உடல் நலத்துக்கு கேடு விளைவிப்பதோடு தொற்றா நோய்கள் சில உண்டாகின்றன என்ற கருத்தும் மேலோங்கி உள்ளது. இதனால் பொதுச் சந்தைகளில் மற்றும் பழ வியாபாரிகளிடம் பழ வகைகளை விரும்பிய அளவுக்குக் கொள்வனவு செய்து உண்ணும் வழக்கம் குறைவடைந்துள்ளது.

யாழ்.மாவட்டத்தில் கறுத்தக் கொழும்பான் மாம்பழம் ஒன்று 10-15 ரூபா விலையிலும், இதரை, கதலி வாழைப்பழத்தின் விலை கிலோ ஒன்று 10-12 ரூபா விலையிலும் பலாப்பழத்தின் விலை பெரியது 125-150 ரூபா வகையிலும் நடுத்தரம் 80-50 ரூபா வரையிலும் விற்பனையாகின்றது.

சந்தைகளின் பழவகைகள் விற்க முடியாத அளவுக்கு தேங்கிக் கிடப்பதோடு குறிப்பிட்ட தினங்களில் கழிவுகளாக அள்ளி வீசப்படுவதும் உறவினர் மற்றும் நண்பர்களுக்கு அன்பளிப்பாக பரிமாறப்படுவதும் நடைபெற்று வருகின்றன.

சில சந்தைகளில் வாழைக் குலைக்குப் பகிரங்கமாக இரசாயன கலவைகள் தெளிக்கப்படுவதைக் காணக் கூடியதாக உள்ளது. மாங்காயைக் குத்தகையாக மரத்தோடு கொள்வனவு செய்வோர் இரசாயனக் கலவையைத் தெளித்து மூன்று தினங்களில் பழமாக விற்பனை செய்வதும் மூன்று தின இடைவெளியில் மாம்பழங்களைச் சந்தைக்கு எடுத்துச் செல்லக்கூடிய இடைவெளியில் இரசாயனக் கலவையைத் தெளித்து மாம்பழ வியாபாரத்தை மேற்கொள்வதை மாம்பழ வியாபாரிகள் சிலரும் உறுதி செய்தனர்.

இதேவேளை பொதுமக்களின் நலனைக் கருத்திற் கொண்டு சம்பந்தப்பட்டவர்கள் தர்ம நியாயங்கள் மனச்சாட்சிக்கு கட்டுப்பட்டு நடக்க முன்வர வேண்டும் என்று சமூக நலன் விரும்பி ஒருவர் தெரிவித்தார். (வ-11)

## பனை அபிவிருத்திச் சபையின் அபிவிருத்திக்கு ரூ.176 மில்.

யாழ்ப்பாணம், ஜீலை 3
பனை அபிருத்திச் சபையின் வட 'மாகாண அபிவிருத்தி செயற்றிட்டங்களுக்காக பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுகைத்தொழில் அபிருத்தி அமைச்சால் 176 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இரண்டு வருட செயற்றிட்டத்தில் இந்த வருட செயற்றிட்டத்துக்காக 60 மில்லியன் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

5 மாவட்டங்களையும் உள்ளடக்கி பனைசார் உற்பத்தித் தொழில்களை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

சிறு தொழில் முயற்சியாளர்கள் பயனாளிகளாக உள்வாங்கப்பட்டு அவர்களுக்கான வாழ்வாதார உதவிகள் மற்றும் தொழில் முயற்சிக்கான உபகரணங்கள் என்பன வழங்கும் இந்தச் செயற்றிட்டத்தில் ஏற்கனவே பனைசார் தொழில் முயற்சியாளர்களாக இருக்கும் இளம் உற்பத்தியாளர்கள் பயனாளிகளாகத் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகிய 5 மாவட்டங்களையும் உள்ளடக்கி இந்த செயற்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

பனைசார் உற்பத்தியாளர்களை ஊக்குவித்து பனை வளத்தை மேம்படுத்தி அதனூடாக தொழில் துறையை முன்னேற்றி சந்தை வாய்ப்பை ஏற்படுத்துவதே இதன் நோக்கம்.

இரண்டு வருடங்களை இலக்காக வைத்து மேற்கொள்ளப்படவுள்ள இந்த செயற்றிட்டத்தில் முதற்கட்டமாக 60 மில்லியன் வழங்கப்பட்டுள்ளது. இதற்கான வேலைத்திட்டங்கள் தற்போது ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன. (வ-14)

# மரக்கறிகள், கடலுணவு விலை ஏற்றம் குடாநாட்டில் நுகர்வோர் திண்டாட்டம்

### நேற்று கொட்டடி சந்தையில் மீன் கிலோ 600 ரூபாவுக்கும் அதிகமாகவே விற்பனை

யாழ்ப்பாணம், ஜூலை 3
கடந்த சில வாரங்களாக மரக்கறி வகைகளின் விலைகள் எகிறி நிற்கின்றன. அதே சமயம் கடலுணவுகளின் விலைகளும் திடீரென உயர்ந்துள்ளன. இதனால் நுகர்வோர் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். குறிப்பாக மத்திய தர வர்க்கத்தினர் அன்றாடச் செலவைச் சமாளிக்க முடியாமல் திணறுகின்றனர்.



மரக்கறிகளின் விலை உயர்வு குடாநாட்டில் மட்டுமன்றி, நாடு முழுவதுமே காணப்படுகிறது. காலநிலையில ஏற்பட்டுள்ள மாற்றமே இதற்கு முக்கிய காரணமாகும்.

வடக்கில் குறிப்பாக குடாநாட்டில் கடும் வறட்சி நிலவுகிறது. அதே வேளையில் நாட்டின் அநேக பகுதிகளில் தொடர்ச்சியாக கடும் மழை பெய்து வருகிறது. அதனால் வெள்ளம், மண்சரிவுகள் போன்ற இடர்கள் நீடித்து வருகின்றன.

இவ்வாறான நிலைமையே மரக்கறிகளின் விலையேற்றத்துக்குக் காரணம். குடாநாட்டில் வழமையான கோடை மழை பெய்யாததால் கடும் வறட்சி நிலை காணப்படுகிறது. கிணறுகள், நீர்நிலைகள் வற்றி வறண்டு போயுள்ளன. அதனால் விவசாயிகள் மரக்கறிச் செய்கையைத் தொடர முடியாமல் திண்டாடுகின்றனர்.

தற்போதைய நிலைமையால் சந்தைகளுக்கு குறைந்தளவு மரக்கறிகளே வருகின்றன. அதனால் அவற்றின் விலைகள் உயர்ந்த நிலையில் காணப்படுகின்றன. சகல காய்கறிகளும் கிலோ நூறு ரூபா தொடக்கம் இருநூற்றி எழுபது, இருநூற்றி எண்பது வரையில் விற்பனை செய்யப்படுகின்றன. பொதுவாகவே மரக்கறிகளின் விலைகள் உயர்ந்துள்ள நிலையில், தற்போது ஆலய உற்சவங்கள் நடைபெற்று வருவதும் அவற்றின் விலை மேலும் உச்சம் பெற்றிருப்பதற்கு ஒரு காரணமாக ஆகியுள்ளது.

இதேவேளை பாஷையூர், குருநகர், கொட்டடி, நாவாந்துறை மீன் சந்தைகளில் கடலுணவுகளுக்கும் பெரும் கிராக்கி ஏற்பட்டுளளது.

கொட்டடி மீன் சந்தையில் ஒரு கிலோ மீன் 600 ரூபாவாக நேற்று விற்கப்பட்டது.

தற்போதைய கடும் வெப்பம் மற்றும் காலநிலை வேறுபாடுகளே மீன்கள் பெருமளவில் குறைவடைந்ததற்குக் காரணம் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-17)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## அச்சமடைந்திருக்கிறது கொழும்பு அரசு

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தால் முன்னெடுக்கப்படும் விசாரணைகள் குறித்து கொழும்பு அரசு அலட்சியப் போக்கில் கருத்துக்களைக் கூறி வந்தாலும், அது குறித்து அரசு கடும் கரிசனையையும் ஒரு வித அச்சத்தையும் கொண்டுள்ளது என்பது வெளிப்படையாகவே தெரிகிறது.

பேருவளையில் திங்களன்று நடைபெற்ற கொழும்பு அரசின் ஆளும் தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான கூட்டத்தில் இந்த விடயம் முக்கியமாக ஆராயப்பட்டதில் இருந்து ஆட்சியாளர்களின் அச்சம் வெளிப்பட்டுள்ளது. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலக விசாரணையின் விளைவாகவும், அந்த விசாரணைக்கு ஒத்துழைக்க மறுத்ததன் விளைவாகவும் இலங்கை மீது பொருளாதாரத் தடைகள் விதிக்கப்படுவதற்குச் சாத்தியங்கள் உள்ளனவா என்பது குறித்து அந்தக் கூட்டத்தில் முக்கியமாக ஆராயப்பட்டுள்ளது.

உடனடியாக அத்தகைய சாத்தியங்கள் எவையும் இல்லை என்பது கொழும்பு அரசுக்கும் நன்கு தெரியும். ஐ.நாவின் நடைமுறை என்பது எடுத்தோம், கவிழ்த்தோம் என்று இடம்பெறுவதல்ல. வன்னியில் நடந்த இறுதிப் போரில் ஐ.நா. நடந்துகொண்ட விதம் குறித்து மீளாய்வு செய்வதற்கு அதற்கு மூன்று ஆண்டுகள் எடுத்துக் கொண்டதைப் போலவே, அனைத்து விடயங்களிலும் மிக நிதானமாகவும் ஒவ்வொரு விதிகளையும் அனுசரித்துமே ஐ.நா. நடந்துகொள்ளும்.

எனவே கொழும்பு அரசுக்கு எதிராக நடவடிக்கை எதுவும் எடுப்பதற்கான சாத்தியங்கள் உடனடியாக இல்லை. ஆனால், அரசு விடாப்பிடியாக நின்றால் இன்னும் சில ஆண்டுகளின் பின்னால் அதற்கான சாத்தியங்கள் உருவாகக்கூடும் என்பது உண்மைதான். ஆனால் அதற்கிடையில் செய்து முடிக்க வேண்டிய படிமுறைகள் ஏராளம் உள்ளன.

முதலில் விசாரணை நடத்தப்படும். அதில் இனங்காணப்படும் போர்க் குற்றவாளிகள் அல்லது மனித உரிமைக மீறல்களுக்குப் பொறுப்பானவர்கள் மீது உள்நாட்டில் நடவடிக்கை எடுக்கும்படி கொழும்பு அரசை ஐ.நா. மனித உரிமைகள் சபை கோரும். அந்தக் கோரிக்கையைப் புறந்தள்ளி, நடவடிக்கை எடுக்க அரசு மறுத்தால், குற்றவாளிகளாக இனங்காணப்பட்டவர்களுக்கு எதிராக சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் விசாரணை ஒன்றை நடத்துமாறு சபை கேட்கும். அப்படிக் கேட்பதாயின், அதற்கு ஐ.நா. பாதுகாப்புச் சபையின் அனுமதி பெறப்படவேண்டும் (இந்த இடத்தில்தான் சீனாவும் ரஷ்யாவும் கொழும்பு அரசைக் காப்பாற்றும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது). ஒருவேளை தடைகளை எல்லாம் தாண்டி அனுமதி பெறப்படும் சமயத்தில்தான் இலங்கை மீதான தடைகள் குறித்த விவாதம் ஆரம்பமாகக்கூடும். அதுவரைக்கும் அது பற்றி யாரும் விவாதிக்கப் போவதில்லை.

பொருளாதாரத் தடைகள் பற்றிய கதையாடல்கள் ஆரம்பமாவதற்குக் குறைந்தது இன்னும் இரண்டு ஆண்டுகளாவது காத்திருக்க வேண்டும். இந்த விடயங்கள் அரசுக்குத் தெரியாதவையும் அல்ல. என்றாலும் இப்போதே தடைகள் மற்றும் பாதிப்புக்கள் குறித்து அரசு அலச ஆரம்பித்திருப்பது, அது உள்ளூர அச்சமடைந்திருப்பதைக் காட்டுகிறது. வெளியே என்னதான் வீறாப்புப் பேச்சினாலும் விளைவுகளின் பாரதூரத் தன்மையையும், இலங்கை போன்ற சிறிய நாட்டால் அதனை எதிர்கொள்வது சிரமமானது என்பதையும் அது புரிந்து வைத்துள்ளது.

இப்படி அச்சப்பட்டு அச்சப்பட்டு வாழ்வதைவிட தமிழர்களுடன் நல்லிணக்கத்தை ஏற்படுத்திக்கொண்டு அரசியல் தீர்வு ஒன்றைக் காண்பதே இவை எல்லாவற்றில் இருந்தும் அரசு விடுபடுவதற்கான வழி. தடைகள் வருமா என்று ஆலோசிப்பதை விடுத்து, தடைகளைக் களைய என்ன வழி என்று சிந்திப்பதே சிறந்தது.

# நீதி வழி செல்லுமா அமெரிக்க வல்லரசு?


■ சேரலாதன்

இலங்கையில் இறுதிப்போர் இடம்பெற்றுக்கொண்டிருந்த போது விடுதலைப் புலிகளைத் தோற்கடிப்பதற்கு அமெரிக்கா வழங்கிய ஆதரவு இலங்கை அரசுக்குப் பெரிதும் உதவியது. போரின் இறுதிக் கட்டத்தில் ஆயுதப் பற்றாக்குறை காரணமாகப் பெரும் பின்னடைவைப் புலிகள் எதிர்கொண்டனர். இதற்கு அவர்களுக்குத் தேவை யான ஆயுதங்களை ஏற்றி வந்த கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டமையே காரண மாகும். அமெரிக்கா வழங்கிய துல்லியமான தகவல்களின் அடிப்படையில் இலங்கை அரசினால் அந்தக் கப்பல்கள் சுலபமாகத் தாக்கி அழிக்கப்பட்டன. இந்தியாவும் தனது பங்குக்கு வேண்டிய தகவல்களை வழங்கிக் கொண் டிருந்ததால் புலிகளின் போராட்டம் முடக்கப்பட்டது.

ஆக ஓர் இயக்கமாகச் செயற்பட்ட விடுதலைப் புலிகளை அழிப்பதற்கு பல நாடுகளின் உதவியும், ஒத்துழைப்பும் இலங்கை அரசுக்குத் தேவையாக இருந்தது என்பதுதான் உண்மை. கடந்த 2001 ஆம் ஆண்டு அமெரிக்காவில் இடம்பெற்ற மோசமான தாக்குதல்களின் பின்னர் அரசுகளுக்கு எதிரான உள்நாட்டுத் தரப்புக்களின் நடவடிக்கைகள் யாவற்றையுமே பயங்கரவாதம் என்று முத்திரை குத்திப் பார்ப்பதை அமெரிக்கா வழக்கமாகக் கொள்ள ஆரம்பித்துவிட்டது. விடுதலைப் போராட்டமாக இருந்தாலும் சரி, உரிமைகளுக்கான போராட்டங்களாக இருந்தாலும் சரி அவையாவும் பயங்கரவாதச் செயல்கள் என்றே அமெரிக்கா கருத ஆரம்பித்தது. மேலும் பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கு உதவுங்கள் என இலங்கை அரசு விடுத்த வேண்டுகோள் அமெரிக்காவைப் பொறுத்த வரையில் நன்கு வேலைசெய்ய ஆரம்பித்தது.

உலகில் வல்லமை வாய்ந்த ஜனநாயக நாடு என்று அழைக்கப்படும் அமெரிக்கா ஏனைய நாடுகளின் ஜனநாயக உரிமைகளை மதிப்பதாகத் தெரியவில்லை. பல நாடுகளில் குழப்பத்தை ஏற்படுத்தி வருவது அமெரிக்காதான் என்பது பொதுவான குற்றச்சாட்டாகும். இலங்கையின் இனப்பிரச்சினை குறுகியதொரு கால வட்டத்தைக் கொண்டதல்ல. சுமார் 40 ஆண்டு கால வரலாறு அதற்குண்டு. தமிழர்கள் பல்வேறு காலகட்டங்களில் பெரும்பான்மை இனத்தவர்களால் வன்செயல்களுக்கு உள்ளாக்கப்பட்டனர். இதில் 1983 இல் இடம்பெற்றவை மிகவும் கொடுமையானவை. அரசின் ஆசீர்வாதம் பெற்ற குண்டர்கள் ஈவு இரக்கமற்ற வகையில் தமிழர்களைக் கொன்றனர். தமிழர்களின் சொத்துக்களுக்குப் பெரும் நாசம் விளைவிக்கப்பட்டது. சிறைச்சாலைகளில் அடைத்து வைக்கப்பட்டிருந்த தமிழ்க் கைதிகள் குரூரமான வகையில் சித்திரவதை செய்யப்பட்டுப் பின்னர் கொல்லப்பட்டனர். இவற்றையெல்லாம் அரசு வேடிக்கைபார்த்துக் கொண்டிருந்தது. வன்செயல்கள் மேலும் மேலும் பரவும் வகையில் தூபம்





போடவே அரசினால் முடிந்தது. இவையெல்லாம் நடந்து கொண்டிருந்தபோது உலகின் காவலனெனத் தன்னைக் கூறிக்கொள்ளும் அமெரிக்கா வாயையே திறக்கவில்லை. ஒன்றும் அறியாதது போன்று நடந்து கொண்டது. ஆனால் இறுதிப்போர் நடந்தபோது தமிழர் தரப்பில் பலம் வாய்ந்ததொரு இயக்கமாக உருப்பெற்றிருந்த விடுதலைப் புலிகளை ஒழிப்பதற்கு வரிந்து கட்டிக்கொண்டு உதவிகளை வழங்கியது.



அமெரிக்காவில் தாக்குதல்களை நடத்தினர் என்பதற்காக அல்-கொய்தா அமைப்பினர் மீது அந்த நாடு கடும் வெறுப்பையும், கோபத்தையும் காட்டியமை நியாயமானதே. தனது நாட்டுக் குடிமக்கள் கொல்லப்படுவதை எந்த நாட்டு அரசும் கைகட்டி வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்க மாட்டாது. இதனால் அல்-கொய்தா அமைப்பின் தலைவர் ஒசாமா பின்லாடனுக்கு அடைக்கலமும் உதவிகளும் வழங்கிய தலிபான்களின் ஆட்சியின் கீழ் இருந்த ஆப்கானிஸ்தான் மீது அமெரிக்கா போர் தொடுத்ததைத் தவறு என எவரும் கூற மாட்டார்கள். ஆனால் விடுதலைப் புலிகள் மீது அமெரிக்கா கோபம் கொண்டதற்கான காரணங்கள் புரியவில்லை. புலிகள் அமெரிக்க நாட்டுக்கு எதிராகவோ அல்லது அந்த நாட்டு மக்களுக்கு எதிராகவோ எவ்வித வன்செயலிலும் ஈடுபடவில்லை. அமெரிக்காவின் சொத்துக்களை நாசம் செய்யவில்லை. இந்த நிலையில் இலங்கையின் மறைந்த முன்னாள் வெளி விவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் பரப்புரைக்குள் சிக்குண்டு அமெரிக் காவும், வேறு சில ஐரோப்பிய நாடு களும் புலிகளைத் தடைசெய்தன. ஆனால் தமிழர்களுக்கு எதிரான செயல்களில் ஈடுபட்டுக் கொண் டிருந்த அரசை இந்த நாடுகளால் கண் டிக்கக்கூட முடியவில்லை.

**இலங்கையின் இனப்பிரச்சினை குறுகியதொரு கால வட்டத்தைக் கொண்டதல்ல. சுமார் 40 ஆண்டு கால வரலாறு அதற்குண்டு. தமிழர்கள் பல்வேறு கால கட்டங்களில் பெரும்பான்மை இனத்தவர்களால் வன்செயல்களுக்கு ஆளாக்கப்பட்டனர். இதில் 1983 இல் இடம்பெற்றவை மிகவும் கொடுமையானவை. அரசின் ஆசீர்வாதம் பெற்ற குண்டர்கள் ஈவு இரக்கமற்ற வகையில் தமிழர்களைக் கொன்றனர்.**

இன்று ஐ.நா.மனித உரிமைகள் சபையில் இதே அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை நிறைவேற்றுவதும், விசாரணைக்கு வலியுறுத்துவதும் வேடிக்கையாகவுள்ளது. முன்னைய காலங்களை விட்டுவிட்டாலும் இறுதிப் போரின் போதாவது இந்த நாடுகள் ஆக்க பூர்வமான நடவடிக்கைகளை மேற் கொண்டிருந்தால் பல ஆயிரக்கணக்கான தமிழர்களின் உயிர்கள் காப்பாற்றப்பட்டிருக்கும். ஆனால் எதுவுமே அப்போது இடம் பெறவில்லை. போரை நிறுத்துமாறு அமெரிக்க ஜனாதிபதி விடுத்த வேண்டு கோளைக்கூட இலங்கை அரசு அலட்சியம் செய்தது - அமெரிக்காவின் முகத்தில் கரியைப் பூசியது.

இலங்கையில் மட்டுமல்ல வேறு நாடுகளிலும் அமெரிக்காவின் நடவடிக்கைகள் ஏற்றுக்கொள்ளும்படியாக இல்லை. ஈராக், லிபியா, எகிப்து, ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளில் ஆட்சி மாற்றங்களை ஏற்படுத்துவதற்கு அமெரிக்காவினால் முடிந்ததேயொழிய அந்த நாடுகளில் நிரந்தர அமைதியை ஏற்படுத்த முடியவில்லை. அந்த நாடுகளில் போராட்டங்களும், குண்டு வெடிப்புக்களும் தினமும் இடம் பெற்றவண்ணமே உள்ளன.

இலங்கையிலும் 2009 ஆம் ஆண்டு இறுதிப் போர் இடம் பெற்று, அமைதி ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்ற போதிலும் சிறுபான்மையின மக்கள் நிம்மதியற்ற சூழலிலேயே வாழ்ந்து வருகின்றனர். தமிழ் மக்களில் கணிசமானவர்கள், இன்னமும் தமது சொந்த இடங்களுக்குச் செல்ல முடியாத நிலையில் அவல வாழ்வு வாழ்கின்றனர்.

இதேவேளை - தமிழர் பிரதேசங்களில் திட்டமிடப்பட்டவகையில்பெரும்பான்மையின மக்களின் குடியேற்றம் இடம்பெறுகின்றது. காணி தொடர்பான அதிகாரங்கள்யாவும் மத்திய அரசின் வசம் இருப்பதால் தமிழர்களின் காணிகள் தங்கு தடையின்றி அபகரிக்கப்படுகின்றன.

இது மட்டுமல்லாது இன்னொரு சிறுபான்மை இனத்தவரான முஸ்லிம் மக்கள் மீதும் தாக்குதல் சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன. அளுத்கம, பேருவளை ஆகிய இடங்களில் முஸ்லிம் மக்கள் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். இதை விட நாட்டின் வேறு இடங்களிலும் முஸ்லிம்களைக் குறி வைத்துத் தாக்குதல்கள் இடம்பெறுகின்றன.

அமெரிக்கா போன்ற வல்லரசு நாடுகள் உலகின் எந்த மூலையிலாவது மக்கள் பாதிக்கப்பட்டாலும் அவர்களைக் காப்பாற்ற முன்வர வேண்டும். ஏனைய நாடுகளின் மீதான தாக்குதல்களுக்குத் தயங்காது முடிவெடுக்கும் இந்த நாடுகள் பாதிக்கப்படுபவர்களின் விடயத்தில் அமைதி காத்துக் கொண்டிருப்பது நியாயமாகாது.


இலங்கையைப் பொறுத்தவரையில் அரசு தண்டிக்கப்படவேண்டும் என்பது சிறுபான்மையின மக்களின் எதிர்பார்ப்பல்ல. தமக்கு நீதி கிடைக்க வேண்டும் என்றே அவர்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர்.

க.யாழினி,
யாழ்.பல்கலைக்கழகம்.

# எழுத்துரு தொடர்பான விமர்சனத்துக்கு ஆதாரபூர்வமான விளக்கங்கள்

கடந்த மே மாதம் 29 ஆம் திகதி உதயன் பத்திரிகையில் வெளியான எனது கட்டுரைக்கான விமர்சனத்தை பா.துவார கன் ஜூன் மாதம் 20,21 ஆகிய திகதிகளிலும் முன் வைத்தார். அதற்குத் தெளிவான விளக் கத்தைத் தர விரும்புகின்றேன்.

எந்தவொரு ஆதாரமும் இல்லாமல் நூற்பதிப்புக் களில் உள்ள தவறைச் சரியென்று கூறுவதாக என் மீதான ஒரு குற்றச்சாட்டை முன்வைத்தார். இது தவறான வாதம். இது எந்தவொரு ஆதாரமும் இன்றி எழுதப்பட்டது அல்ல. பல அறிஞர்களின் ஆராய்ச்சி வழி வந்த முடிவை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டது. பாடத்திட்டப் புத்தகம் என்றால் தவறுகள் இருக்கலாம். ஆனால் என்னால் கட்டுரைக்காகத் தொகுக்கப்பட்ட விடயங்கள் பேராசிரியர்களின் ஆராய்ச்சி வழிகண்ட முடிவுகளின் தொகுப்பு. அதாவது பேராசிரியர் ஆ.வேலுப்பிள்ளை அவர்களின் "சாசனமும் தமிழும்" மற்றும் பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்களின் "தமிழில் இலக்கிய வரலாறு" ஆகிய நூல்களிலிருந்து தொகுக்கப் பட்டவை. இதைவிட கல் தோன்றி மண் தோன் றாக் காலத்தே முன் தோன்றிய மூத்தகுடியின் மொழி தமிழ்மொழி என்ற பெருமையை தன் னகத்தே சூடிக்கொண்ட தமிழ்மொழியின் எழுத்துநிலை தொல்காப்பியர் காலந்தொட்டு இன்றைய காலம்வரை எவ்வாறான வளர்ச்சிப்



படிகளைச் சந்தித்துள்ளது என்பதனைத் தெளி வாகத் தந்திருந்தேன். அதாவது பல அறிஞர் களும் பேராசிரியர்களும் மேற்கொண்ட ஆய்வு களை அடிப்படையாகக் கொண்டு ஆரம்பகாலக் கல்வெட்டுக்களிலிருந்து 20 ஆம் நூற்றாண்டு

காலந்தோறும் மாறி வளர்ந்த தமிழ் எழுத்துகள்



வரையான எழுத்துவடிவம் எவ்வாறு இருந்தது என்பதனைத் தெளிவுபடுத்தியிருந்தேன்.


கி.மு.3ஆம் நூற்றாண்டு தொடக்கம் கி.பி.3ஆம் நூற்றாண்டு வரை "ர்" என்ற எழுத்து " ỉ " என எழுதப்பட்டது. இதே காலத்தில் "ர்" என்பது கிரந்த எழுத்தில் " ⌈̇\ " என்றே எழுதப்படுகிறது. பல்லவர் கால ஆரம்பக் கல்வெட்டுக்கள் வரை " ⌈̇\ " என்ற எழுத்தே பயன்பாட்டில் இருந்துள் ளது. மொழி என்பது செய்திப் பரிமாற்று ஊடகம் இந்த வகையில் 'ா்' என்ற எழுத்து எவ்வாறான மாற்றத்தைச் சந்தித்துள்ளது என்பதனை தெளிவான மொழியில் விரிவாகக் கொடுத் திருந்தேன்.

"ா்" என்பது வளர்ச்சிப் படிகளின் வழிகண்ட மாற்றம். இது தவறாகாது என்றும் ஸ்ரீ.ஜ, ஸ,ஷ, க்ஷ, ஹ ஆகிய எழுத்துக்கள் தமிழ் நெடுங் கணக்கில் இல்லாத எழுத்துக்கள் அவையே பயன்படுத்துகின்றபோது வளர்ச்சிப்படிகளின் வழிவந்த "ர்" "ா்" என வடிவத்தால் மட்டும் சிறிதாக மாற்றமடைந்து ஒலி வடிவில் எந்தவித மாற்றமும் இல்லாது அமைந்துள்ள இந்த மாற்றம் தமிழ்மொழியில் எந்தவிதமான தாக்கத்தினையும் ஏற்படுத்தமாட்டது. ஏனெனில் எந்தவொரு பகுத்தறிவாளனும் "ர"வுக்கு உரிய காலை அகற்றமாட்டான். ஏனெனில் மெய் யெழுத்துக்களுடன் ஆகாரம் இணைகின்ற போது கா,ஙா, சா, ஞா,டா, ணா,தா, நா, பா, மா, யா, ரா, லா, வா, ழா, ளா, றா, னா ஆகிய எழுத்துக்கள் வருகின்றன. இவற்றில் உள்ள "ா" மெய் எழுத்துக்களுடன் ஆகாரம் இணை கின்றபோது ஏற்படுகின்ற எழுத்துவடிவ மாற்றத்தினைப் புலப்படுத்துகின்றது. இரு ஒலி வடிவங்களுக்கு ஒரே விதமான எழுத்துவடிவம் காணப்படமாட்டது. இரு வேறு ஒலி வடிவங்கள் கொண்ட எழுத்துக்கள் ஒரே எழுத்து வடிவில் அயலில் வரமாட்டாது என்று விதிக்கு உட்பட்டே "ர", "ரா" ஆகிய இரு எழுத்துவடிவங்களும் "ர", "ரா"என்றே எழுதப்படுகின்றன. மாறாக "ா", "ாா" என ஒரு போதும் எழுதப்படுவதில்லை. ரகர வரிசையில் வருகின்ற ர்,ரி,ரீ ஆகிய மூன்று எழுத்துக்கள் மட்டுமே வடிவ மாற்றத்துக்கு உள்ளாகின்றது. ர, ரா, ரெ, ரே ,ரை, ரொ, ரோ,ரௌ ஆகிய எழுத்துக்கள் வடிவமாற்றத்துக்கு உட்படவில்லை. " ர" என்பது உகரத்துடன் இணைகின்றபோது துவாரகன் கூறியது போன்று வடிவமாற்றத்துக்கு உட்படக்கூடாது என்றால் ரு என்பது "ரு " எனவும் ரூ என்பது "ரூ" எனவும் எழுதப்பட வேண்டும். ஆனால் தமிழ் இலக்கணத்தில் அவ்வாறு எழுதப்படுவதில்லை. ரு. ரூ என்றே எழுதப்படுகின்றன. ஆகவே அண் ணளவாக 1700 ஆண்டுகள் வளர்ச்சிப்படியைக் கொண்ட எழுத்துக்களில் கி.மு.3ஆம் நூற் றாண்டு முதல் கி.பி.3ஆம் நூற்றாண்டு வரை ỉ என்ற எழுதப்பட்ட ரகரம் பல்லவர்கால ஆரம்பக் கல்வெட்டுக்களில் " ⌈̇\ " என்று காணப்பட்டது. பல்லவர்கால பிற்காலக் கல்வெட்டுக்களில் ர்,ா் என்ற இரு வடிவங்களும் காணப்பட்டன. கல்வெட்டுக்களில் பதியப்படும் எழுத்துக்கள் எழுதுபவரின் மனநிலைக்கேற்ப அமைந் திருக்கும் என்பது குறிப்பிடவேண்டிய விடயம். ஆனால் பின்வந்த ஐரோப்பியர் காலத்தில் ா்,ரி,ரீ என்ற எழுத்துவடிவங்களே காணப்பட்டன. உரைநடை வளர்ச்சியடைந்த இந்தக் காலக் கட்டத்தில் இவ்வாறான எழுத்து வடிங்கள் காணப்பட்டதில் இருந்து ர்.ா். ரி.ரி, ரீ,ரீ வடிவமாற்றம் கணினியில் ஏற்பட்ட தவறு அல்ல என்பது புலனாகின்றது.

பேராசிரியர் ஆ.வேலுப்பிள்ளை அவர்களின் "சாசனமும் தமிழும்" மற்றும் பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்களின் "தமிழில் இலக்கிய வரலாறு" ஆகிய நூல்களிலிருந்து தொகுக்கப் பட்டவை

மேலும் தமிழி எழுத்தில் காணப்பட்ட தொல் காப்பியத்தினை 1892 ஆம் ஆண்டு தொல் காப்பியம் முழுமையும் அரிதின் முயன்று யாழ்ப்பாணம் சி.வை.தாமோதரம்பிள்ளை அவர்கள் வெளியிட்டார். இவர் "செல் துளை யேயன்றி மெய்ப்புள்ளி விரவாத செந்நா ளேடுகளை" தன் கண்ணீராலே கழுவி தொல்காப்பியம். கலித்தொகை முதலிய தொன்னூல்களைப் பதிப்பித்து வெளியிட்டார்.

வட்டெழுத்தாகவும் தமிழ் எழுத்தாகவும் மாற்றம் பெற்றதை விளக்கும் படம்



இவர் பழம்நூல்கள் இருந்த நிலையினைப் பின்வருமாறு கூறுகின்றார். " ஏடு எடுக்கும் போது ஓரம் சொறிக்கின்றது. கட்டு அவிழ்க் கும்போது இதழ் முறிகிறது. புரட்டும் போது துண்டு துண்டாகப் பறக்கின்றது. எழுத்துக்களோ காலும் தலையுமின்றி நாலு புறமும் கானக் கலப்பை மறுத்த மறுத்து உழுது கிடக்கிறது" என்று கூறுகின்றார். தாமோதரம்பிள்ளை அவர் களின் கூற்றுப்படி காலும் தலையும் இன்றிக் காணப் பட்ட எழுத்துக்களை இனங்கண்டு 1885ஆம் ஆண்டு தொல்காப்பியம் பொருள திகாரமும் 1891ஆம் ஆண்டு தொல்காப்பிய எழுத்ததிகார மும் தாமோதரம் பிள்ளையவர் களால் பதிப்பித்து வெளியிடப்பட்டது. அதாவது தமிழி எழுத்திலி ருந்த தொல்காப்பியத்தினைப் பதிப்பித்து தாமோ தரம்பிள்ளையவர்கள் அழியாப்புகழ் பெற்றார்.

(தொடரும்)

இந்தப் பகுதியில் இணைந்து கொள்ள விரும்புபவர்கள் தமது ஆக்கங்களை அனுப்பி வைக்க லாம்.

## சுகாதாரக் குறைபாடுகளுடன் மீன் சந்தை

கொட்டடியில் அமைந்துள்ள மீன் சந்தை தொடர்ந்தும் சுகாதாரக் குறைபாடுகளுடன் இயங்கி வருவதால் அங்கு செல்லும் நுகர்வோர் சிரமங்களை எதிர்கொண்டு வரு கின்றனர்.

அங்கு மீன்களை வெட்டும் வேலைகளில் ஈடுபடுவோரில் சிலர் கழிவுகளை வீசிவிடு கின்றனர். இதனால் அருவருப்பானதொரு சூழ்நிலை காணப்படுகின்றது.

மேலும் மீன்கள் மீது அடிக்கடி தண்ணீர் ஊற்றப்படுவதால் சந்தையின் நிலப்பகுதியில் நீர் தேங்கி நின்று அங்கு செல்லும் நுகர்வோரின் ஆடைகளையும், பாதணிகளையும் சுகாதாரக் கேட்டுக்கு ஆளாக்கி வருகின்றது. குடாநாட்டின் ஏனைய இடங்களில் அமைந்துள்ள மீன் சந்தைகளில் இந்த நிலை காணப்படுவதில்லை.

சந்தைப் பொருள்கள் விற்பனை செய்யும் இடங்கள் சுத்தமாகவும், சுகாதாரமானதாகவும் இருக்க வேண்டும். மாநகரசபை இதனைக் கவனிக்குமா?

கே.பகீரதன், சிவன்பண்ணை வீதி.

## சனீஸ்வரனுக்கு இங்கும் ஆலயம்

ஜூன் மாதம் 24 ஆம் திகதிய உங்கள் வெளியீட்டின் ஐந்தாம் பக்கத்தில் "சனி தோஷத்தைச் சரி செய்ய இந்தியா சென்றார் ரணில்" என்ற செய்தி இடம்பெற்றிருந்தது. அதில் திருநள்ளாறு என்ற (தமிழகம்) இடத்தில் மட்டுமே சனீஸ்வரன் ஆலயம் உண்டெனக் குறிப்பிடப்பட்டுள்ளது அது தவறு. இலங்கையின் கிழக்கிலுள்ள திருகோணமலை மாவட்டத்திலும் சனீஸ்வரன் ஆலயம் உள்ள தென்பதை தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

கை.க.விசாகரட்ணம்.

## அநாகரிகமான செயல்கள் ஒழியுமா?

வாசகர் திருமுகம்

யாழ்ப்பாணம் பஸ் நிலையப் பகுதியில் அமைந்துள்ள

தேநீர்க் கடைகளுக்கு முன்னால் நின்று இளைஞர்கள் சிலர் நாகரிகமற்ற செயல்களில் ஈடுபடுவதால் அந்தப் பகுதிகளுக்குச் செல்பவர்கள் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

குறிப்பாக பஸ் நிலையத்தின் கிழக்குப் பகுதியிலும், வடக்குப் பகுதியிலும் இத்தகைய செயல்கள் இடம்பெற்று வருகின்றன. கடைகளுக்கு முன்னால் செல்பவர்களை வலிந்து கூவி அழைப்பதும், மேலே செல்லவிடாது கைகளால் தடுத்து நிறுத்துவதும் அங்கு வாடிக்கையான செயல்களாக மாறிவிட்டன. வயது வேறுபாடுகளின்றி பெண்களிடம் சிலர் அநாகரிகமான வகையில் நடந்துகொள்வதையும் காண முடிகின்றது.

தமக்கு ஏதாவது தேவைகள் இருந்தால் மக்கள் தாமாகவே அவற்றை நாடிச் செல்வார்கள். இதைவிடுத்து கூடாக அது இருக்கிறது, இது இருக்கிறது, தேநீர் வேண்டுமா? கோப்பி தரவா? எனக் கேட்டு மக்களுக்குத் தொல்லை கொடுப்பது எந்த வகையிலும் நியாயமாகாது. தமது அலுவல்களின் நிமித்தம் அவசரமாகச் செல்பவர்கள் இத்தகைய செயல்களால் வீணான தாமதத்தை எதிர்கொள்கின்றனர்.

இவற்றைத் தட்டிக்கேட்க முற்பட்டால் வீண் சச்சரவுகள் ஏற்படும் என்பதால் மக்கள் பொறுமை காக்கின்றனர்.

உரியவர்கள் இத்தகையவர்களின் அநாகரிகச் செயல்களை உடனடியாகத் தடுத்து நிறுத்த வேண்டுமென பாதிக்கப்படும் மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

பா.ரவிகரன், கொக்குவில்



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்**: மிகவும் நிம்மதியாகவும் திட்டமிட்டும் இன்றைய பணிகளை மேற்கொள்வீர்கள். வீடு. நிலம் போன்றவைகளில் சாதகமான சூழ்நிலை ஏற்படும். பொறியியல், விஞ்ஞானம் போன்ற துறைகளில் உள்ளோருக்கு சிக்கல்கள் தீரும்.

**இடபம்**: உங்களுடைய கௌரவம் உயரும் நாள் இது. உங்களது முக்கியத்துவம் உணரப்படும். சௌகரியமான சூழ்நிலைகளை அமைத்துக் கொள்வீர்கள். சில சிரமங்களுக்கிடையே சில நன்மைகளைச் செய்ய வாய்ப்புண்டு. பயணத்தின்போது எச்சரிக்கை தேவை.

**மிதுனம்**: பொதுவாகச் சில சங்கடங்கள் உண்டாகலாம். அதிகப்படியான செலவுக்கு இலக்காகலாம். சிலரால் மனதில் தேவையில்லாத பீதி உண்டாகலாம். வீண் அலைச்சலைத் தவிர்க்க வேண்டுமானால் எதையும் திட்டமிடல் அவசியம்.

**கடகம்**: மிகவும் அனுகூலமான பயன்கள் கிடைக்கும். பயணம் ஒன்றை மேற்கொள்வீர்கள். அதனால் ஆதாயமும் கிடைக்கும். வியாபாரிகளுக்கு உத்தமமான இலாபம் கிடைக்கும். அன்றாட பிரச்சினைகளில் எந்தத் தொந்தரவும் இருக்காது.

**சிங்கம்**: கற்றறிந்தோர் கௌரவம் ஏற்படும். புகழ் கிடைக்கும் நற்காரியங்களை இந்த நேரத்தில் ஆற்ற இயலும். தம்பதியரிடத்தில் அன்னியோன்னியம் ஏற்படும். பொருளாதாரம் சிறப்பாக இருந்தாலும் சில வீண் செலவுகளும் வந்து சேரும்.

**கன்னி**: பொருளாதார சுபீட்சம் பெருகும். அந்தஸ்து உயரும். எதிரிகளை வெற்றி கொள்ளும் வாய்ப்புகளை உருவாக்கிக் கொள்வீர்கள். கலைத்துறையில் உள்ளவர்களுக்கு இலாபம் கிடைக்கும். பிள்ளைகளால் அன்றாட வாழ்வில் சின்னச் சின்னக் கருத்து மோதல்கள் வரலாம்.

**துலாம்**: புத்திசாலித்தனமாக இயங்குவதற்குரிய சந்தர்ப்பங்கள் ஏற்படும். கொடுக்கல் வாங்கல் திருப்திகரமாக இருக்கும். கல்வியில் சாதனை செய்வதற்குரிய சூழ்நிலைகளை உருவாக்கிக் கொள்வீர்கள். தம்பதிகளிடையே விட்டுக் கொடுத்து போகவும்.

**விருச்சிகம்**: உங்களுடைய அந்தஸ்துக்குச் சோதனை வரலாம். அதிகப்படியான செலவுகள் செய்ய வேண்டிய சூழ்நிலைகள் வரலாம். உங்களுடைய உறுதியும், கொள்கைப் பிடிப்பும் தளர்வதற்குண்டான நிலை வரலாம்.

**தனுசு**: சில நன்மைகள் ஏற்பட்டாலும் சிற்சில சங்கடங்களும் ஏற்படலாம். பெரியோர் ஆசீர்வாதங்களும் தெய்வ சிந்தனையும் உங்களை இடரிலிருந்து காக்க உதவும். வீடு. நிலம் போன்றவற்றில் ஏதேனும் வில்லங்கம் இருந்தால் சமாதானமாகத் தீர்க்கவும்.

**மகரம்**: பொதுவாக நற்பலன்கள் கூடுதலாக கிடைக்கும். எதிலும் சிறிதளவு ஆதாயம் ஏற்படும். முன்விரோதம் காரணமாக சில சங்கடங்கள் உருவாகலாம், என்றாலும் அவற்றைச் சமாளிக்கும் வழிகள் உங்களுக்குப் புலப்படும்.

**கும்பம்**: தொழிலில் சிக்கல்கள் உருவாகாது என்றாலும் சிற்சில வாக்குவாதங்கள் இருக்கும். எதிலும் அளவோடு ஈடுபட்டு வந்தால் தொல்லைகள் இராது. அடுத்தவர்களுடைய விவகாரங்களில் வீணாக தலையிட வேண்டாம்.

**மீனம்**: புதிய முயற்சிகளைத் தொடங்கலாம். பெரியோர்களின் ஆதரவு கிடைக்கும். முயற்சிகளில் நல்ல பலன்கள் கிடைக்கும். கல்வித்துறையில் இருப்பவர்களுக்கு கௌரவம் கிடைக்கும். பொருளாதாரத்தில் சிறப்பு உண்டாகும்.

## நாளை

**ஆனி-20 வெள்ளிக்கிழமை | 04.07.2014**

திதி: ஸப்தமி பி.இ.01.24 வரை
நட்சத்திரம்: உத்தரம் மு.இ.08.40 வரை

சுபநேரம்: 05.57-07.27 வரை
இராகுகாலம்: 10.27-11.57 வரை
ஆனி உத்தரம்

# விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



## மதத்தில் கூலிப்பட்டாளம்

சென்ற கோடையில் சிகாக்கோ நகரில் நடைபெற்ற மதப் பேரவையில் முக்கியமாக விளங்கிய சுவாமி விவேகானந்தர் என்னும் இந்திய பிராமண குருவின் வாயிலாக கீழ்த்திசை மதக் கருத்து பற்றி அறியும் ஆவலுடன் நேற்றுக்காலையூனிட்டேரியன் சர்ச்சில் ஏராளமான மக்கள் கூடியிருந்தார்கள். பெரிபாடிக் மன்றத்தினர் அவரை மின்னா போலிஸ் நகருக்குஅழைத்துவந்தனர். சென்ற வெள் ளிக்கிழமை மாலைஅவர் அங்கேசொற்பொழிவாற்றினார். நேற்றைய சொற் பொழிவுக்காக இந்த வாரம் வரை இங்கேயே இருக்குமாறு அவர் வேண்டப்பட்டார்.

மத போதகரான டாக்டர் எச்.எம். சைமன், சமயம், நம்பிக்கை, அறம் என்பன பற்றிய பாலின் போதனைகளைப் படித்தார். இவற்றுள் உயரியது அறம். இதே போலக் கூறும் இந்து போதனைகள் சிலவற்றையும் படித்தார், முகமதிய போதனைகளையும் படித்தார், இந்து நூல்களிலிருந்தும் சில பகுதிகளைப் படித்தார். எல்லாம் பாலின் போதனைகளைப் போன்றவையே.

இரண்டாவது துதிப்பாடலுக்குப் பின் சுவாமி விவேகானந்தர் அறிமுகம் செய்து வைக்கப்பட்டார். மேடையின் மீது வந்து நின்று இந்துக் கதை ஒன்றைக் கூறி, கூடியிருந்தவர்களைக் கவர்ந்தார் அவர். தூய ஆங்கில மொழியில் அவர் பேசினார்.

ஐந்து குருடர்களைப் பற்றிய கதை ஒன்றை இப்போது நான் உங்களுக்குச் சொல்வேன். ஒரு கிராமத்தின் வழியாக ஓர் ஊர்வலம் சென்று கொண்டிருந்தது. அதைக் காண்பதற்காக மக்கள் கூடினர். அலங்கரித்து அழைத்து வரப்பட்ட யானையைக் காணப் பெரிதும் விரும்பினர்; கண்டனர்; மகிழ்ந்தனர். ஆனால் ஐந்து குருடர்களும் அதைக் காண முடியாமல் தவித்தனர். யானையைத் தடவிப் பார்த்தாவது மகிழ எண்ணிய அவர்கள் அவ்வாறே தடவிப் பார்க்க அனுமதியும் பெற்றனர். ஊர்வலம் சென்றது. மக்கள் திரும்பினார்கள். குருடர்களும் வீடுதிரும்பினார்கள். யானையைப் பற்றிப் பேசினார்கள்.

# தொலைபேசி உரையாடலை அரசால் ஒட்டுக்கேட்க முடியுமாம்

அரசாங்கத்தால் தொலைபேசி உரையாடல்களை ஒட்டுக் கேட்க முடியும் என்று தெரிவிக்கப்படுகிறது. அனுமதியின்றி தொலை பேசிக்குள் புகுந்து உளவுப் பணிகளில் ஈடுபட சாத்தியங்கள் காணப்படுகின்றன.



உலகின் பல நாடுகளின் அரசுகள் இவ்வாறு தொலைபேசி உரையாடல்களை ஒட்டுக் கேட்கின்றன. கலிலியோ என்னும் கருவியைக் கொண்டு இவ்வாறு உளவு பார்க்கப்படுவதாக கஸ்பர்ஸ்கை நிறுவனம் தெரிவித்துள்ளது.

அன்ட்ரைட், ஐ.ஓ.சிஸ், வின்டோஸ், பிளக்பரி போன்ற தொலைபேசிகளுக்குள் இலகுவில் பிரவேசிக்க முடியும். தொலைபேசியில் பதிவு செய்யப்பட்டுள்ள தகவல்கள் குறுந்தகவல்கள் பற்றிய விவரங்களை பெற்றுக்கொள்வது மட்டுமன்றி தொலைபேசியின் மைக்கை 'ஓன்' செய்து சுற்றுச்சூழலின் சத்தங்களைக் கூட அறிந்து கொள்ளக் கூடிய அளவுக்கு நவீன கருவிகள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன. அபிவிருத்தி அடைந்து வரும் அபிவிருத்தி அடைந்த நாடுகளில் இவ்வாறு உளவு பார்க்கப்படுகின்றது.

சில நாடுகளில் ஆட்சியை தக்க வைத்துக் கொள்வதற்கும் மாற்றுக் கருத்துக்களை முடக்குவதற்கும் இவ்வாறு தொலைபேசி உரையாடல் கள் ஒட்டுக் கேட்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | | 4 | | | | 6 | 2 | |
| | 2 | | 4 | | | | | 3 |
| 9 | 1 | | | 2 | | | 4 | |
| | | | 6 | | | 2 | 3 | |
| | 6 | 8 | 2 | 1 | 3 | 7 | 5 | |
| | 3 | 2 | | | | | | |
| | 9 | | | 6 | | | 8 | 4 |
| 6 | | | | | 8 | | 9 | |
| | 8 | 3 | | | | 5 | | 7 |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 8 | 6 | 5 | 4 | 7 | 9 | 3 |
| 9 | 6 | 4 | 2 | 3 | 7 | 5 | 8 | 1 |
| 3 | 7 | 5 | 8 | 1 | 9 | 4 | 6 | 2 |
| 5 | 4 | 9 | 3 | 6 | 2 | 8 | 1 | 7 |
| 7 | 1 | 2 | 9 | 4 | 8 | 3 | 5 | 6 |
| 6 | 8 | 3 | 5 | 7 | 1 | 2 | 4 | 9 |
| 2 | 5 | 7 | 4 | 9 | 6 | 1 | 3 | 8 |
| 8 | 3 | 6 | 1 | 2 | 5 | 9 | 7 | 4 |
| 4 | 9 | 1 | 7 | 8 | 3 | 6 | 2 | 5 |

## உதைபந்து தொடர் 8ஆம் திகதி

யாழ்ப்பாணம், ஜூலை 3
கிளிநொச்சி உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் கனகபுரம் விளையாட்டுக் கழகம் நடத்தும் 7 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரின் ஆட்டங்கள் எதிர்வரும் 8 ஆம் திகதி கனகபுரம் விளையாட்டுக்கழக மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளன். இந்தத் தொடரில் 40 விளையாட்டுக் கழகங்கள் பங்குபற்றவுள்ளன.(ந-23)

## கலட்டி வி.க. வெற்றி

யாழ்ப்பாணம், ஜூலை 3
தும்பளை கருணையுள்ளம் விண்மீன் நற்பணி மன்றத்தின் அனுசரணையுடன் பலாலி விண்மீன் விளையாட்டுக் கழகம் யாழ்.மாவட்ட ரீதியாக நடத்தும் 7 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரின் ஆட்டங்கள் றெஜின்போ விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றன.
நேற்றுமுன்தினம் செவ்வாய் கிழமை இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் இமையாணன் இளைஞர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து திக்கம் விளையாட்டுக்கழக அணி மோதியது.
அதில் திக்கம் விளையாட்டுக் கழக அணி 9:1என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.
அடுத்து இடம்பெற்ற ஆட்டத்தில் உதயதாரகை விளையாட்டுக் கழக அணியை எதிர்த்துக் கலட்டி விளையாட்டுக்கழக அணி மோதியது.
அதில்கலட்டிவிளையாட்டுக்கழக அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ந-23)




பாடசாலைகளுக்கு இடையிலான மாகாண மட்டக் கூடைப்பந்தாட்டத் தொடரில் 19 வயதுப் பிரிவு பெண்கள் அணிகளுக்கு இடையிலான ஆட்டங்களில் இரண்டாம் இடத்தைப் பெற்ற கொக்குவில் இந்துக் கல்லூரி அணியினர். (ந)

## யாழ்ப்பாணத்தில் எல்லே போட்டிகள்

வலி.வடக்கு, ஜூலை 3
இலங்கையில் எல்லே விளையாட்டை வளர்த்தெடுக்கும் வகையில் யாழ்ப்பாணத்தில் எதிர்வரும் 5ஆம், 6ஆம் திகதிகளில் ஆண்கள், பெண்களுக்கான எல்லே போட்டிகள் நடைபெறவுள்ளன என்று யாழ். மாவட்ட இராணுவத் தலைமையகம் தெரிவித்துள்ளது.



நேற்று காங்கேசன்துறை தல்செவன விடுதியில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. பிரிகேடியர் டட்லி வீரமன் தலைமையில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் கேணல் ஆர்.எம். குமாரசிங்கா, கேணல் சஞ்சிவ பெர்ணான்டோ, லெப்ரினட் கேணல் அசோக குணசேனா ஆகியோர் கலந்து கொண்டார்கள்.
இதன்போது கருத்துக் கூறிய கேணல் ஆர்.எம்.குணசிங்கா "எல்லே விளையாட்டுப் போட்டி 1960 ஆம் ஆண்டு முதல் 1980ஆம் ஆண்டு வரை தேசிய விளையாட்டாக காணப்பட்டது.
இன்றுஅந்த நிலை இல்லாது காணப்படுகின்றது. அதை வளர்த்தெடுக்கும் முகமாக இலங்கை இராணுவ படையகமும் இலங்கை எல்லே விளையாட்டுச் சங்கமும் இணைந்து இந்தப் போட்டிகளை யாழ்ப்பாணத்தில் நடத்தவுள்ளன. போட்டிகளில் ஆண்கள் பெண்கள் என 31 அணிகள் பங்குபற்றுகின்றன.
இந்தப் போட்டிகள் துரையப்பா விளை யாட்டரங்கு, யாழ்.மத்திய கல்லூரி, யாழ்.இந்துக் கல்லூரி, பலாலி படைகளின் மைதானம் என்பவற்றில் நடைபெறும்"- என்று தெரிவித்துள்ளார். (ந-86)

## இளவாலை யங்ஹென்றிஸ் உதைபந்தாட்டத் தொடர்

## நடைபெற்று முடிந்த ஆட்டங்களின் முடிவுகள்

யாழ்ப்பாணம், ஜூலை 3
இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியின் 107ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு பிரான்ஸ் பழைய மாணவர் சங்கம் இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழகத்துடன் இணைந்து யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் 11 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரின் ஆட்டங்கள் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வருகின்றன.
கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் வெற்றி பெற்ற அணிகளின் விவரங்கள் வருமாறு:
ஊர்காவற்துறை நசரேத் விளையாட்டுக் கழக அணிக்கும், டைமன்ஸ் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையே நடைபெற்ற ஆட்டத்தில், இரு அணிகளும் விறுவிறுப்பாக மோதிக் கொண்டன.
முதற்பாதி ஆட்டத்தின் 10ஆவது நிமிடத்தில் நசரேத் விளையாட்டுக் கழக வீரர் இசேரன் முதல் கோலை அடித்து அதிர்ச்சியளித்தார்.
பதிலுக்கு டைமன்ஸ் விளையாட்டுக் கழக அணி வீரர் குலேந்திரன் 25ஆவது நிமிடத்தில்தனது அணிக்கானகோலை அடிக்க முதற் பாதி ஆட்டம் 1:1 என்ற கோல் கணக்கில் சம நிலையில் முடிந்தது.
இரண்டாம் பாதி ஆட்டத்திலும் விறுவிறுப்புத் தொடர்ந்தது. 48ஆவது நிமிடத்தில் தனக்கு கிடைத்த சந்தர்ப்பத்தினை சரியான முறையில் பயன்படுத்திய டைமன்ஸ் விளையாட்டுக்கழக அணி வீரர் துவிகரன் தனது அணிக்கான 2 ஆவது கோலை அடித்தார்.
நசரேத் விளையாட்டுக்கழக அணி வீரர்கள் எதிர் அணியின் கோல் பரப்பை முற்றுகையிட்ட வண்ணம் இருந்தனர். ஆயினும் அவர்களால் கோல் எதனையும் பெறமுடியவில்லை.
ஆட்ட நேர முடிவில் டைமன்ஸ் விளையாட்டுக்கழக அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்குத் தகுதி பெற்றது.
இரண்டாவது ஆட்டத்தில் பெரியவிளான் சென்.அன்ரனீஸ்விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து அல்வாய் மனோகரா விளையாட்டுக்கழக அணி மோதியது.
முதற்பாதி ஆட்டத்தில் இரண்டு அணியினரும் கோல் எதனையும் பெறாதால் முற்பாதி ஆட்டம் சமநிலையில் முடிந்தது.
இரண்டாம் பாதி ஆட்டத்தில் மனோகரா விளையாட்டுக் கழக அணி வீரர்கள் ஆட்டத்தில் வேகம் காட்டினார். அதன் பயனாக, அனோஜன் 34ஆவது நிமிடம் மற்றும் 47ஆவது நிமிடத்தில் தனது அணிக்கான கோல்களை அடித்தார். துசியந்தனும் தன்பங்குக்குக் கோல் அடிக்க ஆட்ட நேர முடிவில் மனோகரா விளையாட்டுக்கழக அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு தகுதி பெற்றது.
மூன்றாவது ஆட்டத்தில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நாவாந்துறை சென்.நீக்கிலஸ் விளையாட்டுக்கழக அணி களமிறங்கியது.
முதற் பாதி ஆட்டத்தில் தமது அணிக்கான கோல்களைப் பெற இரு அணியினரும் கடும் பிராயத்தனம் மேற்கொண்டனர்.
அதனால் இரண்டு அணிகளிலும் பலமான பின்கள வீரர்கள் இருந்ததால் இரண்டு அணியினரதும், கோல் பெறும் முயற்சிகள் கை கூடவில்லை.
போட்டி முடிவடைவதற்கு ஒரு நிமிடம் மீதம் இருக்கையில் பாடும்மீன் விளையாட்டுக் கழக அணி வீரன் றொக்சன் தனக்கு கிடைத்த சந்தர்ப்பத்தைச் சரியான முறையில் பயன்படுத்தி தனது அணிக்கான கோலை அடிக்க பாடும்மீன் விளையாட்டுக்கழக அணி ஆட்ட நேர முடிவில் 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்குத் தகுதி பெற்றது. (ந-23)



## இன்றைய ஆட்டங்கள்



யாழ்ப்பாணம், ஜூலை 3
இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியின் 107ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு பிரான்ஸ் பழைய மாணவர் சங்கம் இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழகத்துடன் இணைந்து யாழ்.மாவட்ட ரீதியாக நடத்தும் 11 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரின் ஆட்டங்கள், இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் பகல் இரவு ஆட்டங்களாக இடம்பெற்று வருகின்றன.
இன்று வியாழக்கிழமை பி.ப 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் குறிஞ்சிக்குமாரன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.
மாலை 5.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கருணாகரன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நாமகள் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.
மாலை 6.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் உடுப்பிட்டி யூத் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கலைமகள் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ந-23)

* * *

யாழ்ப்பாணம், ஜூலை 3
அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தின் 95ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு மின்னொளியில் நடைபெறும் தாச்சிச் சுற்றுத் தொடரின் ஆட்டங்கள் சரஸ்வதி சனசமூக நிலைய மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.
இன்று வியாழக்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் இருபாலை விக்னேஸ்வரா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மயிலிட்டி கண்ணகி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ந-23)

* * *

யாழ்ப்பாணம், ஜூலை 3
தும்பளை கருணையுள்ளம் விண்மீன் நற்பணி மன்றத்தின் அனுசரணையுடன், பலாலி விண்மீன் விளையாட்டுக் கழகம் யாழ்.மாவட்ட ரீதியாக நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரின் ஆட்டங்கள் றெஜின்போ விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.
அவற்றில் இன்று வியாழக்கிழமை பி.ப. 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சென்.பீற்றஸ் விளையாட்டுக் கழக 'பி' அணியை எதிர்த்து நவசக்தி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.
பி.ப. 4.30 மணிக்கு ஊரெழு றோயல் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சுடர்ஒளி விளையாட்டுக் கழக அணி மோத வுள்ளது. (ந-23)

* * *

யாழ்ப்பாணம், ஜூலை 3
மோகனதாஸ் விளையாட்டுக் கழகம் யாழ்.மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கத்தின் அனுமதியுடன் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடையே நடத்திவரும் கரப்பந்தாட்டச் சுற்றுத் தொடரின் ஆட்டங்கள் மோகனதாஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றன.
அவற்றில் இன்று வியாழக்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் புத்தூர் தமிழ்மதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மட்டுவில் வளர்மதி விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.
இரவு 8 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நாயன்மார்கட்டு பாரதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து புத்தூர் சோமஸ்கந்தன் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.
இரவு 9 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கெருடாவில் விவேகானந்தா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சங்கானை ஸ்ரீபாரதி விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (ந-23)

* * *

யாழ்ப்பாணம், ஜூலை 3
குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழகத்தின் பொன் விழாவை முன்னிட்டு வடமாகாண ரீதியாக நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரின் ஆட்டங்கள் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.
இன்று வியாழக்கிழமை பி.ப. 3.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நாவாந்துறை சென்.நீக்கிலஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து எவரெஸ்ட் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. மாலை 5 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் காளியம்பாள் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ந-23)

# போராடி வெளியேறியது அமெரிக்கா காலிறுதியில் நுழைந்தது பெல்ஜியம்



உலகக் கிண்ண உதைபந்துத் தொடரில் விலகல் சுற்று ஆட்டத்தில் அமெரிக்காவை 2:1 என்ற கோல் கணக்கில் வீழ்த்திய பெல்ஜியம், காலிறுதியில் ஆர்ஜென்ரீனாவைச் சந்திக்கவுள்ளது.

அமெரிக்க அணியின் அபாரமான உலகக் கிண்ணத் தொடர் ஆட்டம், இந்தப் போராட்டத் தோல்வியுடன் முடிவுக்கு வந்தது. ஆனால் அமெரிக்க அணி வருத்தம் அடைந்தாலும், அந்த அணி பெருமைப்பட உகந்ததே இந்த உலகக் கிண்ணத் தொடரில் அந்த அணியின் ஆட்டம்.

அமெரிக்க அணியின் கோல் கீப்பர் இந்தப் போட்டியில் தடுத்த கோல்கள், உண்மையில் வேறு அணியாக இருந்திருந்தால் அதனை உயிர்ப்படையச் செய்திருக்கும். டிம் ஹோவர்ட் தனது வாழ்நாளின் சிறந்த ஆட்டத்தை ஆடினார். இவரது கோல் காப்புத்தான் ஆட்டத்தை கூடுதல் நேரத்திற்கு இட்டுச் சென்றது.

பெல்ஜியம் அணியின் ஆரிஜி, ஈடன் ஹசார்ட், கெவின் டி புருய்ன், டிரைஸ் மெர்டென்ஸ் என்று பெயரிடலாமே தவிர சிகப்பு சட்டைக்காரர்கள் அனைவரது முயற்சியையும் அமெரிக்க ஹோவர்ட் முறியடித்தார். பெல்ஜியம் அணிக்கே நம்பிக்கை குறைந்து போகும் அளவுக்கு ஹோவர்ட் சுவராக உயர்ந்து நின்றார். ஆனால் இந்த ஹீராயிக் கோல் காப்பு பெல்ஜியம் வீரர் ரொமிலு லுகாகு வந்தவுடன் சற்றே ஆட்டம் காணத் தொடங்கியது.

ஹோவர்டும் என்ன செய்வார்? 90 நிமிடங்கள் அயராது பந்தைப் பிடித்து களைப்படைந்தார். 90 நிமிடங்கள் முடிந்து 3ஆவது நிமிடத்திலேயே லுகாகுவின் ஆட்டம் தெரிய ஆரம்பித்தது. வலது புறம் கெவின் மிரலாஸ் பந்தை லுகாகுவிடம் அடிக்க அமெரிக்க வீரர் மேட் பெஸ்லர் கொடுத்த சவாலை ஒன்றுமில்லாமல் ஊதிக் கடந்து வந்து பெனால்டி பகுதியில் டீ ப்ரூய்னுக்கு அடிக்க, அவர் கடைசியாக ஹோவர்டைக் கடந்து முதல் கோலை அடித்தார்.

பெல்ஜியம் அடித்த இரண்டாவது கோல், லுகாகுவே நேரடியாக அடித்த கோல் ஆகும். ஆட்டத்தின் 105ஆவது நிமிடத்தில் டீப்ரூய்ன் ஒரு பந்தை அழகாக அடித்துக் கொடுக்க லுகாகு அதனை அலட்சியமாக அமெரிக்க கோல் கீப்பர் ஹோவர்டைத் தாண்டி கோலை அடித்தார். அவர் அடித்த முறை இந்த ஹோவர்டா இத்தனை நேரம் நம்மை கோல் அடிக்க விடாமல் செய்தார் என்று கேட்பது போல் இருந்தது.

ஆனால், அமெரிக்க அணி அயர்ந்து விடவில்லை. 105ஆவது நிமிடத்தில் அந்த அணியின் ஜூலியன் கிரீன் தன் அணியின் முதல் கோலை அடித்தார். பின்னர் கூடுதல் நேரம் முடிய 6 நிமிடங்கள் இருக்கும்போது, ஹோவர்டைப் பற்றி பேசிய அளவுக்குப் பேசக்கூடிய ஒரு தடுப்பை நிகழ்த்தினார் பெல்ஜியம் கோல் கீப்பர் திபோ கோர்த்தாய். அமெரிக்க வீரர் கிளிண்ட் டெம்ப்ஸ்பே மிக நேராக, நிச்சயம் கோல்தான் என்று அடித்த உதையை பெல்ஜியம் கோல் கீப்பர் திபோ கோர்த்தாய் தடுத்தார். இது உண்மையில் பெல்ஜியத்தைக் காப்பற்றிய தடுப்பாகும்.

ஆனால், 90 நிமிட ஆட்டத்திலேயே கடைசியில் 0-0 என்று இருந்தபோது, அமெரிக்கா கடைசி வினாடி கோலை அடித்து பெல்ஜியத்தை வெளியேற்றிருக்க முடியும். ஆனால், ஜெர்மைன் ஜோன்ஸால் உருவாக்கப்பட்ட கோல் வாய்ப்பை அமெரிக்க வீரர் வான்டலோவ்ஸ்கி கோலுக்கு 6 அடிக்கு முன்னால் இருந்து கொண்டு கோட்டைவிட்டார். இது அந்த அணிக்கு ஒரு பெரிய ஏ மாற்றமான விடயம்தான்.

ஆனாலும், பெல்ஜியம் அ[illegible]திருக்க வேண்டிய ஒரு 4 கோ[illegible]களையாவது ஹோவர்ட் தடுத்திருக்கிறாரே. அப்படிப் பார்க்கும்போது இந்த விரயத்தை விட ஹோவர்டின் சாதனை தான் பெரிது. காலிறுதியில் ஆர்ஜென்டீனா - பெல்ஜியம் அணிகள் மோதுகிறது.

## வாடிக்கையாளர் தலையில் மெஸ்ஸி



உலகக் கிண்ண கால்பந்தாட்டப் போட்டி விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. உலகின் பல்வேறு நாடுகளிலும் ரசிகர்கள் வித்தியாசமான முறையில் தமது அணிக்கும், தமது விருப்பத்துக்குரிய வீரர்களுக்கும் ஆதரவு தெரிவித்து வருகின்றனர்.

இந்த நிலையில் எம்ஸ்ஸியின் தீவிர ரசிகர் ஒருவர் தனது விருப்பத்துக்குரிய வீரரான மெஸ்ஸியின் உருவத்தை தனது வாடிக்கையாளர் தலையில் சிகை அலங்கரிப்பாக்கி உள்ளார். முடிவெட்டும் தொழிலைச் செய்யும் ராப் பெரல் என்ற ரசிகரே தனது வாடிக்கையாளரான வின்செண்ட் ஹெர்ணான்டேஸ் தலையில் மெஸ்ஸியின் உருவத்தைப் பொறித்துள்ளார். (உ-ரி)

CMYK

## 'தொலைந்து போ' என இனிப்பு வீசிய ரசிகர்கள்

உலகக் கிண்ணக் கால்பந்தாட்டப் போட்டியில் ஒரு வெற்றியைக் கூடப் பெறாது நாடு திரும்பிய தென்கொரிய வீரர்கள் மீது அந்த நாட்டு ரசிகர்கள் இனிப்புகளை வீசியுள்ளனர். விமான நிலையத்தில் வந்திறங்கிய அணியினர் ஒளிப்படம் எடுப்பதற்காக ஊடகவியலாளர்களுக்குப் 'போஸ்' கொடுத்துக் கொண்டிருந்தபோது அவர்களை நோக்கி இனிப்புகள் வீசப்பட்டன.

கொரிய வழக்கில் "இனிப்புச் சாப்பிடு" என்றால் "தொலைந்து போ" என்று அர்த்தம[illegible] 1998 ஆம் ஆண்டுக்குப் பின்னர் தென்கொரிய அணி ஒரேயொரு வெற்றியைக் கூடப் பெற்றுக் கொள் ளாது உலகக் கோப்பைத் தொடரிலிருந்து வெளியேறியிருப்பது இதுவே முதல்முறை. (உ-ரி)



## பகல்- இரவு டெஸ்ட் கிரிக்கெட் நடத்த ஆஸி- நியூஸி தீர்மானம்

### அடுத்த ஆண்டு முதல் ஆரம்பமாகும்



முதலாவது பகல்- இரவு டெஸ்ட் கிரிக்கெட் ஆட்டத்தை நடத்துவது தொடர்பில் ஆஸ்திரேலியாவுக்கும் நியூஸிலாந்துக்கும் இடையில் நடைபெற்ற கலந்துரையாடலில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

அடுத்த ஆண்டு இவ்விரு அணிகளுக்கும் இடையில் அடிலெட்டப் மற்றும் ஹோபேர்ட் மைதானத்தில் நடைபெறவுள்ள போட்டியில் இதைப் பரீட்சிக்க எண்ணியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஆட்டத்தில் இளம் சிவப்பு (Pink) பந்தைப் பயன்படுத்தவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. மின் ஒளியிலும் பந்து தெளிவாகத் தெரிவதற்காக இந்த ஏற்பாடு.

ரசிகர்கள் டெஸ்ட் கிரிக்கெட்டை கண்டுகளிக்க வசதியாகவும் டெஸ்ட் கிரிக்கெட்டைப் பாதுகாக்கவும் இது உதவியாக இருக்கும் என ஆஸ்திரேலிய கிரிக்கெட் தலைமை நிர்வாகி ஜேம்ஸ் சதர்லேண்ட் தெரிவித்துள்ளார். (உ-ரி)



## குக்குக்கு ஸ்ருவர்ட் ஆதரவு

இங்கிலாந்து கிரிக்கெட் அணித் தலைவர் அலெஸ்டயர் குக் அண்மைக்காலமாக ஆட்டங்களில் சொதப்பி வருகிறார். அவரது அணியும் ரசிகர்களைத் தொடர்ந்து ஏமாற்றியே வருகிறது.

இந்த நிலையில் சக வீரரும், அணியின் வேகப் பந்து வீச்சாளருமான ஸ்டுவர்ட் ப்ரோட், குக்குக்கு ஆதரவாகக் கருத்து வெளியிட்டுள்ளார்.

"குக் மிகவும் சாந்தமான விளையாட்டு வீரர். நடக்கவிருக்கும் இந்தியாவுக்கு எதிரான தொடரில் அவர் சிறப்பாக விளையாடிச் சாதிப்பார். பெரியளவில் ஒட்டக்குவிப்பில் ஈடுபட்டு அவரது திறமையைச் சந்தேகித்தவர்களின் வாயை அவர் அடைப்பார்" என்று தெரிவித் துள்ளார் ஸ்ருவர்ட். (உ-ரி)

# ஏழாவது ஐ.பி.எல்; திறமையை வெளிப்படுத்திய இளம் வீரர்கள்

ஏழாவது இந்தியன் பிறிமியர் லீக் திருவிழா ஒருவழியாக முடிந்து விட்டது. கொல்கத்தா சற்றும் எதிர்பாராத வகையில் கிங்ஸ் லெவன் பஞ்சாப்பை வீழ்த்தி இரண்டாவது முறையாக சாம்பியனானது.

பல வெளிநாட்டு வீரர்களை விடவும், இந்திய அணியில் உள்ள சில வீரர்களை விடவும் சிறப்பான ஆட்டத்தை புதிய இளம் வீரர்கள் வெளிப்படுத்தியது பரவலான வரவேற்பைப் பெற்றுத் தந்துள்ளது.

இந்திய அணியில் இன்னும் விளையாடாத, வாய்ப்பை எதிர்நோக்கும் வீரர்கள் பற்றிய பார்வை இது



**அக்ஷர் படேல்**

இடது கை சுழற்பந்து வீச்சாளரான அக்ஷர் படேல் ஒரு சகலதுறை வீரர், ஆனால் அவரது துடுப்பாட்டத் திற மைக்கு கிங்ஸ் லெவன் வாய்ப்பு அளிக்கவில்லை. மாறாக அவரது பந்து வீச்சுத் திறமையை முழுதும் வெளிக் கொணர்ந்தார். இவரது உழைப்பிற்குக் கிடைத்ததுதான் வளரும் வீரர் விருது.



**யஸ்வேந்திர சிங் சாஹல்**

அமித் மிஸ்ராவுக்குப் பிறகு இந்திய 'லெக்ஸ்பின்' பாரம்பரியத்தைத் தொடரும் யஸ்வேந்திர சாஹல், ஹரியானா மாநிலத்திற்காக விளையாடி வருபவர்.

இவரது கூக்ளி இவருக்கு அதிக விக்கெட்டு களைப் பெற்றுத்தந்துள்ளது. அதிரடி வீரர்களான கிளென் மெக்ஸ்வெல், செவாக், டேவிட் மில்லர், மெக்கலம், டிவைன் ஸ்மித் ஆகியோருக்கு எதிராகவும் இவரது பந்து வீச்சு சோபித்துள்ளது.



**சந்தீப் சர்மா**

கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியின் வீரர். இவரது மிதவேகப் பந் துகள் சுழல் காரணமாக விக்கெட் டுக்களை பெற்றுக் கொடுத்தன. இந்த ஐ.பி.எல். தொடரில் அதிக விக்கெட்டுக்களைக் கைப்பற்றிய வீரர்கள் பட்டியலில் இடம்பெற்றார்.



**மனன் வோரா**

கிங்ஸ் லெவன் அணி சார்பாக விளையாடிய மனன் வோரா யாரும் எதிர்பாராத விதமாக திறமையை வெளிப்படுத்தினார். இவருக்கு முதல் 9 போட்டிகளில் வாய்ப்பளிக்கப்படவில்லை என்பது பெரும் ஆச்சரியமே. இறுதி 5 போட்டிகளில் மிகச் சிறப்பாக திறமையை வெளிப்படுத்தினார்.



**கருண் நாயர்**

கர்நாடக அணியிலிருந்து வெளியேற்றப்பட்டு, ராஜஸ்தான் ரோயல்ஸ் அணிக்காக இந்த முறை விளையாடினார். இவரது முதல் ஐ.பி.எல் தொடர் இது. 330 ஓட்டங் களைக் குவித்துள்ள இவரும் கர்நாடகாவிலிருந்து இந்திய அணிக்காக ஒரு காலத்தில் விளையாடுவார் என்ற எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளவர்.




**சி.எம்.கௌதம்**

இவரை விக்கெட் காப்பாளராக மும்பை இந்தியன்ஸ் தெரிவு செய்தது. ஓரிரு போட்டிகளில் கிடைத்த வாய்ப்பை சரியாக பயன்படுத்தினார். இவருக்கு மேலும் வாய்ப் புக்களை அளித்திருந் தால் மனன் வோரா அளவுக்கு இவரும் சிறந்த வீரராக மிளிர்ந்திருப்பார்.

இவரைத் தவிர ரொபின் உத்தப்பா இந்தத் தொடரில் தனது தலைசிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தி அதிகபட்ச ஓட்டங் களைக் குவித்த வீரராகத் திகழ்ந்ததோடு இந்திய ஒருநாள் அணியிலும் மீண்டும் இடம்பிடித்துள்ளார்.

இவரைத் தவிர அம்பாத்தி ராயுடு, ஹர்பஜன் சிங்கின் பந்து வீச்சு, பிரக்ஜன் ஓஜா, மோகித் சர்மா, மற்றும் ஈஷ்வர் பாண்டே ஆகியோரின் அபாரப் பந்து வீச்சு அணிக்கு பலம் சேர்த்தன.



தேசிய மட்ட காரத்தே போட்டியில் முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த நகேந்திரன் (வள்ளுவன்) 85 கிலோ எடைப்பிரிவு குமித்தே போட்டியில் 3ஆம் இடத்தைப் பெற்று வெண்கலப்பதக்கத்தினைப் பெற்றுள்ளார். (ந-23)

## அரியாலை ஐக்கியம் வெற்றி



யாழ்ப்பாணம், ஜூலை 3

குருநகர் பாடுமீன் விளையாட்டுக் கழகத்தின் பொன் விழாவை முன்னிட்டு வட மாகாண ரீதியாக நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரின் ஆட்டங்கள் குருநகர் பாடும் மீன் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றன.

நேற்றுமுன்தினம் செவ்வாய் கிழமை இடம்பெற்ற ஆட்டம் ஒன்றில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து எல்லாளன் விளையாட்டுக்கழக அணி மோதியது. அதில் இரண்டு அணியினரும் ஆட்டநேர முடிவில் எதுவித கோல்களையும் பெறவில்லை. அதனால் வெற்றி, தோல்வியைத் தீர்மானிப்பதற்காக சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன. இதில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழக அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ந-23)

## "நான் ஏமாற்றுக்காரன்"



"எனது பெயர் லோ வின் செண்ட். கிரிக்கெட்டில் பணம் பெற்றுக் கொண்டு ஆட்டநிர்ணயத்தில் ஈடுபட்டுள்ளேன். நான் ஏமாற்றுக்காரன்" என்று நியூஸிலாந்தின் முன்னாள் கிரிக்கெட் வீரர் வின்செண்ட் நேற்றுத் தெரிவித்தார்.

இவ்வாறு தெரிவித்த சில மணி நேரங்களிலேயே, அவருக்கு வாழ்நாள் தடையை பிரிட்டன் கிரிக்கெட் சபையும் (ஈசிபி), சம்பியன்ஸ் லீக் கிரிக்கெட் அமைப்பும் விதித்தன.

தனது ஒழுங்கீனமான நடவடிக்கை குறித்து வின்செண்ட் விடுத்த செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது:

"கிரிக்கெட்டில் எனக்கு அளிக்கப்பட்ட இடத்தை நான் பல முறை தவறாகப் பயன்படுத்தியுள்ளேன். எனது தவறுகளை மறைத்து இருட்டில் பல ஆண்டுகள் வாழ்ந்து வந்தேன். ஆனால், நடந்த உண்மைகளை உலகுக்கு தெரிவிக்க வேண்டிய நேரம் வந்துவிட்டதாக சில மாதங்களுக்கு முன்பு உணர்ந்தேன்.

எனது நாட்டுக்கும், விளையாட்டுக்கும், எனது உறவினர்கள் மற்றும் நண்பர்களுக்கு நான் அவப்பெயரை ஏற்படுத்தி விட்டேன். என்மீது நம்பிக்கை இல்லாமல் முறைகேட்டில் ஈடுபட்டேன். நான் நேசித்த விளையாட்டுக்கு களங்கத்தை ஏற்படுத்தியுள்ளேன். அன்றாடம் குற்ற உணர்வுடன் எழுவது கடினமாக உள்ளது. மேற்கொண்ட தவறுகளை வெளிப்படையாக ஒப்புக்கொள்வதுதான், தவறை சரி செய்யும் வழி என்பதை அறிந்து, தற்போது தெரிவித்துள்ளேன்.

இனிமேல், உண்மையை உயரிய கொள்கை என்று என் குழந்தையின் கண்களைப் பார்த்து என்னால் கூற முடியும். தற்போது என் மீது நம்பிக்கை வந்துள்ளது. இந்த நாள் பொதுமக்கள், உறவினர்கள், ரசிகர்கள், கிரிக்கெட் தோழர்கள் ஆகியோரிடம் மன்னிப்பைக் கேட்க வேண்டிய நாள். என்ன தண்டனை அளித்தாலும் அதனை ஏற்றுக் கொள்வேன்" - என்று தெரிவித்துள்ளார். (ந)

மனம் மகிழ்ந்து வாழ்த்துகின்றோம்




யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியின் முன்னாள் அதிபரும் சாவகச்சேரி கோட்டக் கல்விப் பணிப்பாளருமான

திரு. கு. சிவானந்தம்

(BA, Dip in Edu., SLPS I, SLEAS III)

அவர்கள்

இலங்கை கல்வி நிர்வாக சேவையின் தரம் III இற்கு பதவி உயர்வு பெற்றமையைப் பாராட்டி வாழ்த்துவதோடு நீண்ட ஆயுள் ஆரோக்கியத்துடன் வாழ்ந்து தென்மராட்சிப் பிரதேசத்தின் கல்வி வளர்ச்சிக்கு சேவையாற்ற எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தென்மராட்சி கல்வி வலயச் சமூகம்.

(C7714)(10)

## தாச்சிப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், ஜூலை 3

அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தின் 95ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு மின்னொளியில் நடைபெறும் தாச்சிச் சுற்றுத் தொடரின் ஆட்டங்கள் சரஸ்வதி சனசமூக நிலைய மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.

நேற்றுமுன்தினம் செவ்வாய்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் வெற்றி பெற்ற அணிகளின் விவரங்கள் வருமாறு:

கண்ணகி விளையாட்டுக் கழக அணிக்கும் காளியம்பாள் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையே நடைபெற்ற ஆட்டத்தில் கண்ணகி விளையாட்டுக்கழக அணி 5:4 என்ற பழங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

ஆடிசிந்து விளையாட்டுக் கழக அணிக்கும் சுதுமலை புவனேஸ்வரி அம்பாள் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் ஆடிசிந்து விளையாட்டுக் கழக அணி 10:4 என்ற பழங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. (ந-23)

# நல்லூர் மூத்த விநாயகர் ஆலய தேர்த்திருவிழா சிறப்பு மலர்

## இன்று (03.07.2014) வியாழக்கிழமை




### அருள் ஆசிச் செய்தி



சைவமும் தமிழும் தழைந்தோங்குகின்ற யாழ்ப்பாண மாநகரிலே கச்சேரி நல்லூர் வீதியில் பல்லாண்டு காலமாக கோயில் கொண்டு எழுந்தருளி அருள் பாலித்துக் கொண்டிருக்கின்ற மூத்த விநாயகரின் இரதோற்சவம் இன்றைய தினம் நடைபெறுவதையிட்டு நாம் அனைவரும் இன்புறுகின்றோம். வரலாற்று பெருமைகளோடு ஒன்றித்த இவ்வாலயம் இக்கிராம மக்களின் அயராத முயற்சியால் வளர்ச்சியடைந்து வருகின்றது. இவ்வாலயம் சிறந்ததொரு பரிபாலனசபையால் சிறப்புற தர்மபரிபாலனம் செய்யப்பட்டு வருகின்றது. இந்த ஆலயத்தின் அறப்பணிகளாக உற்சவ காலங்களிலே அன்னதானம் வழங்கி அடியார்களின் பசிபோக்குகின்றது. மேலும் இக் கிராமத்தில் வாழுகின்ற சிறார்களை ஆலயத்தின் பால் ஈர்க்கும் பொருட்டு இந்து இளைஞர் மன்றத்தால் சமயம் சார் போட்டி பரீட்சைகள் நடத்தப்பட்டு பரிசில்களும் வழங்கி வருகின்றார்கள். பஞ்ச கிருத்தியங்களிலே அழித்தல் தொழிலை புரிகின்ற இரதோற்சவ பெருவிழாவில் கலந்துள்ள அடியார்களை தங்களின் கடைக்கண் பார்வையால் சிருஷ்டித்து அவர்களின் ஆணவம் போக்கி வையத்துள் வாழ்வாங்கு வாழ்வதற்கும் இப்பூவுலகில் வாழ்கின்ற சகல ஜீவராசிகளும் இன்புற்று சாந்தியும் சமாதானத்துடனும் வாழ எல்லாம் வல்ல மூத்த விநாயகன் அருள்பாலிக்க வேண்டுமென எம் குல தெய்வமாம் அன்னை வீரமா காளியின் பாதம் பணிந்து அருள் ஆசிகூறுகின்றேன்.

இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க

சாமஸ்ரீ தேசமான்ய, சக்திதாஷன்
சிவஸ்ரீ சிவ.கமல்ராஜ் குருக்கள்
(பிரதமகுரு வண்ணை வீரமாகாளி அம்மன் தேவஸ்தானம்).

### வேதனைகள் மாற்றிடவே இன்று தேரேறி வாருமையா!

மூலப் பரம்பொருளே! நல்லூர் மூத்த விநாயகரே! கணபதியே!
எம்மைக் காத்தருள்புரிய இன்று தேரேறி வாருமையா!
ஞாலத்திலே உமைவிட்டால் வேறுகதி யார் எமக்கு?
வேதனைகள் மாற்றிடவே இன்று தேரேறி வாருமையா!
காலன் எம்மை வந்துகதிகலங்க வைக்கும் வேளையிலே
வேலன் சகோதரனே எங்களை மீட்டருள வேண்டுமையா!
கோலங்காண நாம் திருக்கோயில் நாடியே வந்தோம்
ஞாலமுதல்வனே இன்று தேரில் அருட்காட்சி தாருமையா!

கலாபூஷணம்
இராசையா ஸ்ரீதரன்.

### ஆலய வரலாறு

ஈழமணித்திருநாட்டின் ஈடில்லாச்சிரமேயன்ன இலங்கிடும் யாழ்ப்பாணத்தில் சைவமும் தமிழும் வளர்த்த நாவலர் தோன்றிய நல்லூர் பதியில் கச்சேரி - நல்லூர் வீதியிலே மேற்கு நோக்கி அமர்ந் திருந்து மூத்தவிநாயகர் எனும் திருநாமத்தோடு அருள்பாலிக்கும் திருத்தலமே மூத்தவிநாயகர் ஆலயமாகும்.

இற்றைக்கு 480 ஆண்டுகளுக்கு முன் அப்போது யாழ்ப்பாணத்தை ஆண்டுவந்த சங்கிலிய மன்னன் தனது ஆட்சிக்குட்பட்ட பிரதேசங்களில் அதிகம் மக்களைக் குடியமர்த்தி விவசாயம், வர்த்தகம், கைத்தொழில் என்பவற்றை மேம்படுத்த நினைத்தான். அதனால் அண்டை நாடான தென் இந்தியாவிலிருந்து அங்கு ஆட்சியிலிருந்த அரசனுடன் தொடர்பு கொண்டு கணிசமான மக்களை வருவித்தான். இப்படி வருகை தந்தவர்களில் மருங்கூரிலிருந்து வருகை தந்தவர் களே எமது மூதாதையர்களாவர். இவர்கள் முதலில் நாவற்குழிப் பகுதியில் குடியேற்றப்பட்டனர். காலப்போக்கில் இவர்கள் நல்லூர்ப் பகுதியில் குடியேறினர். இவ்வாறு வாழ்ந்து வரும் காலத்தில் தம்புப்பத்தர் என்பவரது காணியில் அவரது அனுமதியுடன் தாம் வரும் போது மருங்கூரிலிருந்து கொண்டு வந்த கருங்கல்லினாலான விநாயகர் விக்கிரகத்தை சிறு கொட்டிலமைத்து அதில் ஸ்தாபித்து வழிபட்டுவந்தனர்.

கொட்டிலாக இருந்த இவ்வாலயம் 1850ஆம் ஆண்டில் ஆகம விதிகளுக்கமைவாக வைரக்கற்களால் கட்ட வேண்டுமெனத் தீர்மானித்த நம் மூதாதையர் வயலும் வயல் சூழ்ந்த இடமுமான மருதநிலத்தில் நாயன்மார்குளம், பாணன்குளம் ஆகிய குளங்கள் சூழவுள்ள இப்பகுதியில் ஆலயத்தை நிர்மாணித்தனர். கற்பக்கிரகம், ஸ்தூபி, கருங்கல்லினாலான விநாயகர் விக்கிரகம், மூஷிகம், பலிபீடம் மற்றும் ஐம்பொன்னாலான உற்சவமூர்த்தி ஆகியன உருவாக்கப்பட்டு அதே வருடத்தில் கும்பாபிஷேகமும் நடைபெற்றதாக அறியக் கிடக்கின்றது. இதனைத் தொடர்ந்து இரண்டு காலப்பூசையும் 10 நாள் அலங்கார உற்சவமும் நடந்துவந்துள்ளது.

1906ஆம் ஆண்டு இவ்வாலயம் புனருத்தாரணம் செய்யப்பட்டு 1907ஆம் ஆண்டு கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. அதன் பின்னர் கும்பாபிஷேகம் நடைபெற்ற காலங்கள் வருமாறு

1944 ஆவணி 25, 1968 ஆடி 14, 1981 ஆடி 13, 1993 ஆனி 04, 2006 வைகாசி04

1994இல் இருந்து எமது ஆலயத்தில் கொடியேற்றி மஹோற்சவம் செய்யவேண்டுமென ஆலய தர்மகத்தா சபை தீர்மானித்தது. அதற்கமைய ஆண்டுதோறும் திருவிழாக்கள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

தற்போது தினமும் மூன்று வேளைப் பூசைகள் நடைபெற்று வருவதுடன் எம்பெருமானைத் தேடி வரும் அடியார்களுக்கு அருளையும் ஆசியையும் தந்து கொண்டிருக்கிறார் நல்லூரில் இருக்கும் மூத்தவிநாயகர் பெருமான்.

### அருளாசிச் செய்தி



வினை தீர்க்கும் விநாயகப்பெருமான் இன்று நல்லூர்ப்பதியிலே தேரேறி வருகின்றார். வேரோடு வினைகளைய இன்று மூத்தவிநாயகர் கோயிலிலே கண் குளிரக் காணலாம்.

கணபதியைக் கைதொழுதால் கடுவினை அகலும் என்பர். அந்தவகையிலே இன்றைய நல்ல நாளிலே சித்திரத் தேரிலே மூத்தவிநாயகர் ஆரோகணித்து வரும் அழகு பக்தி பூர்வமானது. வேழமுகத்தோன் ஞானமுதல்வனாக, மூலப்பரம் பொருளாக வீற்றிருந்து அருள்பாலிக்கும் மூத்த விநாயகராலய தேர்த்திருவிழா மலருக்கு ஆசியுரை நல்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம்.

மஹோற்சவத்திலே இரதோற்சவம் அழித்தலைக் குறிப்பதாகும். எம்பெருமான் மூத்தவிநாயகர் எம்மைக் காத்தருள் புரியவும் அநியாய அக்கிரமங்களை அழித்தொழிக்கவும் இன்று ரதத்திலே பவனி வருகின்றார். இன்றைய விழா சிறப்புறவும் அடியார்கள் நல்விழாப் பொலிவுகண்டு ஆனந்திக்கவும் அருளாசி நல்கி வாழ்த்துகின்றோம். எல்லோரும் இன் புற்றிருக்க விநாயகர் அருள்புரிய வேண்டுமென்று நல்லைக் குருமணியின் பாதம்பணிந்து உளமாரப் பிரார்த்தித்து ஆசி வழங்கி வாழ்த்தி மகிழ்கின்றோம்.

'என்றும் வேண்டும் இன்ப அன்பு'

ஆதீனமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக
ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

### பிறவிப்பயனைக் கொடுக்கும் விநாயகன்



நல்லூர் மூத்த விநாயகர் ஆலய வருடாந்த ரதோற்சவம் இன்று நடைபெறவிருப்பதினை முன்னிட்டு உதயன் பத்திரிகையில் சிறப்பு மலர் வெளியிடுவது மகிழ்ச்சி அளிக்கின்றது. இன்றைய தினம் நடைபெறும். இரதோற் சவத்தில் கலந்து சிறப்பிக்கும் அடியார்கள், விநாயகப் பெருமானின் தேர்வடம் பற்றி இழுப்பவர்கள் யாவரும் தமது பிறவிப் பெரும்பயனைப் பெற்று மண்ணில் நல்லவண்ணம் நீடூழிவாழ வாழ்த்து கின்றேன்.

திரைகடல் ஓடி திரவியம் தேடும் எமது அயலவர்கள், அன்பர்கள், அடியார்கள் விநாயகப் பெருமானை நினைத்து அவ்வப் போது செய்யும் பொருளுதவியினால் ஆலயத் திருப்பணிகள் செய்து சிறப்பாக மிளிர்கின்றது. தொடரட்டும் அவர்கள் பணி.

இவ்வாலயத்தின் இந்து இளைஞர் மன்றத்தினால் நடத்தப்பட்ட கல்விசார்- சமய அறிவுப் போட்டியின் பெறு பேறுகள்- பரிசு வழங்கல் என்பன இன்று நடைபெறுகின்றமை பெரிதும் பாராட்டுக்குரியது. மகிழ்ச்சியளிக்கின்றது. பத்து தினங்களும் அறுசுவையுடன் அன்னதானம் செய்த உபயகாரர் அதன் பயனை அடைவார்களாக என ஆசி கூறி மகிழ்கின்றேன்.

ந.கண்ணலிங்கம்
தலைவர், நல்லூர் மூ.வி.தர்மகர்த்தா.


தேர்த்திருவிழா
சிறப்புற வாழ்த்துவோர்:

ABIRAMY
FancyDealers in Fabric Panits Lace Button, Flowers Cosmetic Imitation Jewllery& Fancy Goods Garment Assories-Etc
Call: 077 729 1971
D-27,Grand Bazaar, Jaffna.

MATHI COLOURS Printers
Wedding Card Show Room
Tel: 021 222 9285
15/2, Murugesar Lane, Nallur, Jaffna.
e-mail: mathicolours@gmail.com
web: www.mathicolours.com

K.S.CONSTRUCTION
K.S.கட்டட ஒப்பந்தகார்.மூத்த விநாயகர் கட்டட பொருள் விற்பனை நிலையம்.
e.mail: subes@gmail.com
ADDRESS: 114/19, NAVALAR ROAD, JAFFNA
PHONE: 077 331 8104, 077 945 5375

ஸ்ரீ சுகந்தி சேல்ஸ் சென்ரர்
கட்டடப் பொருள்கள் மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனை செய்பவர்களும் வீடு, கோயில் கட்டட ஒப்பந்தகாரரும்,வீடு, கோயில்களுக்கு அலங்காரப் பொருள்கள் விற்பனை செய்பவரும்
இல.383, நாவலர் வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
ச.சாந்தலிங்கம்
தொ.இல. 021 222 3287, 077 412 6435
30/3, மூத்த விநாயகர் வீதி,
கச்சேரி, நல்லூர் வீதி,
2 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.
கிளை-223, கச்சேரி நல்லூர் வீதி,

கஜானன் பல்பொருள் வாணிபம்
கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.

ஜெயலக்ஷன் பான்சி ஹவுஸ்
கமலேஸ்வரி ஸ்ரோர்ஸ்
211, 162 கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்
021 222 8453, 021 222 4354

கமலேஸ்வரி புடைவையகம்
பட்டுச்சேலைகளின் வண்ணமயமான இடம்
ஒரு முறை விஜயம் செய்து பாருங்கள்
புடைவைத் திணுசுகளின் சொர்க்கம் இதுவென்று அறிவீர்கள்
எமது வாடிக்கையாளர்களுக்காக
கொழும்பில் 214, பிரதான வீதி, கொழும்பு-11, 011 245 2878
யாழில் 25, 27, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம். 021 222 6303

மூத்த விநாயகர்
பஸ் புக்கிங் சென்ரர்
கச்சேரி நல்லூர் வீதி- யாழ்
077 925 4914
(சி/13865)(4.3.6)

Keyu Lines கியூ லைன்ஸ்
Non A/C & Adjustable
பலுான் (அரை சொகுசு) பஸ்சேவை
ஆசன பதிவுகளுக்கு: 077 859 1555 (கொழும்பு)
077 859 5151(யாழ்ப்பாணம்)
மேலதிக தொடர்புகளுக்கு: 077 859 1943

# தமிழரின் காணிகள் திட்டமிட்டு அபகரிப்பு

## கிழக்கு மாகாண சபை உறுப்பினர் குற்றச்சாட்டு

மட்டக்களப்பு.ஜூலை 3
மட்டக்களப்பு மாவட்டத்தில் திட்டமிட்டு தமிழர்களின் காணிகள் அபகரிக்கப்பட்டு வருகின்றன என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் இரா.துரை ரெட் ணம் தெரிவித்தார்.

ஈழுமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியால் தியாகிகள் தினம் மட்டக்களப்பிலுள்ள அதன் அலுவலகத்தில் ஞாயிற்றுக்கிழமை அனுஷ்டிக்கப்பட்டது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஒடுக்கப்பட்ட தமிழ் மக்களின் விடிவுக்காக உயிர்த் தியாகம் செய்த அத்தனை தமிழ் உறவுகளும் தியாகிகளேயாவர்.

இலங்கை அரசு வடக்கு, கிழக்கு தமிழர்களின் பொது எதிரியாகும். உலகிலேயே வெள்ளைக் கொடியுடன் சென்றவர்களைக் கொலை செய்த நாடு இலங்கையாகும்.

இறையாண்மையைப் பற்றி பேசுகின்ற இலங்கை அந்த சட்டத்தை மீறியே வெள்ளைக் கொடியுடன் சென்றவர்களைச் சுட்டுக் கொலை செய்தது. வெள்ளைக் கொடியுடன் வருபவர்களை மனிதாபிமான ரீதியாகப் பார்ப்பதே கடமையாகும். ஆனால் அதை மீறி இலங்கை செயற்பட்டுள்ளது.


இரா.துரைரெட்ணம்

முஸ்லிம் மக்களுக்கு எதிராக அரசு திட்டமிட்டு வன்முறைகளைத் தொடங்கியுள்ளது. தமிழ் மக்களைக் கடந்த 30 வருடங்களாக அழித்த அரசு இன்று முஸ்லிம்களை அழிக்கத் தொடங்கியுள்ளது. முஸ்லிம்கள் மீது மேற்கொள்ளப்பட்டுவரும் வன்முறைச் சம்பவங்களுக்கு எதிராகத் தமிழர்களாகிய நாம் குரல் கொடுக்க வேண்டும்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் திட்டமிட்டு தமிழர்களின் காணிகள் அபகரிக்கப்பட்டு வருகின்றன. மட்டக்களப்பு மாவட்டத்தில் சிங்களக் குடியேற்றங்கள் இடம்பெற்று வருகின்றன- என்றார். (ச)


## கேள்வி அறிவித்தல்

**மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை வேலைத்திட்டம் (PSDG)-2014**

**மாந்தை மேற்கு பிரதேசசபை**

01.07.2014ஆம் திகதிய பத்திரிகையில் வெளியான கேள்வி பிணைவைப்பு தொகை பின்வருமாறு திருத்தப்பட்டுள்ளது.

| கேள்வி எண் | வேலை விவரம் | மதிப்பீட்டு தொகை (ரு) மில்லியன் | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை: பிணை வைப்பு | வேண்டப்படும் கேள்விப் பிணை: செல்லுபடியாகும் காலம் |
|---|---|---|---|---|---|---|
| PSDG/NP/MN/MWPS/W/02 | உள்ளக வீதி தாரிட்டு புனரமைத்தல் - தட்சனாமருதமடு | 7.12 | 03 மாதங்கள் | C7 அல்லது அதற்கு மேல் | ரு 72000.00 | 03 நவம்பர் 2014 |
| PSDG/NP/MN/MWPS/W/03 | வீதி விளக்குகள் கொள்வனவு செய்து பொருத்துதல் (Solar Power System) | 0.445 | 03 மாதங்கள் | ... | ரு 4500.00 | 03 நவம்பர் 2014 |

(C/14866)(10.6.3)



SHANTHIHAM
Association for Health & Counselling

சாந்திகம் மற்றும் தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம் (1978 ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க பல்கலைக்கழகச் சட்டத்தின் 25A பகுதியின் கீழ் பட்டங்கள் வழங்கும் நிறுவனம்) இணைந்து வடமாகாணத்தில் யாழ்ப்பாணத்திலும் வவுனியாவிலும் பின்வரும் கற்கை நெறிகளை நடாத்துவதற்கு உத்தேசித்துள்ளன.

2014/2015 ஆண்டிற்குரிய தமிழ்மொழி மூலமான பின்வரும் பாடநெறிகளுக்கான விண்ணப்பங்கள் பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து கோரப்படுகின்றன.

1. சமூகப்பணி டிப்ளோமா கற்கைநெறி
   **(Diploma in Social Work)**
2. சிறுவர் பாதுகாப்பு டிப்ளோமா கற்கைநெறி
   **(Diploma in Child Protection)**

காலம்
12 மாதங்கள்

பாடநெறிக் கட்டணம்
ரூபா. 45,000.00
(01 year)

வகுப்புகள்
(வவுனியா,யாழ்ப்பாணம்)
வார இறுதி நாட்களில்
காலை 9 மணி முதல்
பி.ப 4 மணிவரையும்

இப்பாடநெறியானது சமூகசேவை மற்றும் சமூகநலன்புரித் துறையில் பணியாற்றும் அரசாங்க மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களின் உத்தியோகத்தர்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் இத்துறையில் பணியாற்ற ஆர்வமுள்ள க.பொ.த (உ/த) சித்தியடைந்த அல்லது அதற்கு மேற்பட்ட தகைமையுள்ளவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பிக்கும் . தபால் உறையின் இடது மூலையில் பாடநெறியின் பெயர், கற்கை நிலையம் மற்றும் கற்கைநெறியின் விபரத்தைக் குறிப்பிட்டு நிறைவேற்று பணிப்பாளர், சாந்திகம் என்று குறிப்பிட்டு பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

விண்ணப்பப் படிவங்களை ரூபா. 100.00 செலுத்தி நேரடியாகவோ அல்லது யாழ்ப்பாணம் தபால் நிலையத்தில் மாற்றக்கூடியவாறு பெறுமதியான காசுக் கட்டளையை, சுய பெயர் முகவரியிடப்பட்ட ரூபா. 40.00 பெறுமதியான முத்திரை ஒட்டப்பட்ட தபால் உறையையும் விண்ணப்பப் படிவத்தைக் கோரும் கடிதத்தோடு இணைத்து கீழே உள்ள முகவரிக்கு அனுப்புவதன் மூலமும் பெற்றுகொள்ளலாம். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் 2014.07.20 ஆம் திகதிக்கு முன் அனுப்பப்பட வேண்டும். வார இறுதி நாட்களில் தங்குமிட வசதிகள், பாடநெறிக்கட்டணம் தவணை அடிப்படையில் செலுத்துவதற்கான கோரிக்கைகள் தகைமை அடிப்படையில் ஏற்றுக்கொள்ளப்படும்.

*முகவரி:*

8, 8/1, கற்பக விநாயகர் லேன்,
கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 0212223338
ஈமெயில் முகவரி: psych@slt.lk இணையம்: www.shanthiham.lk

(C/14865)(10.6.3)



USAID
FROM THE AMERICAN PEOPLE
SHANTHIHAM
Association for Health & Counselling

## பதவி வெற்றிடம் திட்ட இணைப்பாளர்

கடந்த பல வருடங்களாக உளவளத்துணை மற்றும் சமுதாய மட்ட உளமருத்துவ - உளசமூகத்துறையில் சேவைபுரியும் எமது நிறுவனம் மருதங்கேணி, கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய பிரதேசங்களில் USAID நிறுவனத்துடன் இணைந்து உளசமூகமேம்பாடு தொடர்புடைய நடவடிக்கைகளைச் செயற்படுத்த உள்ளது. இவற்றைப் பொறுப்பெடுத்துச் செயற்படுத்தக்கூடிய ஒரு பொருத்தமான திட்ட இணைப்பாளரை நாம் உள்ளீர்க்க விரும்புகிறோம்.

**தகுதிகள்:-**

- அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றின் பட்டதாரியாக இருத்தல்.
- சமுதாயமட்ட உளசமூகப் பணிகளில் குறைந்தது இரண்டுவருட அனுபவத்தினை உடையவராக இருத்தல்.
- சாந்திகம் நிறுவனத்தையும், அதன் விழுமியங்களையும் புரிந்து அவற்றை represent செய்யக் கூடியவராக இருத்தல்.
- மேற்குறிப்பிடப்பட்ட இடங்களில் தங்கி நின்று வேலை செய்யக் கூடிய ஆர்வம் உடையவராக இருத்தல்.
- ஒருதிட்டத்தைப் பொறுப்பெடுத்து, முகாமைத்துவம் செய்து, பொருத்தமான அறிக்கைகளைத் தயாரித்து, நிறைவுசெய்வதற்குத் தேவைப்படும் திறன்களைக் கொண்டிருத்தல்.
- கணினியைக் கையாளும் திறனுடன், ஆங்கிலத்தில் சரளமாகப் பேசும் மற்றும் எழுதும் ஆற்றல் உடையவராயிருத்தல்.
- வாகன ஓட்டுநர் அனுமதிப் பத்திரம், மற்றும் சிங்கள மொழியில் பேசும் ஆற்றல் என்பனவற்றை மேலதிகத் தகைமைகளாகக் கொண்டிருத்தல்.
- முழு நேர ஒப்பந்த அடிப்படையில் உள்ளீர்க்கப்படும்.

**நேரடி கண்காணிப்பு :நிறைவேற்றுப் பணிப்பாளர்**
**ஊதியம் :பொருத்தமான தகுதிகள் அடிப்படையில்.**
**விண்ணப்பிப்பதற்கான இறுதித் திகதி : 10-07-2014**

பொருத்தமானவர்கள் எனக் கருதப்படும் விண்ணப்பதாரிகள் எழுத்து, செயன்முறை மற்றும் நேர்முகத் தேர்வுகளுக்கு அழைக்கப்படுவார்கள். மேலதிக விபரங்களுக்கும், சுயவிபரங்களடங்கிய விண்ணப்பங்களைக் கையளிப்பதற்கும் அல்லது அனுப்புவதற்கும்:

ஜெ.தற்பரன்
நிறைவேற்றுப் பணிப்பாளர் - சாந்திகம்
8, 8/1 கற்பகவிநாயகர் வீதி, யாழ்ப்பாணம்.

**தொலைபேசி: 021 222 9720/3338** **ஈமெயில்: psych@sltnet.lk**

(C/14864)(10.6.3)

# அனுமதிபெறாத மண் அகழ்வை நிறுத்துக

## கிளாலி மக்கள் கோரிக்கை

பளை, ஜூலை 3

கிளாலிப் பகுதியில் எவருடைய அனுமதியுமின்றி சட்டவிரோதமான முறையில் டிராக்டர்கள் மூலம் இரவு பகலாக வேறு இடங்களுக்கு மணல் கடத்தப்படுவதால் கிராமத்துக்குள் கடல் நீர் உட்புகுவதுமல்லாமல் விவசாய நிலங்களும் உவர் நிலமாக மாறிவிடும் என்று அச்சம் தெரிவித்துள்ள மக்கள் திருட்டுத்தனமான முறையில் மணல் ஏற்றிச் செல்வதைத் தடுத்து நிறுத்துமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கோரியுள்ளனர்.

“ டிராக்டர்கள் மூலம் வேறு இடங்களுக்கு மணல் ஏற்றிச் செல்லப்படுவதால் கிராமத் துக்குள் கடல்நீர் உட்புகுவதுமல்லாமல் விவசாய நிலங்களும் உவர் நிலங்களாக மாறும் ஆபத்து ஏற்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் கிளாலிப் பகுதியில் 2010ஆம் ஆண்டு மீள்குடியமர்த்தப்பட்ட 210 குடும்பங்களில் 160 குடும்பங்களுக்குப் பொது நிறுவனத்தால் வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டன. இந்த வீடுகளுக்குத் தேவையான மணல், கிளாலிப் பகுதியிலுள்ள மண் மேடுகளில் இருந்து எடுக்கப்பட்டதால் பயனாளிகள் நன்மையடைந்ததுடன் வீட்டுத் திட்டமும் தடங்கலின்றி விரைவாகச் செய்து முடிக்கப்பட்டது.

மிகுதியாகவுள்ள குடும்பங்களுக்கான வீட்டுத் திட்டமும் பொது நிறுவனங்களின் நிதி உதவியுடன் அமைக்கப்படவுள்ளது. அவர்களது வீட்டுத் திட்டத்துக்குத் தேவையான மணலும் அந்தப் பகுதியிலிருந்தே பெறப்படவுள்ளது.

இந்த நிலையில் எவருடைய அனுமதியுமின்றி சட்டவிரோதமான முறையில் இரவு பகலாக டிராக்டர்கள் மூலம் வேறு இடங்களுக்கு மணல் ஏற்றிச் செல்லப்படுவதால் கிராமத்துக்குள் கடல்நீர் உட்புகுவதுமல்லாமல் விவசாய நிலங்களும் உவர் நிலங்களாக மாறும் ஆபத்து ஏற்பட்டுள்ளது.


மணல் கடத்தல் குறித்து கவலை தெரிவித்துள்ள அந்தப் பகுதி மக்கள் சட்ட விரோதமான முறையில் இடம்பெறும் மணல் அகழ்வைத் தடுத்து நிறுத்தி விவசாய நிலங்களையும் குடியிருப்புக் காணிகளையும் பாதுகாப்பதற்கான நடவடிக்கையை விரைவாக எடுக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கோரியுள்ளனர்.

(வ-115)

# திருத்தத்துக்காகக் காத்திருக்கும் படகு மேலும் பாதிப்புறும் நிலை

யாழ்ப்பாணம், ஜூலை 3

அடித்தள பலகைகள் மாற்றுவதற்காக கரையில் இழுத்து வைக்கப்பட்டுள்ள நெடுந்தீவு ப.நோ.கூ.சங்கத்தின் சமுத்திர தேவா படகு வெயில் காரணமாக மேலும் சேதமடையும் சாத்தியம் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.



குறிப்பிட்ட படகின் திருத்த வேலை தொடர்பாக கரைக்கு இழுத்து வந்து நிலை நிறுத்துவதற்காக மட்டும் 40 ஆயிரம் ரூபா செலவு செய்யப்பட்டுள்ளது. பொறுப்பற்ற இந்த நடவடிக்கையால் பொதுமக்களது பணம் வீண் விரயமாவதாக கவலை தெரிவிக்கப்படுகிறது. அடிப்பாகம் கடல்நீரில் மிதக்காத நிலையில் நீண்ட நாள்களாக உள்ள படகு திருத்த வேலைகள் எதுவும் மேற்கொள்ளப் படாத நிலையில் மேலும் பாதிப்படையலாம் எனவும் கூறப்படுகின்றது.

(ஒ-7)



வரலாற்றுப் புகழ்மிக்க மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்தில் இடம்பெறும் திருப் பணிகளின் அடிப்படையில் சுமார் 10 லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட நடராஜ சுவாமி கோயில் மற்றும் கிழக்கு வாசலில் அமைக்கப்பட்ட வில்லு மண்டபப் பணிகள் நிறைவுபெற்ற நிலையில் கடந்த திங்கட்கிழமை பகல் கும்பாபிஷேக நிகழ்வு கள் இடம்பெற்றன.

(வ-86)

# தொடர்ச்சிகள்

## வெறுப்பூட்டலை

குறிப்பாக பௌத்த தீவிரவாத ஆயுதக் குழுக்களால் மேற்கொள்ளப்படும் குற்றங்களுக்கு காரணமானவர்களை த்ண்டிக்காத போக்கு மேலும் நீடிக்கின்றது. அதற்கு இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறுவதற்கு இந்தப் போக்கு உரமூட்டிக் கொண்டிருக்கின்றது"- என்று எச்சரித்துள்ளார் மத சுதந்திர விசேட நிபுணர் பீலி வோர்ட்.

"இந்தச் சமூகங்களின் உயிர்களையும், சொத்துக்களையும், வழிபாட்டிடங்களையும் பாதுகாப்பதற்கு போதிய நடவடிக்கைகளை பொலிஸாரும், நீதித்துறையினரும் எடுக்கத் தவறியிருப்பதும், குற்றவாளிகளைத் தண்டிக்காமல் விடுவதும், இவ்வாறான தாக்குதல்களை மேலும் மேலும் தூண்டும். இது வன்முறைகளைத் தோற்றுவிக்கும்" - என்றும் குறிப்பிட்டுள்ள அவர், "சிறுபான்மை மதத்தினருடைய மதச் சுதந்திரம் - நம்பிக்கைச் சுதந்திரத்தை உறுதிப்படுத்துமாறும், இன மற்றும் மத வெறுப்பூட்டல்களுக்கு பாதுகாப்பு வழங்குவதை நிறுத்துமாறும், மதப் பல்வகைமையை மதிக்குமாறும் இலங்கை அரசைக் கேட்டுள்ளார்.

### நடவடிக்கை தேவை

"இலங்கையில் வாழ்கின்ற மதச் சிறுபான்மையினரின் தனிப்பட்ட பாதுகாப்பை உறுதிப்படுத்தத் தேவையான அவசர நடவடிக்கை எடுப்பதுடன், வன்முறைகளுக்கு கட்டாயம் முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்"- என்று சிறுபான்மையினர் பிரச்சினை தொடர்பிலான விசேட நிபுணர் ரிட்டா இஷுக் தெரிவித்துள்ளார்.

"பௌத்த தீவிரவாத ஆயுதக் குழுக்களினால் ஏற்படுத்தப்படும் வன்முறைஅச்சுறுத்தலிலிருந்து பாதுகாக்க வேண்டும். நடந்தேறிய சம்பவங்கள் தொடர்பில் விசாரணை மேற்கொள்ள உயர்மட்டக் குழு நியமிக்கவுள்ளது" என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளதை வரவேற்றுள்ள ரிட்டா, "மத சிறுபான்மையினரின் முழு உரிமைகளும் சட்டத்தில் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்பதுடன் அவை நடைமுறையில் பயன்படுத்தப்பட வேண்டும்"- என்றும் குறிப்பிட்டுள்ளார்.

### பொறுப்புக் கூறல் தேவை

"சிறுபான்மையினரின் பாதுகாப்பு நடவடிக்கைகள் உறுதிப் படுத்தப்படும் அதேவேளையில், அளுத்கமவில் நடந்தேறிய கொலைகளுக்கு காரணமானவர்கள் நீதியின் முன் கொண்டு வரப்படுவது உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டும். பொறுப்புக் கூறுதலை உறுதிப்படுத்துவதற்கான பற்றுறுதியை இலங்கை அரசு வெளிப்படுத்த வேண்டும். இது இவ்வாறான தாக்குதல்களைத் தடுக்கும்" என்று சுட்டிக்காட்டியுள்ளார் நீதிக்குப் புறம்பான மற்றும் பலவந்தமான கூட்டுப் படுகொலைகளுக்கான விசேட நிபுணர் கிறிஸ்ரோ பெய்ன்ஸ். (ற-5)

## நுரைச்சோலை

பெறுவார்கள்.

போர் முடிவடைந்த பின்னர் இலங்கைஅபிவிருத்திஅடைந்து வரும் நாடு மாதிரியாக இல்லாமல், அபிவிருத்தி அடைந்த நாட்டைப் போன்றே உள்ளது. இலங்கையில் சீன நிதியுதவியில், நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள், விமானநிலையம், அனல்மின் நிலையம் என்பன அமைக்கப்பட்டுள்ளன. போரின் பின்னர் இலங்கை நிறைய விடயங்களைச் சாதித்துள்ளது. அடிப்படைக் கட்டுமான விடயத்தில் சாதிக்க இன்னமும் நிறையவே உண்டு"- என்று தெரிவித்துள்ளார்.

அத்துடன், நுரைச்சோலை அனல் மின் நிலையத்தின் மூன்றாவது பாகம் நிறைவு செய்யப்படும் போது இலங்கையில் 53 சதவீத மின்சாரத்தை இதன் மூலம் பெற முடியும். இந்தத் திட்டத்தில் சில சிக்கல்கள் இருந்தாலும் அவை பூரணப்படுத்தப்பட்டு வேலைகள் இரண்டாம் கட்டத்தின் முடிவுறும் தறுவாயை எட்டியுள்ளன. இந்தத் திட்டம் பூர்த்தியடைந்ததும் இலங்கையில் மின்சாரக் கட்டணத்தை ஜனாதிபதி குறைப்பார் என்று எதிர்பார்க்கின்றேன்.

இலங்கை, சிங்கப்பூரையும் தாண்டி வளர்வதற்கு நினைக்கின்றது. அதற்கு சீனா எப்போதுமே ஆதரவளிக்கும். இலங்கையின் பங்காளியாக, இலங்கையின் மனித உரிமைகள் விடயத்தில் சீனா இருக்கும் - என்றும் அங்கு அவர் குறிப்பிட்டார்.

(ற-5)

## தேசிய

னர் எமக்கு அனுப்பி வைக்குமாறு சகல பாடசலை அதிபர்களுக்கும் நாம் அறிவித்த போதும் இதுவரை பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களில் நான்கில் ஒரு பங்கினர் மட்டுமே விண்ணப்பித்துள்ளனர்.

அவற்றில் 3 ஆயிரத்து 387 விண்ணப்பங்களில் கையொப்பமிடாமை மற்றும் முத்திரை ஒட்டப்படாமை போன்ற குறைபாடுகள் காணப்படுவதால் அவற்றை ஏற்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

நிராகரிக்கப்பட்ட விண்ணப்பங்களை உரிய பாடசாலைகளுக்கு திருப்பி அனுப்பியுள்ளோம். எனவே இறுதி நேர நெருக்கடிகளைத் தவிர்க்கும் முகமாக இன்னும் இரண்டு வாரங்களுக்குள் மாணவர்களின் விண்ணப்பங்களை அனுப்பிவைக்குமாறு சகல பாடசாலை அதிபர்களிடமும் கல்விஅதிகாரிகளிடமும்வேண்டுகோள் விடுக்கின்றோம்"- என்று அவர் அங்கு மேலும் தெரிவித்துள்ளார்.

(ற-5)

## பல

லாளருக்கும், பொது பல சேனாவுக்கும் தொடர்பு இருக்கின்றது என்று கூறமுடியாது. பொது பல சேனா என்பது ஒரு அமைப்புதான். இதுபோல பௌத்தத்தில் பல அமைப்புகள் இருக்கின்றன. மேலும், கிறிஸ்தவ, இஸ்லாம், இந்து முதலான சமயங்களை அடிப்படையாகக் கொண்ட பல அமைப்புகள் இருக்கின்றன. பொது பல சேனாவோ, உலமா சபையோ இந்த அமைப்புகளின் பெயர்களை நான் குறிப்பிட விரும்பவில்லை. இந்த அமைப்புகள் தொடர்பில் எமக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை. ஜனநாயக நீரோட்டத்தில் மற்றவருக்கு இடையூறு ஏற்படுத்தாத வகையில் செயற்பட அவற்றுக்கு உரிமை உள்ளது.

அளுத்கம சம்பவத்துக்கும் பாதுகாப்புச் செயலாளருக்கும் எவ்வித தொடர்பும் இல்லை. இது தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள செய்திகளால்தான் நாம் இவ்வாறு விளக்கமளிக்கின்றோம். பொது பல சேனாவை நாம் எதிர்க்கவில்லை. பொது பல சேனா பற்றி கருத்து வெளியிடுவதால் அதை நாம் எதிர்க்கின்றோம் என்று அர்த்தம் கற்பிக்க வேண்டாம். பொது பல சேனாவுக்கு பாதுகாப்புச் செயலாளர் ஆதரவளிக்கின்றார் என்பது தவறு என்றே நாம் கூறுகின்றோம். - என்று தெரிவித்துள்ளார். (ற-5)

## குடும்பஸ்தர்

சாரதியாக் கடமையாற்றும் குறித்த நபர், குறித்த ஹன்ரர் வாகனத்தின் கீழே சடலமாகக் காணப்பட்டுள்ளார். சடலம் தற்போது கிளிநொச்சி வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான விசாரணைகளைக் கிளிநொச்சிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ற-106,55)

## வழமைக்குத்

குருநாகல் மாவட்டத்தின், பொத்துஹார - பொல்ஹாவெல இடையே நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை அதி காலை 2.45 மணியளவில் கொழும்பு - திருகோணமலை இடையில் சேவையில் ஈடுபட்ட ரயிலின் இரண்டு பெட்டிகள் தடம் புரண்டன. அதன் காரணமாக, இந்த மார்க்கத்தின் வழியே பயணம் மேற்கொள்ளும் வடக்குக்கான 6 தபால் ரயில் சேவைகள் நிறுத்தப்பட்டிருந்தன.

தடம்புரண்ட ரயில் பெட்டிகளை தூக்கி நிறுத்தும் பணிகள் நேற்றுமுன்தினம் காலையிலிருந்து நடந்தன. தற்போது அவை தூக்கி நிறுத்தப்பட்டு, தண்டவாளங்கள் சீர்செய்யப்பட்ட நிலையில் நேற்று அதிகாலை முதல் ரயில் சேவை வழமைக் குத் திரும்பியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ற-5)

## டெங்குநோயைக்

பரவி வருகின்றது. இதனைக் கட்டுப்படுத்துவதற்கு பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொண்ட போதிலும் நோய்த் தாக்கம் குறையவில்லை. குறிப்பாக கரவெட்டி, பருத்தித்துறை ஆகிய பகுதிகளில் நோய்த் தாக்கம் அதிகரித்துள்ளது.

மந்திகை ஆதார வைத்திய சாலையில் கடந்த மாதம் மட்டும் 60 பேருக்கு மேற்பட்டோர் டெங்கு நோயாளிகளாக இனங் காணப்பட்டனர்.

தற்போது மழையும் ஆரம்பித்துள்ளதால் அதன் தாக்கம் அதிகமாகவே இருக்கும். எனவே மழை நீர் தேங்கக் கூடிய இடங்களை இல்லாது செய்வதுடன் டெங்கு நுளம்பு பரவக்கூடிய அனைத்துஇடங்களையும்அழிப்பதற்கு பொதுமக்கள் முன்வர வேண்டும் என்று அதில் கூறப்பட்டுள்ளது. (ஐ-108)

## முடிவு

வைக்கப்பட்டது. அத்துடன் தீவகப் பிரதேசத்திற்குத் குடி தண்ணீர் தேவை என்பதை அடிப்படையாக வைத்து, யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா, நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார், வடக்கு மாகாண எதிர்கட்சித் தலைவர் சி.தவராஜா, பொறியியலாளர் தி.பாரதிதாசன், சுந்தரம் டிவகலாலா, மனோகரன் ஆகியோர் கருத்து வெளியிட்டுள்ளனர்.

அதேவேளை ஆறுமுகம் திட்டம் தான் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் கருத்து வெளியிட்டுள்ளனர். குறிப்பாக நடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், க.சுரேஷ்பிரேமச்சந்திரன், சி.சிறீதரன் மற்றும் பொறியியலாளர் ஆறுமுகம், பொறியியலாளர் ரட்ணம் ஆகியோரே இவ்வாறு கூறியுள்ளனர். ஆயினும் இறுதியில் எந்தவொரு முடிவும் எட்டப்படாது கூட்டம் முடிவடைந்துள்ளது. (ற-5)

# யாழ் நகரில் கல்வி உலகில் புதியதோர் திருப்பம்

Rashmi Shaw Kids' Future

## BOOK MART & Education care

## பிரமாண்டமான திறப்புவிழா

நாளை (04.07.2014)
வெள்ளிக்கிழமை பி.ப 3.00 மணி

**முற்று முழுதான காட்சிப்படுத்தலுடனான ஓர் புத்தகக் காட்சியறையின் உதயம்**

**எமது காட்சிகள்**

- காகிதாதிகள்
- அப்பியாசக் கொப்பிகள்
- பயிற்சிப் புத்தகங்கள்
- அறிவுக் கதைகள்
- பாடசாலை மற்றும் அலுவலக உபகரணங்கள்

**எமது சேவை**

- மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்குகள் (Guidance Seminars to Exams)
- தொழில் வழிகாட்டல் கருத்தரங்குகள் (Career guidance Seminars)
- சுய மதிப்பீட்டுப் பரீட்சை வசதிகள் (Self examination facilities)
- மாதாந்த கல்வி கருத்தரங்குகள் (Monthly Education Seminars)

(50944)(10.6)

No. 925/1, Thaddatheru Junction, K.K.S Rd, Jaffna.
E mail: rbm.jaf@gmail.com Website: www.rbm.lk
T.P: 021 222 5151



# பிரபாகரனின் கொள்கைகள்

"வடபகுதி இளைஞர்கள் இப்போதும் பிரபாகரனின் கொள்கைகளில் நம்பிக்கை வைத்துள்ளமையாலேயே மலையகத்தில் ஆசிரியத் தொழில் புரிய வர மறுக்கின்றனர்" இதை எந்த ஒரு தமிழரும் சொல்லவில்லை. இலங்கையின் சர்வவல்லமை பொருந்திய நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷதான் கூறியிருந்தார்.

அண்மையில் ஊவா மாகாண அபிவிருத்தி தொடர்பான கூட்டம் பதுளையில் இடம்பெற்றபோது இளைஞர் விவகார அமைச்சர், ஜனாதிபதியிடம் 120 தொழினுட்ப ஆசிரியர்கள் மலையகத்துக்கு தேவை எனக் கோரியபோதும் வடக்கிலிருந்து 24 பேரே வந்தனர் எனத் தெரிவித்தார். அதற்குப் பதிலளித்த ஜனாதிபதி அதற்குக் காரணம் அந்த இளைஞர்கள் இப்போதும் பிரபாகரனின் கொள்கைகளை நம்புவதே எனத் தெரிவித்திருந்தார்.

தமிழ் மக்கள் பிரபாகரனின் கொள்கைகளை இன்றும் நம்புகின்றார்கள் என அவர் புரிந்து வைத்திருப்பது ஒரு நல்ல அம்சம் தான்.ஏனெனில் பிரபாகரனின் கொள்கைகள் என்பன ஆகாயத்திலிருந்து மழை பெய்யும்போது........

இந்த வார இதழில்








# இணுவில் கந்தசுவாமி கோயில்

**புனராவர்த்தன அஷ்டபந்தன உத்தமோ உத்தம (33 குண்டம்)**

## மகா கும்பாபிஷேகப் பெருவிழா

## நாளை 04.07.2014 வெள்ளிக்கிழமை

**காலை 8.40 மணிமுதல் 10.27 வரை.**

* இன்றும் மகா யாகம் காலை 9 மணி-இரவு 11.30 மணிவரை நடைபெறும்.

★ இன்று (03.07.2014) வியாழக்கிழமை மாலை 4 மணிமுதல் 6 மணிவரை பிரபல இசைக் கலைஞர்கள் பங்குபற்றும் நாத சமர்ப்பணம் இடம்பெறும்.

★ நாளை (04.07.2014) இந்திய, ஈழத்து புகழ்பெற்ற பல் தவில் நாதஸ்வர வித்துவான்கள் சங்கமிக்கும் நாதஸ்வரக் கச்சேரி இடம்பெறும்.

OHM TV TAMIL கும்பாபிஷேக நிகழ்வை Dan தமிழ் ஒளியின் அலைவரிசையான ஓம் T.V யினூடாக காலை 8 மணி-11 மணிவரை நேரடி ஒளிபரப்பு இடம்பெறும்.

தினமும் மதியம், இரவு விசேட மாகேஸ்வரபூசை இடம்பெறும்.

★ SivanT.V.com ஊடாக நேரலையாகவும் காலை 8-11 மணிவரை புலம் பெயர்ந்த உறவுகள் கண்டுகளிக்கலாம்.

(C/13867)(10.6.3)

**05.07.2014 இந்தியப் புகழ் பெற்ற பாடகர்களின் இன்னிசைக் கச்சேரியும் இடம்பெறும்**

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

விழா சிறப்புற வாழ்த்துபவர்கள்:

**குமரன் கட்டடப்பொருள் விற்பனையாளர்**
கல், மணல், சிமெந்து, கம்பி ஆகியவற்றை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.
கந்தசாமி கோயிலடி, இணுவில் மேற்கு, இணுவில்.
T.P: 077 400 2263, 077 175 4667, 021 790 4672

**அம்பாள் சேர்விஸ் ஸ்டேசன்**
சகல விதமான வாகனங்களும், சேர்விஸ் செய்து கொடுக்கப்படும்.
K.K.S. வீதி, மருதனார்மடம்.
Tel:0777 872 322

**pb Mobile Phone Shop**
No.38 1/1, K.K.S. Road, Chunnakam
021 454 5135, 077 663 6619

**தேவை**

யாழ். நகரில் புடைவைக் கடைக்கு ஆள் தேவை. பழக விரும்புபவர்கள் அல்லது அனுபவமுள்ளவர்களும் தொடர்பு கொள்ளவும் (ஆண்கள் மட்டும்) 0773086894

**மிக குறைந்த விமான கட்டணங்கள்**

| | | |
|---|---|---|
| கொழும்பு–டுபாய் | –19000 | O/W |
| கொழும்பு–சென்னை | –21900 | RTN |
| கொழும்பு–திருச்சி | –22400 | RTN |
| கொழும்பு–டோகா | –26000 | O/W |
| கொழும்பு–மலேசியா | –30000 | RTN |
| கொழும்பு–சிங்கப்பூர் | –30200 | RTN |
| கொழும்பு–பிரான்ஸ் | –45500 | O/W |
| கொழும்பு–லண்டன் | –45400 | O/W |
| கொழும்பு–ஜேர்மனி | – 71500 | RTN |
| கொழும்பு–சுவிஸ் | –83500 | RTN |
| கொழும்பு–கனடா | –105700 | o/w |

வீட்டில் இருந்தவாறே பெற்றுக்கொள்ளலாம்

யாழ் நகரில் நம்பிக்கையான பாதுகாப்பான 24 மணித்தியால சேவை வழங்குனர்

**Nation Popular Travels & Tours**

#128, Brown Road, Jaffna
128.பிறவுண் வீதி யாழ்ப்பாணம்
0114375357, 0773083820
**0214 920 920**
நீங்கள் பறந்து செல்ல நாங்கள் சிறகுகளாகின்றோம்


# இலங்கை புகலிடக் கோரிக்கையாளர் குறித்து கருத்துக்கூற ஆஸி. மறுப்பு



இலங்கை புகலிடக் கோரிக் கையாளர் படகுகள் குறித்து கருத்து வெளியிட முடியாது என்று ஆஸ்திரேலிய பிரதமர் டோனி அப்போட் தெரிவித் துள்ளார்.

இலங்கைப் புகலிடக் கோரிக் கையாளர் படகுகள் ஆஸ்திரேலிய கடற்பரப்பைச் சென்றடைந்ததாகவும், அங்கிருந்து அவை திருப்பி அனுப்பி வைக்கப்பட்டதாகவும் புகலிடக் கோரிக்கையாளர் உரிமை அமைப்புக்கள் தெரிவித்துள்ளன.

எனினும், இந்த விவகாரம் குறித்து கருத்துக்கள் எதனையும் வெளியிட முடியாது என்று பிரதமர் தெரிவித்துள்ளார்.

புகலிடக் கோரிக்கையாளர் படகுகளைத் தடுக்கும் தமது கொள்கை வெற்றியளித்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். கடந்த ஆறு மாத காலமாக புகலிடக் கோரிக்கையாளர் படகுகள் ஆஸ்திரேலியாவுக் குள் பிரவேசிக்கவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

கிறிஸ்மஸ் தீவுகளுக்கு அருகாமையில் இலங்கை புகலிடக் கோரிக் கையாளர் படகுகள் மீட்கப்பட்டதாக வெளியான செய்திகள் குறித்து எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கப்போவதில்லை என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைத் தமிழர்கள் 153 பேரைக் கொண்ட படகு ஒன்றும், 50 புகலிடக் கோரிக்கையாளர்களைக் கொண்ட படகு ஒன்றும் கிறிஸ்மஸ் தீவுகளை அண்டிய கடற்பரப்பை சென்றடைந்ததாகவும், படகு ஒன்று பழுதடைந்திருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. (வ)


அருள்மிகு புதுவையூர்

**கோம்பாவில் நாகதம்பிரான் ஆலய வருடாந்த பொங்கல் விழா விஞ்ஞாபனம்**

**நாகதம்பிரான் பக்த அடியார்களே!**

புதுக்குடியிருப்பு கோம்பாவில் பதிதனில் வீற்றிருந்து அகில உலகத்தையும் ஆளுகின்ற, பக்தர்கள் கேட்கின்ற வரங்களை வாரி வழங்குன்ற நாகதம் பிரா னின் வருடாந்த பொங்கல் விழா நடைபெற திருவருள் கைகூடியுள்ளது.

நிகழும் மங்களகரமான ஜய வருடம் ஆனி உத்தரம் வெள்ளிக்கிழமை (04.07.2014) வரும் சித்தமிர்த யோகமும் சப்தமிதிதியும் கூடிய சுப வேளையில் எம்பிரா னுக்கு பொங்கல் விழா நடைபெறும். நாகதம்பிரான் அடியவர்கள் ஆசார சீலர்களாக வருகைதந்து பொங்கல் விழாவில் கலந்துகொண்டு நாகதம் பிரானின் பேரருளைப் பெற்று இம்மண்ணில் நல்ல வண்ணம் வாழ் வீர்களாக.

27.06.2014 வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணிக்கு நாகதம்பிரானுக்கு விளக்கு வைத்தலும் விசேட பூசையும் இடம்பெறும்.

தொடர்ந்து வரும் ஒவ்வொரு நாளும் நித்திய பூசைகள் நடைபெறும்.

04.07.2014 வெள்ளிக்கிழமை காலை 8.00மணிக்கு விசேட அபிஷேக ஆராதனைகளுடன் கூடிய பூசை இடம்பெறும்.

அதனைத் தொடர்ந்து பகல் 12.00 மணிக்கு விசேட பூசைகள் இடம்பெறும்.

**இரவு நடைபெறும் பூசை விபரம்**

1. பண்டமெடுத்தல் - இரவு 7.00 மணிக்கு 2. கச்சை நேர்தல் - இரவு 9.00 மணிக்கு
3. வளந்து வைத்தல் இரவு 9.30 மணிக்கு
4. 05.07.2014 அதிகாலை 5.00 மணிக்கு அலங்கார பூசை இடம்பெறும்.

**அனைவரும் வருக**
**நாகதம்பிரானின் அருளைப் பெறுக!**

**பூசகர்:**
நாகரத்தினம் தட்சணாமூர்த்தி (மகேந்திரம்)
நாகரத்தினம் கணேசமூர்த்தி (உதவிப் பூசகர்)

புதுவையூர் நாகதம்பிரான் ஆலய
பரிபாலனசபை
கோம்பாவில், மு/புதுக்குடியிருப்பு



**கருத்தரங்கு**

**தமிழ்** க.பொ.த. (உயர்தரம்)

திரு.ந.சத்தியவேந்தன் B.A. (Hons) M.Phil.

காலம்: 08.07.2014, 23.07.2014, 24.07.2014
காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணி வரை
இடம்: பொருளியற் கல்லூரி, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.

- வெளி மாணவர்களும் பங்குபற்றலாம்.
- உங்கள் அனுமதிகளை யாழ்ப்பாணப் பொருளியற் கல்லூரியில் பெற்றுக் கொள்ளவும்

(சி-14882)

A/L தமிழ்
Seminar
தமிழிந்திரன்
பிரதான விடைகள்
துரித மீட்டல் I, II
0775478159
வெள்ளி
2.30 - 5.10
Scince Hall
யாழ்.


## காசோலை மோசடி நபரைத் தேடி வலைவீச்சு



தென்மராட்சி, ஜூலை 3

போலியான காசோலையைக் கொடுத்து வர்த்தக நிலையம் ஒன்றில் பொருள்களைப் பெற்ற நபரை கொடிகாமம் பொலிஸார் தேடி வருகின்றனர்.

வரணிப் பகுதியில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்றில் ஒரு லட்சத்து 89 ஆயிரத்து 530 ரூபா பெறுமதியான பொருள்களைப் பெற்றுக் கொண்டு ஒரு லட்சத்து 32 ஆயிரத்து 741 ரூபாவுக்கான காசோலையைக் கையளித்து விட்டுச் சென்றுள்ளார்.

குறித்த வர்த்தகர் வங்கியில் காசோலையை வைப்புச் செய்த போது மேற்படி கணக்கில் பணம் இல்லை என்று வங்கியில் தெரிவிக்கப்பட்டு காசோலை திருப்பி அனுப்பப்பட்டுள்ளது.

இது தொடர்பாக குறித்த வர்த்தகர் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததையடுத்து இது தொடர்பாக சாவகச்சேரி நீதிமன்றில் பொலிஸார் அறிக்கை தாக்கல் செய்துள்ளனர். (வ-9)


**SPOKEN ENGLISH**
**WITH DIPLOMA CERTIFICATE**

எந்தவொரு குழந்தையும் இலக்கணம் படித்துவிட்டு மொழியைப்பேசுவதில்லை!
மற்றவர்கள் பேசுவதை அவதானித்தே தானும் பேசக்கற்றுக்கொள்கிறது!

உரையாடற்பயிற்சியின் மூலம் ஆங்கிலத்தைப் பழக்கப்படுத்தும் SAAMSON இன் புதிய பயிற்சிநெறியில் அரச தனியார் ஊழியர்கள், இளைஞர் யுவதிகள் தொழில் புரிவோர் மற்றும் வெளிநாடுசெல்வோர் இணையமுடியும்.

சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் 05.07.2014 சனிக்கிழமை

1.காலை 08.00-10.00 3.மு.ப 01.00-03.00
2.காலை 10.00-12.00 4.மாலை 03.00-05.00

அடிப்படை ஆங்கில அறிவற்றவர்களும் இப்பயிற்சியில் இணைவதன் மூலம் மூன்றே மாதங்களில் தமிழ்போல சரளமாக ஆங்கிலம் பேச முடியும்!

ஒவ்வொரு பிரிவிலும் 20 பேர் மட்டுமே அனுமதிக்கப்படுவர்.

SAAMSON Language School 179,ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர். 077 621 4567 021 320 3313


## மரண அறிவித்தல்

### கந்தசாமி பரநிருபசிங்கம் (கும்பர்)



வேலணை மேற்கு 6ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் 89, ஒட்டுமட வீதி, வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி பரநிருபசிங்கம் (முன்னாள் உரிமையாளர்-ஞானாஸ் ஸ்ரோஸ் மேற்கு மார்க்கற், யாழ்ப்பாணம்) நேற்று (02.07.2014) புதன்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தசாமி-செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான பசுபதிப்பிள்ளை- லெட்சுமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், ரம்மணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற ரவிச்சந்திரன் மற்றும் குணபூசணி (குணா), வானதி (குமுதம்-லண்டன்), காலஞ்சென்ற பாலச்சந்திரன் மற்றும் நந்தினி (சாந்தி), நளாயினி (மேகலா-கனடா), ஞானச்சந்திரன் (கண்ணன்-லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவகடாட்சம் (சிவம்-லக்ஷிகா அன்பளிப்பகம்), பாலகிருஷ்ணன் (லண்டன்), ரஞ்சரெத்தினம் (ரஞ்சன்- ஞானாஸ் ஸ்ரோஸ், மேற்கு மார்க்கற்), ஸ்ரீதரன் (கனடா), சந்தியா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனும், லக்ஷிகா, அனோஜன், சாருஜன், திவ்யா, அகல்யா, விதுஷா, பவித்திரா, அக்ஷயா, கிரிஸ், சியாம், விகாஷ், பௌவியா, ரோகில் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற கமலாம்பிகை மற்றும் மகாலட்சுமி, சிவபாக்கியம், விஜயலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான தில்லைநாயகம், ராசரெத்தினம், திருஞானசம்பந்தர் மற்றும் திருச்செல்வம், காலஞ்சென்ற தெய்வேந்திரம் மற் றும் பாசுபதம் காலஞ்சென்ற காசிலிங்கம் மற்றும் பன்னீர்ச் செல்வம், பன்னீர்ச் செல்வி, அருட்செல்வி ஆகியோரின் அன்பு மைத்துனரும், செல்வம், புஷ்ப ராணி (கனடா), மலர்மகள் (கொழும்பு), சண்முகவடிவேல், யோகானந்தன் ஆகியோரின் அன்புச் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (06.07.2014) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக வேலணை அம்பலவி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

89, ஒட்டுமட வீதி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
T.P: 021 222 8530

(49475)(10)

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி பூமணி செல்லப்பா



இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பூமணி செல்லப்பா நேற்று (02.07.20[illegible]) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சண்முகம்-லக்சுமி தம்பதியரின் மகளும், காலஞ்சென்ற சின்னத்தம்பி-இளையபிள்ளை தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற செல்லப்பாவின் (தாமோதர ஸ்ரோர்ஸ்-மன்னார்) அன்பு மனைவியும், தளையசிங்கம் (கனடா), ஜெயராணி, ஜெயராசா (கனடா), ஜெகதீஸ்வரி, ஜெகதீஸ்வரன் (கனடா), ஜெயக்குமாரன் (கனடா), ஜெயக்குமாரி ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்ற கமலேஸ்வரன் (ஓய்வுபெற்ற தபாலதிபர்) மற்றும் சத்தியபாமா (கனடா), கிருஷ்ண லீலா (கனடா), இராமநாதன் (இளைப்பாறிய மாநகர சபை உத்தியோகத்தர்), வாசுகி (கனடா), சுமன்கலா (கனடா), சிவகுமாரன் (முகாமையாளர் ஆசிரியவள நிலையம்) ஆகியோரின் அன்பு மாமியும், காலஞ்சென்ற ச.முத்துலிங்கம் (உடுவில் கிராமசபைத் தலைவர்), கணேசு ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஜெய்சீலன், பானுரேகா (சுவிஸ்), மோகனகாந், கோகிலா (ஆஸ்திரேலியா), கமலகாந்தன், பரமேஸ்வரி (ஆஸ்திரேலியா), பிரசாந், பிருந்தி (கனடா), ஜீவன் (கனடா), சுஜிதா (கனடா), அஜந்தன் (கனடா), சாரங்கன் (கனடா), கல்பனா (கனடா), விஷ்ணு (கனடா), கார்த்திகா (கனடா), நிமல் (கனடா), தர்ஷன், சிவலவன் (இணுவில்) ஆகியோரின் அன்பு பேர்த்தியும் அக்ஷரா, அக்ஷரன் (ஆஸ்திரேலியா), மஞ்சரி (கனடா) ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இணுவில் மேற்கு. (49486)(10) தகவல்: பிள்ளைகள்.

### பாக்கியம் சுப்பிரமணியம்



புத்தூரைப் பிறப்பிடமாகவும் உசனை வசிப்பிடமாகவும் கொண்ட பாக்கியம் சுப்பிரமணியம் நேற்று (02.07.2014) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரை - தங்கம்மா தம்பதியரின் மகளும் காலஞ்சென்ற இராமலிங்கம் - ஆச்சிமுத்து தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற சுப்பிரமணியத்தின் (நெல் சந்தைப்படுத்தும் சபை) அன்பு மனைவியும் இரவீந்திரன், சுமந்திரன் (லண்டன்), காலஞ் சென்றவர்களான தஜேந்திரன், சிறிதரன் மற்றும் திருச்சோதி, பிரகலாநிதி, பகீரதன் ஆகியோரின் அன்புத் தாயும் பாக்கியம், மகேந்திரன், பிரபாகரன், லோசனா ஆகியோரின் அன்பு மாமியும் காலஞ்சென்றவர்களான கண்மணி, சிவராசா மற்றும் நடராசா ஆகியோரின் அன்பு மைத்துனியும் கார்த்திகா (கனடா), கீர்த்திகா (லண்டன்), தர்சிகா (கனடா), சுவிதா (கனடா), கிஷாந் (கனடா), கோமதன், நிந்துஜன், நிதர்சன், நிதர்சனா, நிருபனா, கார்த்திக், அபிராமி, சிவானி, வைஷ்ணவி, பிரவீனா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் அரவிந், அஸ்விதா, அதுஷன், அதுஷனா, ரஜித்தா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.07.2014) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் முற்பகல் 11 மணியளவில் நடைபெற்று உசன் ஈச்சங்காட்டு இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

தகவல்: குடும்பத்தினர்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 03.07.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.